# அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர்

## நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

திருவள்ளுவராண்டு 2031 ஆவணி

தமிழ்ப் பல்கலைக்கழகம்
வாகையூர்
தஞ்சாவூர் 613 005

# அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

(திருவள்ளுவராண்டு, ஆவணி, *8, 2031*)



என் தந்தை நல்ல விவசாயி; சிறந்த வித்வான்; கவி எழுதும்
ஆற்றல் பெற்ற புலவர்.
அம்மா! என்று வாய் நிறைய அழைத்து அந்த
அழைப்பிலே இன்ப சுகம் கண்டு அமைதி தவழும்
பெரும் குடும்பத்தைக் கட்டிக் காக்கும் வலிமையை, உள்ள
வளத்தை எமக்களித்த எங்கள் அருமருந்தன்ன தாய்!

- கலைஞர்

# அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர்
## நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

1. நற்றமிழ்க் காவலர் நாவலர் பாரதியார்
   முனைவர் ச. சாம்பசிவனார்

2. தமிழாராய்ச்சியின் வளர்ச்சி
   முனைவர் தொ. பரமசிவன்

நாள்

24 - 08 - 2000


தமிழ்ப் பல்கலைக்கழகம்
வாகையூர், தஞ்சாவூர் 613 005

ISBN : 81-7090-273-8

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : **213**

திருவள்ளுவராண்டு 2031 ஆவணி - ஆகஸ்ட் 2000

நூல் : அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரூ. **35/-**

படிகள் : 500

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர்.

## தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005 - இந்தியா

முனைவர் கதிர். மகாதேவன்
துணைவேந்தர்


*"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்"*

*அய்யன் திருவள்ளுவர்*

*தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப் பெற்ற "**அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் நினைவு அறக்கட்டளைப் பொழிவுகள்**", பொழிவு நிகழும் இன்றே (24. 08. 2000) சிறு நூல வடிவில் வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.*

*......தூய நினைவுகளைப் போற்றுவதில் தலைசிறந்த வழி, "நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை" நிறுவுவது ஆகும்......*

*தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பெற்ற அறக்கட்டளைகள் பல, நம் அரசின் நிதி நல்கையால் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளன. இந்நிலையில் இவ்அறக்கட்டளைப் பொழிவு நூலாக்கம் பெற்றது '**காவிரி ஆறே மரம் நட்டு வளமாக்கியது**' போலாம்.*

*மாத்தமிழ் வீரங்காக்க வீறுகொண்டு எழுந்து அடலேறாய்த் திகழ்ந்தவர் நற்றமிழ்க் காவலர் நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆவர். அவர் தமிழ் நாட்டிற்கும், தமிழினத்திற்கும் ஆற்றிய பணிகள் வரலாற்றில் இடம்பெற்றவை: முதற் பொழிவின் சாரத்தை ஆக்கியவர் முனைவர் ச. சாம்பசிவனார்.*

இரண்டாம் பொழிவு நிகழ்த்தும் பேராசிரியர் முனைவர் தொ. பரமசிவன் அவர்கள், "தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியை" இற்றெனச் சுட்டிக் காட்டிச் செல்கிறார்.

இப்பொழிவுகளின் செல்நெறி, தமிழ் ஆர்வலர்களின் சிந்தனைகளைக் கிளரச் செய்யும் என்பதில் ஐயமில்லை! பொழிவுகளைச் செவிமடுத்தும், நூலினை வாங்கிப் படித்தும் பயன்பெறுவார்களாக!....

கதிர் மகாதேவன்

தஞ்சாவூர்

*24 - 08 - 2000*

*(கதிர். மகாதேவன்)*

துணைவேந்தர்

# நற்றமிழ்க் காவலர் நாவலர் பாரதியார்

## அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர்
### அறக்கட்டளைச் சொற்பொழிவு

நாள்

திருவள்ளுவராண்டு 2031 ஆவணி 8
24 - 08 - 2000
முற்பகல் 11.00 மணி

முனைவர் ச. சாம்பசிவனார்
ஆசிரியர்
'தமிழ் மாருதம்' திங்களிதழ்
மதுரை 625 001

# நற்றமிழ்க் காவலர் நாவலர் பாரதியார்

*அறக்கட்டளை நிறுவியோர்க்கு வாழ்த்து !*

"தந்தையும் தாயு மின்றித் தரணியில் பிறப்பு இல்லை!
இந்தநற் கருத்துக் கொண்டு இவர்களின் நினைவா லின்று
அந்தமில் புகழ்கொள் ***முத்து வேலரஞ் சகத்தின்*** பேர்தாம்
சந்ததம் நிலைக்கச் செய்த சால்புநற் ***கலைஞர்*** வாழ்க!"

*முன்னுரை*

"**க**ளை எடுப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், புதிய செடிகளையும் தோற்றுவிப்பதுதான் தோட்டத்திற்குப் பெருமையைத் தரும். தமிழ்க்கழனியில் தவறிமுளைத்த களைகளைக் கல்லி எறியும் பணியாகிய அரிய ஆராய்ச்சி நூல்கள் எழுதியதோடு, புதிய நூல்கள் படைத்தளித்துத் தமிழ் இலக்கிய உலகினுக்குத் தம்மால் ஆன தொண்டினை ஆற்றியுள்ளார்.

"அவரோடு நாம் பல நேரங்களில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தது உண்மை. அந்த நேரங்களில் எல்லாம் அவருடைய புலமைத் திறமையையும், பண்பின் மேம்பாட்டையும் கண்டு வியந்து பாராட்டியது உண்டு! கருத்து வேறுபாடு என்பது நாகரிகம் விளைத்துள்ள நல்ல முறை. அப்படி ஏற்படும் கருத்து வேறுபாட்டைத் தாங்கிக் கொள்ளும் முறைதான் நாகரிகத்தின் அளவுகோல் எனலாம். அந்த நாகரிகம், நனி நிரம்பி வழிந்தது பாரதியாரிடம்! . .

*தமிழ்மொழிக்கு* ஆபத்து, ***தமிழர்க்குக்*** கேடு, *தமிழ்நாட்டுக்கு* ஆபத்து என்ற நிலைமைகள் உருவான போது வீறு கொண்டு எழும் வேங்கை போல் களம்நோக்கி எழும் வீரராகத்தான் அவர் விளங்கி வந்தார்! இன்று சிலர் ஏதேதோ போர்வைகளை இழுத்து மூடிக்கொண்டு அதற்குள் ஒடுங்கி வாழ்பவர் போல் வாழ்ந்தவரல்லர் அவர்! அந்த முறையில் '***தமிழ்காத்த வீரன்***' என்ற முறையில், அவர் மறைவு, தமிழகத்திற்குப் பேரிழப்பு என்பதிலே ஐயம் இல்லை!

"புத்துலகக் கருத்துக்களைக் கொண்டதோர் மாணாக்கர் படையை அவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தபோது படைத்தளித்திருக்கின்றார்!

"இந்தி, இந்த நாட்டுக்கு ஆகாத மொழி - அது நமக்குக் கூடாது - வேண்டாம் என்று தமிழகத்தின் மூலை முடுக்குகளில் முழங்கினார் அவர்!" - இவ்வாறு, 'நற்றமிழ்க் காவலர்' நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் மறைந்த போது அவர்தம் தொண்டினைப் பற்றிப் புகழ்ந்து எழுதியவர், பேரறிஞர் அண்ணா ஆவர்!

அண்ணாவின் இக்கூற்றால், நாவலர் பாரதியார், *தமிழ்நாட்டுக்கும், தமிழ் இனத்துக்கும், தமிழ் மொழிக்கும்* செய்த தொண்டுகள் பலவாம் எனும் உண்மை போதரும்!

### *வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்*

நாவலர் பாரதியார், ***27-7-1879*** இல், எட்டயபுரத்தில் பிறந்தார், பெற்றோர் சுப்பிரமணிய நாயகர் என்ற எட்டப்ப பிள்ளை - முத்தம்மாள். தொடக்கக்கல்வி, எட்டயபுரம் பின்னர் நெல்லை சர்ச் மிசன் உயர்நிலைப்பள்ளி; அடுத்துச் சென்னை கிறித்தவக் கல்லூரி; 'இளங்கலை' (பி.ஏ) முடித்தபின் சட்டக் கல்லூரியில் பயின்று 'பி.எல்.' பட்டம் பெற்றார். சென்னை அரசு அலுவலகத்தில் சில காலம் எழுத்தர் பணியிலமர்ந்தவர், சட்டப் படிப்புத் தேர்வு முடிவு வெளியானதும், தூத்துக்குடி சென்று தாமாகவே வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கி நடத்தலானார். வ.உ.சி.யுடன் சேர்ந்து, இந்திய நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டார். ***1920***இல், மதுரைக்கு வந்து, நிலையாகத் தங்கித் தமது தொழிலைச் சிறப்பாக நடத்திப் பொருளும், பேரும், புகழும் பெற்றார்!. ***1933*** முதல் ***1938*** வரை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பொறுப்பிலிருந்து, தமிழ்காக்கும் மாணவர் பலரை உருவாக்கினார். அரிய ஆராய்ச்சி நூல்கள் பல எழுதினார். மொழிப் போரில் முன்னின்றார். இவருக்கு மனைவியர் இருவர். முதலாமவர் மீனாட்சி என்னும் பெயரினர். இரண்டாமவர் 'வசுமதி அம்மாள்' என்பவர். இவர்கள் பெற்ற மக்கள் ஐவர். முதலாமவர்க்கு ஆடவர் இருவரும் பெண் ஒருவருமாக மூவர்; இரண்டாமவர்க்குப் பெண்டிர் இருவர்! 'நாடு, மொழி, இனம்' எனும் இம்மூன்றுக்குமாக உழைத்துத் தாம் வாழ்ந்த காலத்திலேயே, 'நாவலர், கணக்காயர், டாக்டர்' எனும் முப்பெரும் பட்டங்கள் பெற்றுச் சிறந்தோங்கிய நாவலர் பாரதியார், பசுமலையில், தம் 80ஆம் வயது நிறைவுற்ற சில மாதங்களில் - அதாவது 14-12-1959இல் இயற்கை எய்தினார்!

*நாட்டுத் தொண்டு :*

நாவலர் பாரதியார் வாழ்ந்த காலம்: 1879 - 1959. இவரது காலத்தில் வாழ்ந்த ஏனைய புலவர் பெருமக்களின் தொண்டுகளையும், இவர்தம் தொண்டுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், சில நுட்பமான உயர்வுகளைக் காண்டல் கூடும். "அநவரத விநாயகம் பிள்ளை, அரசஞ் சண்முகனார், அருணாசலக் கவிராயர், ஆலால சுந்தரம் பிள்ளை, மு. இராகவையங்கார், ரா. இராகவையங்கார், திரு. வி.க., டி.கே. சிதம்பரநாத முதலியார், சி.சுப்பிரமணிய பாரதியார், எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை, மறைமலையடிகளார், விபுலானந்த அடிகள், ந.மு. வேங்கடசாமி நாட்டார், எஸ். வையாபுரிப்பிள்ளை" என ஏறத்தாழ ஐம்பத்திருவர் இக்கால கட்டத்தில் வாழ்ந்த மிகப்பேரறிஞர்கள்.[2] இவர்கள், ஏதேனும் ஒரு வகையில், அல்லது சில வகைகளில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்கள். நாவலர் பாரதியார் எந்தெந்த வகையிலெல்லாம் நாட்டுக்கும் மொழிக்கும் நம்இனத்துக்கும் தொண்டு செய்தார் என்று அறியும்போது, இவரது பெருமை பன்மடங்காக மேலோங்கி நிற்கின்றது.

1. இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டமை;
2. தமிழ்இன உயர்வுக்காக உழைத்தமை;
3. புதிய ஆராய்ச்சி நூல்களைப் படைத்தல்; படைப்பிலக்கியங்கள் உருவாக்குதல்; பழந்தமிழ் இலக்கண

நூலாகிய தொலகாபபியததிற்கு உரைகாண்டல; மாநாடுகள ஆணடு விழாககள முதலானவறறில தலைமைதாங்கியும் சொறபொழிவாறறியும் தமிழுணர்ச்சி ஊட்டல்; மொழி காககும் போரில் முன்னிற்றல். பேராசிரியராக இருநது, தமிழுணர்வுள்ள மாணவாகளை உருவாககுதல்; தமிழ்ப புலவர்களைப போற்றியும் பொருள் கொடுத்தும் பாராட்டுதல. 'தமிழ் மரபு இது, ஆரிய மரபு இது' எனத் துணிநது நிலைநாட்டுதல, யாா எது கூறினும் மெயபபொருள் காணபதே நோக்கமாகக கொள்ளல்.

எனும் பலவேறு வகைகளில - பலவேறு நிலைகளில தொண்டு செய்த சிறபபு, நாவலர் பாரதியாருககு உண்டு![1]

இவர், எட்டயபுரத்து அரசியாரால வளாககப பெற்றவர். எனினும் இவரது 'உள்ளத்தே, நாட்டுப்பறறுக கால் கொண்டிருந்தது என்பதை இளமைபபருவ நிகழ்ச்சி ஒன்றால் அறியலாம் சென்னையில் சட்டததேர்வு எழுதிய பின், அதன் முடிவு வரும்வரை வீணே கழிகக வேண்டாம் என்று எண்ணியவர், அரசு அலுவலகம ஒன்றில் எழுததர் பணியை மேறகொண்டார். ஆஙகே, 'இநதியருககு ஒரு நீதி, ஆங்கிலேயருககு ஒரு நீதி' எனறிருந்தமை கண்டு, அஞ்சாது அதனை எதிர்த்து வெறறி கண்டார்![3]

"நாம் ஏன் யமதவருககு அடிமையானோம்?" என்பதற்கான காரணததை நாவலர் பாரதியார், பினவருமாறு குறிப்பிடுவர்

"நம பாரத பூமியில், ஆரிய வர்த்தமான வடபாதியில் பிறப்பால் உயர்வு, தாழவு வற்புறுததப பெற்ற சாதி வகுப்புகள் தனி வேறுரிமை வகை வகிதது வநததால, ஐம்பதற்கு மேலான சிற்றரசுகளாகப பிளவுபட்டுத் தம்முள் ஓயாமல் ஒன்றையொனறு நலிந்தும், தனிச் சிறு நாடுகளிலும சமுதாய மக்கள எல்லாரும சரி உரிமை வழங்கப் பெறாமல், ஒறறுமை இழந்து, பிளவுபட்டு மெலிந்தும, வந்தவருககு அடிமைகளாக நேர்ந்தது!"[4]

நாவலர் பாரதியார் 1905 ஆம ஆண்டில் தூத்துககுடியில் வழககறிஞா தொழிலைத தொடங்கி நடததி வநதாா. அப்போது, 'கபபலோட்டிய தமிழன' வ.உ.சிதம்பரனாருடன் நட்புக் கொள்ளும அரிய வாயப்புககிடடது அதற்கு முனபே,

அதாவது 1904 இலிருந்தே காங்கிரசுவாதியாக இருந்தவராதலின், வ.உ.சியுடன் சேர்ந்து, அவர் பேசும் அரசியற கூட்டங்களிலெல்லாம் கலந்து கொண்டு வீரவுரையாற்றித் தமிழ் மக்களிடையே நாட்டு விடுதலை உணர்ச்சியை உண்டு பண்ணினார் மேலும் இவர், வ.உ.சி தொடங்கிய கப்பல கம்பெனியின் ஆட்சிப பொறுப்பை ஏற்று நடத்தினாா கப்பல்களைப பற்றிப் பேச்சு வரும் போதெலலாம் வ.உ.சி., தம நணபர்களிடம, "என்னிடம எஸ. எஸ் (அதாவது ஸ்டீம் ஷிப்) பாரதி எனற தமிழ்ககபபலும் உண்டே!" என்று கூறுவது வழக்கம்

"கப்பல் கம்பெனியை விட்டு விலகினால் பெரியதோா அரசாங்கப பதவி தருவோம்" என்று ஆங்கிலேய அரசினர் வற்புறுததியும் நாவலர் பாரதியாா அதனை ஏற்றுக கொளளவில்லை. இதனால் இவரது பெயர், 'அரசாங்க ஐயப்பட்டியலி'ல் இடம் பெற்றிருந்தது! இவா நெல்லை, மதுரை ஆகிய நகரஙகளில 'காங்கிரசு மாநாடுகள்' நடத்தினார். 1926இல் சி.ஆர்.தாசை மதுரைக்கு வரவழைததுப் பேசச செய்தாா அணணல காந்தியடிகளை முதன்முதல தூததுககுடிககு வரவழைத்துப பேசச் செய்தாா: அவ்வாறே அணணாமலை நகருககும் வரவழைததுப பொருள திரட்டித தந்தார். அப்போது, தம் பெண் மககளான மீனாட்சி, லலிதா இவ்விருவா கைகளிலும் தங்க வளையலகள் அணிவிதது அவறறைக் காந்தியடிகளிடம கழற்றிக கொடுகக ஏற்பாடு செய்திருந்தார்! அவர்களும் அவ்வாறே மேடைமீதேறிக கொடுக்க, "இவர்கள இருவரும நாவலா பாரதியாரின் மக்கள்" என்று அறிநத காந்தியடிகள மகிழநது பாராட்டினாா.

காநதியடிகள் தொடங்கிய உப்புச் சத்தியாக்கிரகததின போது நாவலர் பாரதியார் நன்கொடை திரட்டித்தந்ததோடு, திங்கள்தோறும் நூறு ரூபாய் அனுபபியும் வந்தார்

காந்தியடிகள்பால பெருமதிபபுக கொண்டிருந்தாா நாவலா பாரதியார் என்பதற்குப் பின்வரும் சான்றினைக் காட்டலாம.

"துணையின்றி மெலிந்துள்ளோம்: வலியுமிலலேமாகிய நம்மவருக்கு அறத் துணையின்றி ஆககவழி வேறுமுணடோ? விடுதலையை(மோட்சத்தை)த் தரும்

கைம்மாறு தருவதாயினும், 'பிறர்க்கின்னா செய்யாமையே மாசற்றார் கோள்' என்று வற்புறுத்திய தமிழ்வேதம் பன்னூறாண்டுகள் பயின்றுள தமிழகத்தில் அப்படிப்பட்ட தமிழ்ச்சுருதி மருந்தையே *காந்தியடிகள்* நம்மவருக்கு மீட்டு மூட்ட முன்வந்துள்ளார். 'எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம் மாணா செய்யாமை தலை' யறமாக நாம் கையாள வேண்டுமென்று *அடிகள்* கூறின், அது, பண்டைத் தமிழ் மூதறமா மீதெயென விரைந்து மேற்கொள்ளாமல் மயங்குவானேன்?" [5]

இவ்வாறு **1931**ஆம் ஆண்டில், 'பாரதி' எனும் இதழில் எழுதியுள்ளார் இவர்!

ஆனால், இவ்வாறு பெருமைப்பட எழுதிய நாவலர் பாரதியார், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது,

> "நீங்கள் நாட்டிற்கு ஒரு தலைவராய் இருக்கலாம்; ஆனால் தமிழ்மொழிக்குத் தலைவராக முடியுமா?" [6]

என்று காந்தியடிகளைத் தட்டிக்கேட்ட துணிச்சலுமுடையவர்.

வ.உ.சி., சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீது, ஆங்கிலேயராட்சி, 'இராசத்துவேச வழக்கு'ப் போட்டபோது, அவர்களை விடுவிக்க வாதாடிய வழக்கறிஞர்களில் நாவலர் பாரதியாரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சி.ஆர்.தாசு, சரோசினிதேவி முதலானோர் பேசும் ஆங்கிலப் பேச்சினை அழகானதமிழில் மொழிபெயர்த்துத் தமழர்களின் பாராட்டும் பெற்றவர் இவர்! இதுபற்றிப் 'பாரதி நாராணசாமி' கூறுவதாவது:

> "தமிழ்ப் பிரசங்கம் புரியக் கற்கும் மாணவர்கள், இவரது இனிய பிரசங்கங்களைக் கேட்டுப் பழக வேண்டும். தமிழன்பர்கள் இவரது ஆராய்ச்சிகளை, இவரது வாயிலாகச் செவிமடுக்க வேண்டும்; இந்தியக் குயில் சரோஜினி தேவியார் ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்யும்பொழுது பாரதியாரது தமிழ்மொழி பெயர்ப்பைப் பொது ஜனங்கள் கேட்க வேண்டும்; ஆனந்திக்க வேண்டும் இவர்! பாஷாபிமானி மட்டுமல்ல; உயர்ந்த தேசாபிமானி "தூத்துக்குடி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியில் பெரிதும்

உழைத்தவா:

அக்காலத்தில், தமிழ் மக்களுக்குச் சுதந்திர உணர்ச்சியைத் தூண்ட வந்த அரசியல் தலைவர்கள் கூடப் பொது மேடைகளில், ஆங்கிலத்தில்தான் பேசியுள்ளனர். ஆனால் நாவலர் பாரதியார் பேன்ற ஒருசிலர், தமிழிற்பேசி, மக்களிடையே நாட்டுப்பற்றைத் தூண்டி விட்டனர். இதற்கொரு சான்று காட்டலாம்.

சத்தியாக்கிரக இயக்கத்தை வலுப்படுத்திய காந்தியடிகளுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் ஒன்று 20-3-1919 இல், சென்னைத் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடைபெற்றது. பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் திரண்டிருந்தனர். சேலம் சி.விஜயராகவாச்சாரியார் தலைமையில் சரோஜினிதேவி, டி.வி.கோபாலசாமி முதலியார், நாவலர் பாரதியார் எனப் பலரும் பேசினர். ஆனால் நாவலர் பாரதியார் ஒருவர் மட்டுமே தமிழில் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.[8]

பொதுக் கூட்டங்களில் தமிழர்களே, தங்கள் தாய்மொழியில் பேசாத இந்த அவல நிலையைக் கண்டித்து ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதுண்டு. "சென்னை மாகாணச் சங்கத்'தின் மாநாடு என்று தஞ்சையில், 20, 21-4-1918இல் கூடியது. அப்போது

> "பொதுக் கூட்டங்களில் தமிழர்கள், தாய்மொழியிலேயே பேசுதல்வேண்டும்; அயல்மொழியில் பேசுதல் கூடாது. எவரேனும் அயல்மொழியில் பேசப்புகுந்தால் அவரைத் திருத்தும் பொறுப்பைப் பொது மக்கள் ஏற்றல்வேண்டும்."[9]

எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாவலர் பாரதியார் நாற்பது ஆண்டுகளாகக் காங்கிரசுக்காரராக இருந்தவர்; ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து முழங்கியவர். அவரது பெயரை 'ஐயப்பட்டியலி'ல் வைத்திருக்க முடிந்ததே தவிர, அவரைக் கைது செய்ய இயலவில்லை. அவரது பேச்சு அத்தகைய முறையில் அமைந்திருக்கும். இவர், சிறை செல்லவில்லையே தவிர, இவரது குடும்பத்திலிருந்து, ஏழுபேர், நாட்டு விடுதலைக்காகப் போராடிச் சிறைக்குச் சென்றவர்கள் என்பது இந்திய வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால்

பொறிக்கத்தக்கது!

நாவலர் பாரதியார், பிற்காலத்தில் காங்கிரசிலிருந்து விலகிக் கொண்டார். அதற்கு இவர் கூறும் காரணம்:

"சென்ற 46 ஆண்டுகளாக நான் காங்கிரஸ் தொண்டனாக இருந்தேன் .... காங்கிரசைவிட்டு விலக நேர்ந்தது. இதற்குக் காரணம், காங்கிரஸ் புதிய போக்கிலே சென்று விடாப்பிடியுடன்சிலவற்றைச் செய் என்று வற்புறுத்தியதே - யாகும்! ..... நான், காங்கிரசில் இருந்தபோது காந்தியாருக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. காந்தியாரைச் சென்னையிலிருந்து தூத்துக்குடிவரை நான்தான் அழைத்து வந்தேன்!"[10]

இவ்வாறு இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட நாவலர் பாரதியாரைப்பற்றி எந்த அரசியல் தலைவரும் எடுத்துரைப்பதில்லை; அவர் நாட்டுக்காக உழைத்ததை அடியோடு மறந்துவிட்டனர் என்பது வருந்துதற்குரியது!

*தமிழினத் தொண்டு!*

நாவலர் பாரதியாரின் அரிய ஆராய்ச்சிகளை எழுச்சிமிக்க உரைகளைக் கேட்டுத் தமிழினம் உயர்வதற்குப் பாடுபட்டவர்கள் பலர். அவருள் அறிஞர் அண்ணாவும் ஒருவர் எனில் மிகையன்று.

"இன்று, தலைவர் பாரதியாரால் (நாவலர் பாரதியார்) தமிழ்நாடும், தன்னுணர்வாளரும் பெற்ற உதவி, ஆக்கம், எழுச்சிகளை நான் மறக்கவில்லை என்பதைக் கூறுவதுடன், இத்தகைய உணர்ச்சிகளை நாங்கள் பெற்றதே அவர் போன்றாரின் அறிவுரைகளைக் கேட்டதினால்தான்!"[11]

என்று அவரே கூறுவதுகொண்டு உணரலாம்.

நாவலர் பாரதியாரின் எண்ணம், பேச்சு, மூச்சு எல்லாமே தமிழர் நலன் பற்றியனவே!

பண்டைநாளில் தமிழர் தனியரசு நடத்தி உலகெங்கும் போற்றுமாறு வாழ்ந்தவர்கள். பிற்காலத்தே எல்லா

நிலைகளிலும் தாழ்ந்துபோயினரே என்று வருந்தும் இவர்,

"தமிழர், அக்கால உலகனைத்தும் தமைவியக்கத் தலை சிறந்து ஓங்கி வாழ்ந்தார்! பிறகதனை நெகிழவிட்ட இடையிருட்காலத்தேதான் நம்மவர் நாட்டுரிமை நாகரிக வாழ்வுகளை யிழந்து மிலேச்சருக்கடிமை யானார்!"[12]

என்கின்றார்.

தமிழர்களைத் தரக்குறைவாக யார் பேசினாலும் பொறுத்துக் கொள்ள மாட்டார் நாவலர் பாரதியார் என்பதற்கு ஈண்டு ஒன்றைச் சுட்டலாம்:

கட்டாய இந்தி எதிர்ப்பின்போது முதலமைச்சராக இருந்த மேன்மைமிகு சக்கரவர்த்தி இராசகோபாலச்சாரியார் அவர்களுக்குத் 'திறந்தமடல்' ஒன்றை அச்சிட்டு அனுப்பினார் நாவலர் பாரதியார். அதில் வரும் ஒரு சிறு பகுதி இது.

"'இந்து'ச் செய்தித்தாளில், தங்களுடைய நல்ல அறிவுரை களுக்குத் தமிழ்மக்கள் செவி சாயாது, இந்தியைக் கற்றுக் கொள்வதில் பின் வாங்குவார்களானால், தங்களுடைய வடஇந்திய நண்பர்கள் விரைவில் ***தமிழர்களைத் 'தென்னாட்டு வானர சேனைகள்'*** என்று அழைப்பார்கள் என்று தாங்கள் கூறியதாக விளம்பரப் படுத்தப்பட்டிருந்தது!

"தமிழ்மக்கள் அவ்வளவு பேரையும் 'குரங்குகள்' என்று அத்தகைய மிக இழிவான வசைமொழிகளால் வெளியாக்கப் பெற்ற தங்களுடைய மேட்டிமையானது, எமது தாழ்மையான கருத்துப்படி, பொறுத்துக் கொள்ளக் கூடியதல்ல! . . . . .

"தங்கள் நிலைமையிலுள்ள தலைவர்களுக்கு இவ்வாறான பொருளில்லாததும் எண்ணிப் பாராததுமான நையாண்டிச் சொற்கள் மிகப் பொருத்த மற்றவையென்றும்; அத்தகைய சொற்களைத் தாங்கள் சிறிதும் பயன்படுத்திப் பேச முயலாது அறவே தவிர்த்தொழித்தல் வேண்டுமென்றும் நான் எண்ணத்துணி கின்றேன்!"[13]

தமிழர்கள், முன்னேறாமைக்குக் காரணம்

‘ஒற்றுமையின்மை’யே என்பது நாவலர் பாரதியார் கருத்து. தமிழர்களிடையே நிலவும் சாதி வேறுபாடுகளும், தீண்டாமையும் அவர்களின் உயர்வுக்குத் தடை கல்லாக உள்ளன என்பதைத் தம் சொற்பொழிவுகளிலும், கட்டுரைகளிலும் எடுத்துக் காட்டுகின்றார்.

ஆங்கிலப் பயிற்சி நிரம்பிய ஒரு சனாதன தர்மவாதி, “ஓர் உடலுக்கு உறுப்புக்கள் இன்றியமையாதலைப் போலவே, சமுதாய வாழ்வுக்கும் சாதிபேதங்கள் அவசியம்; உறுப்புக்கள் வெவ்வேறாய்த் தத்தம் இயல்பினின்று ஒன்றாமலும் ஊடாமலும் உழைத்து உடலை வளர்ப்பதேபோலச் சாதிகளும் பிறழாமல் பிறப்பளவில் நின்று தொழிலாற்றினால் மட்டுமே சமுதாயம் நிலை குலையாது!” என்று உடற்கூற்று நூல் ஆதாரங்கள் காட்டிச் சொற்பொழிவாற்றினார். இதனைச் செவிமடுத்த நாவலர் பாரதியார், “ஆரிய தர்ம சாத்திரங்கள் அனைத்தும், சாதிகள் நான்கெனவே வரையறுத்துக் கூறும் ஓர் உடலுக்கு அவயவம் நான்கோடமையாதே? . . . . . மாக்களின் உடலியல், புக்கு இது பொருந்தாது! சாதிபேதத் தீயமுறையை அறவே களைய வழி தேடி முயன்று பயனெய்துவதே நம்மவர் அனைவர்க்கும் அறிவும் அறனும் ஆகும்”![14] என்று மறுப்புக் கட்டுரை எழுதினார்.

இவ்வாறே பூரி சங்கராச்சாரியார் சுவாமிகளும், “இந்து சமயத்தில் பிறப்பால் தீண்டாமையுள்ள சாதி இன்றியமையாதது” என்று மதுரைப் பொதுக் கூட்டமொன்றில் கூறியதனோடமையாது, இதனைச் சொற்போர் மூலமும் நிரூபிக்கலாம் என்றும் கூறினார். இதனை, மதுரை அரிசன சேவையில் ஈடுபட்ட நண்பர்கள் மூலம் செவிமடுத்த நாவலர் பாரதியார், சுவாமிகளுக்கு 16-3-1934 இல் ஒரு மடல் எழுதினார். அதில், “இந்து சமயத்துக்குச் சாதித் தீண்டாமை இன்றியமையாததா?” என்ற தலைப்பில், பகிரங்கமாக ஒரு பொது இடத்தில் நடுநிலை மத்தியஸ்தருடன் நிகழ்த்தத் தாம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். இது குறித்து 24-3-1934 அன்று திருச்சிக்குச் சென்று சுவாமிகளை நேரிலும் கண்டு பேசினார். ஆனால் சுவாமிகளோ இந்த விதிகட்கு உட்பட விரும்பவில்லை! அக்காலத்தில் வெளிவந்த ‘தமிழ்நாடு’ எனும் இதழில் 26-3-1934 இல் “பாரதியார்-சங்கராச்சாரியார் வாதம்” என்ற தலைப்பில் இது குறித்த செய்தி வெளிவந்தது. ஆனால், ‘உண்மையைச்சரியாக எழுதவில்லை?’ என்று

நாவலர் பாரதியார் அவ்இதழுக்கு மறுப்பும் தெரிவித்தார்.

"தமிழர் எல்லோரும் ஒரே இனம்தான்! தமிழினத்தில் சாதியே இல்லை. 'சாதி' என்ற பெயரே தமிழில் இல்லை! திருக்குறளில் 'சாதி' என்ற ஒரு சொல்லைக் கூட நீங்கள் காணமுடியாது" என்று கூறும் நாவலர் பாரதியார்,

> "தென்னாட்டில், பழந்தமிழர் பிறப்பால் வேறுபடும் சாதி வகுப்பறியாமல் கூட்டுறவு, சமுதாய வாழ்க்கை நலம், உணவு, மணம் எல்லாம் எல்லோருக்கும் ஒத்த உரிமை பொதுவுடைமையாய்க் கொண்டிருந்தவரை, பல்லாயிரம் ஆண்டுகள், மூன்று மூவேந்தர்க் குடைநிழலில் ஒன்றுபட்ட தமிழகம், நாகரிகத் தொல்உலக முழுதும் பரவிய புகழ் வளர்த்துச் சிறந்து நின்றது!"

என்று கூறுபவர், வடவர் தொடர்பால்தான் நால்வகைச் சாதிகள் நாலாயிரமாக ஆகி அதனால் தமிழர்தம் வாழ்வு பாழானது என்றும் பஞ்சையராகிப் பரிதவிக்க நேர்ந்தது என்றும் கூறுவது சிந்திக்கத்தக்கது.

இவ்வாறு எழுதியதனோடு நின்றாரிலர் நாவலர் பாரதியார்! மதுரை மாவட்டத் தீண்டாமை எதிர்ப்பு இயக்கத் தலைவராகவும் இருந்து, கோயில் நுழைவுக்கும் பேராடியுள்ளார்.

நெல்லை மாவட்டத்தில் உசிலங்குளம் என்ற ஊரில், தாழ்த்தப்பட்டோர் கல்விக்கர்கத் தொடக்கப்பள்ளி ஒன்றைத் தொடங்கி, அதற்கு எட்டயபுரத்து அரசர் பெயரை வைத்தார் எனின், நாவலர் பாரதியார், தீண்டாமை ஒழிப்புக்காக உண்மையிலேயே பாடுபட்டமை புலனாகும்!

இவர், தமிழர் நலம் காக்கும் மாநாடுகள் பலவற்றில் தலைமை தாங்கித் தமிழர் மேன்மை பெறுதற்கான கருத்துக்களை உணர்ச்சி ததும்ப எடுத்துரைத்தவராவார்!

***26-12-1937***இல், திருச்சியில் நடந்த, 'சென்னை மாகாணத் தமிழர் மாநாட்' டின் தலைவராக, ***16-7-1937***இல் சென்னையில் நடந்த, 'தமிழர் திருமண மாநாட்டு'த் திறப்பாளராக; ***14-2-1948***இல் சென்னையில் நடந்த 'அகில தமிழர்மாநாட்டு'த் தலைவராக, ***19-1-1958***இல் திருச்சியில் நடந்த 'சாதி ஒழிப்பு மாநாட்டுப் பேச்சாளராக ***26-2-1938***இல் திருவத்திபுரத்தில் நடந்த 'வடஆர்க்காடு மாவட்டத் தமிழர் மாநாட்டு'த்

தலைவராக - இவ்வாறு இவர் பங்குகொண்டவை பலவாம்!

இடைக்காலத்தில் தமிழர்கள், தம் மானத்தை மறந்து, ஆரியமொழி வலையில் அகப்பட்டு, 'மக்கள் பெயர்' முதல் 'மரப்பெயர்' ஈறாக எல்லாப் பெயர்கட்கும் வடமொழிப் பெயர்களையே இட்டு வழங்கியதைச்சாடும் இவர் இன்றிருந்தால், ஆங்கிலத்திற்கு அடிமையாக வாழும் தமிழர் அவலநிலை குறித்துக் கடுமையாகச் சாடியிருப்பார்!

இவர் கலந்து கொண்ட தமிழர் மாநாடுகளில், திருவத்திபுரத்தில் நடந்த 'வடஆர்க்காடு மாவட்டத் தமிழர் மாநாட்' டில்பேசிய வீர உரை பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கது!

"தமிழனுக்கு உண்டாகியுள்ள தமிழறியாமையாகிய நோயால், ஜன்னி பிறந்து, ரக்கபடி தமிழன் என்ற உணர்ச்சி மருந்தைச் செலுத்திச் சிகிச்சை செய்யாவிடின் தமிழ்ப்பானமை தளர்ந்து சோர்ந்து, தமிழன் என்னும் தகுதிப்பாட்டில் செத்து மடிவான் என்பது நிச்சயம்!"

என்று நொந்து கூறுவது தமிழன் ஒவ்வொருவனும் மனம் கொளத்தக்கது!

மதத்தால், சாதியால், அரசியலால் இன்னும் பிறவறறால் ஒற்றுமையின்றி வாழும் தமிழர்கள், ஒற்றுமையாய் இருப்பதற்கு ஓரே வழி உண்டு என்கின்றார் இவர்!

"தற்காலம் தமிழருக்குப் பொதுவுடைமையாயிருப்பது தமிழ்மொழி ஒன்றே, சமயம், சாதி, கொள்கை, நடைமுறை முதலிய பல துறைகளிலும் பல வேறுபட்ட வகுப்பு வாதங்களால் மெலிந்து வரும் தமிழ்ச் சமுதாயம் ஒற்றுமை பெற்று உய்வதற்கு உரிய ஒரு பெருந்துணையாய் **உதவக் கூடியது நம் தாய்மொழியாகிய, தமிழேயாகும்.**" [15]

ஆம்! 'தமிழ்' ஒன்றே தமிழராகிய நம் அனைவரையும் ஒருங்கிணைக்கும் பாலம்! 'தமிழர்' எனும் எண்ணத்தோடு ஒன்று சேர நம்மொழிதான் துணை! இதனையாவது எண்ணிப் பார்த்துச் செயலாற்றுவது தமிழர் கடமை!

தமிழ் மக்கள் தங்களைத் 'தமிழர்' என்று நெஞ்சு நிமிர்ந்து கூறவும்; 'தமிழ் வாழ்க' என ஒலிக்கவும்; தமிழர்கள்

தமிழ்மொழியால் தமிழரசு நடத்தவுமாக 'முத்தமிழ்க் காவலர்' கி.ஆ.பெ.விசுவநாதத்தால் தொடங்கப்பட்ட 'தமிழர்கழகத்'தின் தலைவராகவும் இருந்தவர் நாவலர் பாரதியார். ஆனால் சில ஆண்டுகளுக்குள்ளாகவே இக்கழகம் செயல்பாடொழிந்தது. அதுகண்ட நாவலர் பாரதியார், "தமிழ்நாடு, தமிழனுக்காக வாழுமா?" என்று வருந்தி உரைத்தார்!

தமிழர்கள் உயர்வு பெறவும், உலகில் தலை நிமிர்ந்து வாழவுமாகப் பலவாறு உழைத்தவர், நாவலர் பாரதியார் எனல் சாலப் பொருந்தும்!

*அருந்தமிழ்த் தொண்டு!*

> "தளையால் கட்டுண்டு கிடக்கும் உடலை ஆர்த்தெழச் செய்து, உறுதிகொண்ட வலிமை சேர்த்திட, அந்த உடலுக்கு உயிர் வேண்டுமன்றோ? அந்த உயிர்தான் 'மொழி' யாகும்!! உயிர் இல்லாது உடல் அசையாது, மொழி மாய்ந்த பின்னர் மண்ணுரிமைக்கு மாண்புதான் எது?" [26]

என 'மொழி'யின் மேன்மைதனைக் குறிப்பிடுவர் மாண்பார் ***கலைஞர்***.

அன்னைத் தமிழுககாகப் பாடுபட்டோர் எண்ணில பலராவர். அவருள்ளும் பேச்சால் - எழுத்தால்- செயலால் என இம்மூவகையிலும் தொண்டாற்றிய பெருமையினர் நாவலர் பாரதியார்!

"இவர்தம் மனத்தில் தமிழ் மலர்ந்தது; அறிவில், தமிழ் அலர்ந்தது; உணர்வில் தமிழ் ஒளிர்ந்தது; மூச்சில் தமிழ் உரிமை முகிழ்த்தது; பேச்சில் தமிழ்வளம் பிறந்தது;...... தற்காலத் தமிழகத்தில் ஒரு முற்கால நக்கீரரின் புதுப் பதிப்பாக வாழ்ந்து மறைந்தவர்" [17] என இவரைப் போற்றுவர்.

தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கைதனை ஓர்ந்து பார்த்தால், சில வரலாற்று உண்மைகள் தெரியவரும். சிலர், வழிவழியாகத் தமிழ்ப்புலவர் குடும்பத்தில் பிறந்தவர்கள். சிலர், பெருந்தமிழ்ப்புலவர்கள்பால் முறையாகப் பாடம் கேட்டுத் தமிழ்ப் புலவரானவர்கள்; சிலர், தமிழோடு வடமொழியும் கற்று, 'எல்லாமே வடமொழியிலிருந்து வந்தவையே' என்று

பெருமையாகக் கருதியவர்கள்; சிலர் ஆங்கிலத்தைக் கற்றுத் 'தமிழில் என்ன இருக்கிறது?' என்று பேசியவர்கள்; சிலர், பி.ஏ., பி.எல்., முதலான பட்டங்கள் பெற்று வழக்குத் தொழிலில் ஈடுபட்டுப் போதிய வருமானம் இல்லாமல், தமிழ்ப் பேராசிரியர்களானவர்கள்; வழக்குத் தொழிலில் இருந்து கொண்டே தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள்; இவர்களிலும் சிலர், தமிழின் சிறப்பைத் தமிழில் மட்டுமே எழுதியவர்கள்; தமிழோடு ஆங்கிலத்திலும் எழுதிப் புகழ் பெற்றவர்கள், விரல் விட்டு எண்ணக் கூடிய வகையில் மிகமிகச் சிலரே! அச்சிலருள்ளும் தலையாயவராகத் திகழ்பவர் நாவலர் பாரதியார்!

நாவலர் பாரதியார், தமிழ்ப்புலவர் குடும்பத்தில் பிறந்தவரல்லர்; தமிழைக் கற்று வல்ல புலவர்களிடம் முறையாகப் பாடம் கேட்டவருமல்லர். தாய்மொழி வேட்கையால் தாமாகவே படித்துப் புலமை எய்தியவர்.

'தமிழில் பேசுவதே இழிவு' என்று கருதிய காலம் அது! (இக்காலத்திலும் அதுவே தான்!) ஆங்கிலச் செவிலித்தாயின் அரவணைப்பால் பெற்ற தமிழ்த்தாயை மறந்த காலம்! வடமொழி மோகத்தால் தமிழை இழித்துரைத்த காலம்!

"ஐந்தெழுத் தால், ஒரு பாடையு மாமென்று
அறையவும் நாணுவர் அறிவுடை யோரே" [18]

எனத் தமிழனே, தமிழை இழிவுபடப் பாடிய காலம்!

இத்தகு சூழ்நிலையில் தோன்றிய நாவலர் பாரதியார், எதிர்நீச்சல் போட்டு வெற்றிக்கரை கண்டு, தமிழுக்குத் தொண்டாற்றியவர் என்பது எண்ணத்தக்கது.

இவரின் தந்தையார் எட்டையபுரத்து அரண்மனையில் பணி செய்தமையாலும், இவர் அரசியாரால் வளர்க்கப்பட்டமையாலும் அரண்மனைச் சூழல், இவரது தமிழ்ப் பற்றுக்கு வித்திட்டது எனலாம். மேலும் இவர் உள்ளூரில், சாந்தசீலர் பிச்சுவையங்கார் என்பவர் சோதிடமும் இதிகாச புராணங்களும் நன்கறிந்தவராதலின், ஓய்வு நேரங்களில் அவர்பால் சென்று, பாரத இராமாயணக் கதைகளைக் கேட்டறிந்தார். அவ்வாறே தம் தந்தையைக் காணவரும், தமிழ்ப்புலவர்கள்பால் பெரியபுராணம்,

திருவிளையாடற்புராணம், சிவரகசியம் பிரமோத்தர காண்டம் முதலானவற்றைக் கேட்பதிலும் ஆர்வமுடையவராயிருந்தார். திருவாவடுதுறை மடத்தில் முறையாகப் பாடம் கேட்டுத் தமிழ்ப்புலமை பெற்ற காசிவிசுவநாத பிள்ளை என்பவரின் நட்பால், நாவலர் பாரதியாருக்குச் சிவநெறியில் அழுத்தமான பற்றும் உண்டானது. சி. சுப்பிரமணிய பாரதியாரின் வீடும், நாவலர் பாரதியாரின் வீடும் ஒன்றுக்கொன்று அண்மையில் இருந்தனவாதலின் இருவரும் நெருங்கிப் பழகும்அரிய நண்பர்களாயினர். இருவருமே, உள்ளூர்க்கோயில் வாகனங்களுக்கிடையே அமர்ந்து கொண்டு தமிழ் படித்ததும் உண்டு! எட்டையபுரத்து அரசவைப்புலவர்கள், அரண்மனையில் அவ்வப்போது நிகழ்த்தும் உரையாடல்களைக் கேட்டு மகிழ்வர்!

பின்னர் இவ்இருவருமே நெல்லையில் படித்து வந்தனர். நாவலர் பாரதியார் சி.எம்.எஸ். கல்லூரியிலும்; சி.சு.பாரதியார் இந்து கல்லூரியிலும் பயின்று வந்தாலும் மாலை நேரங்களில் இவர்கள் ஒன்று சேர்வர்.

அக்காலத்தில் திருநெல்வேலி நெல்லையப்பன் கவிராயர் வீட்டில் புலவர்கள் ஒன்று கூடிக் கலந்துரையாடுவது வழக்கம். அக்கூட்டத்தில் நாவலர் பாரதியாரும், சி.சு.பாரதியாரும் கலந்து கொள்வர். அவ்வாறே அவ்வூர்ச் சோணாசலம் பிள்ளையின் மகன் காந்திமதிநாத பிள்ளை என்பவரது வீட்டிற்குச் செல்வர். ஒரு சமயம், அவ்வீட்டில் புலவரும் நண்பரும் கூடியிருந்த வேளையில், சி.சு. பாரதியாரை அடக்க நினைத்த காந்திமதிநாதபிள்ளை, 'பாரதி சின்னப்பயல்' எனும் ஈற்றடியைக் கொடுத்து, வெண்பாப் பாடுமாறு கேட்டுக்கொண்டார். தமது ஏழாம் வயதிலேயே கவிபாடும் வன்மைபெற்ற சி.சு. பாரதியார், சிறிதும் தயக்கமின்றி ஒரு வெண்பாப் பாடி முடித்தார். அதன் முழுப் பகுதியும் நாவலர் பாரதியாருக்கு நினைவில்லை. கடைசிப் பகுதி மட்டுமே நினைவில் கொண்டிருந்தார்.

". . . . . . காந்திமதி நாதனைப்
பார், அதி சின்னப் பயல்!"

என்பதே அது!

இவ்விருவருக்கும் 'பாரதி' எனும் பைந்தமிழ்ப் பட்டம்

வழங்கப்பட்டதும் நெல்லையில்தான்! தமிழ்நாட்டுத் திருத்தலங்களை வழிபடக் கருதிய புலவர் ஒருவர் நெல்லைக்கும் வந்து சேர்ந்தார். அப்போது இந்துக் கல்லூரி ஆட்சிக் குழுச் செயலராக இருந்தவர், வழக்கறிஞரான சோமசுந்தரம் பிள்ளை ஆவர்! அவரது தலைமையில், விருந்தினராக வந்த புலவருக்குப் பாராட்டுக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஊர்மக்களும் திரளாக வந்திருந்தனர். கூட்ட முடிவில், அப்புலவர், அளவற்ற மகிழ்ச்சிக்கிடையே, ஈற்றடிகொடுத்து, வெண்பாவை நிறைவு செய்து தருமாறு ஏனைய புலவர்களை வேண்டிக் கொண்டார். புலவர்களும் ஆர்வமாகப் பாப்புனையத் தொடங்கி விட்டனர். ஆங்கிருந்த நாவலர் பாரதியாரும், சி.சு. பாரதியாரும் ஆளுக்கொரு தாளைக் கையிலெடுத்து, 'கிடுகிடு' வென வெண்பாப் பாடி முடித்து அப்புலவரிடம் கொண்டு போய்க் கொடுத்தனர். அவரோ, "பெரும்புலவர்கள் இன்னும் பாடி முடிக்கவில்லை; அதற்குள் இவ் இளைஞர்கள், முந்திக் கொண்டு, வெண்பாப்பாடி முடித்துவிட்டார்களே; என்று பெருமிதம் கொண்டு அப்பாடல்களைப் பலரும் அறியும்படிப் பாடிக் காட்டினார். இவ்இளைஞர் இருவரையும் ஊக்கப்படுத்த எண்ணிய புலவர், 'பணப்பரிசு தரலாம்' என்று முதலில் சிந்தித்து, இறுதியில் ஏதாவது பட்டம் கொடுத்தால் பிற்காலத்தில் பெரும்புகழும் பெறுவார்களன்றோ என்று முடிவு செய்து, இருவர்க்கும் 'நாமகள்' என்ற பொருள்தரும் 'பாரதி' எனும் பட்டம் தந்து பாராட்டினார். அன்று முதலே, 'சோமசுந்தரம் சோமசுந்தர பாரதி' ஆனார்; சுப்பிரமணியம். 'சுப்பிரமணிய பாரதி' ஆனார்!

நாவலர் பாரதியாரின் தமிழ்ப்பற்று மேலும் உயர, இந்நிகழ்ச்சியும் ஒரு காரணம் எனலாம்.

நெல்லைப் படிப்பு முடிந்த பின், சென்னைக்குச் சென்று, ஆங்குள்ள கிறித்தவர், கல்லூரியிற் சேர்ந்து 'இளங்கலை' படிக்கலானார் நாவலர் பாரதியார். அப்போது அக்கல்லூரியில் பணிபுரிந்த தமிழ்ப் பேராசிரியர்கள் மூவர்: 'பரிதிமாற்கலைஞர்' எனத் தனித்தமிழில் தம்பெயரை மாற்றிக் கொண்ட வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார் தலைமைப் பேராசிரியர், கோபாலாச்சாரியார் - இரண்டாமவர். அடுத்து - மலைமலையடிகளார். இவருள், பரிதிமாற்கலைஞர், நாள்தோறும் மாலை நேரத்தில், தமிழார்வம் கொண்ட மாணவர் சூழக் கடற்கரைக்குச் சென்று அவர்களோடு அளவளாவி மகிழ்வது வழக்கம். அம்மாணவர் குழுவில்

நாவலர் பாரதியாரும் இருப்பார்!.

ஒரு நாள் பரிதிமாற் கலைஞர், "ருந்து முகம்அம்போ ருகம்" என்பதை ஈற்றடியாக வைத்து ஒரு வெண்பா இயற்றுக என்று, தம்முடன் இருந்த செங்கல்வராயர் முதலான மாணவர்களிடம் கூறினார். அப்போது நாவலர் பாரதியார் பாடிக்கொடுத்த வெண்பா;

"முல்லை நகையும் முகைத்தா மரைமுலையும்
ஒல்லை மனமுருக்கும் ஒண்ணுதல் - தொல்லைதர
நொந்தஉள நோய்தணிக்கு நுண்ணிடைதன் முரல்ம
ருந்துமுகம் அம்போ ருகம்"

இது கேட்டு மகிழ்ந்த பரிதிமாற் கலைஞர் "எதிர்பாராத உள நோய்க்கு மருந்து கொடுத்தவர் சோமசுந்தரர்" என்று கூறிச் சிரித்தார்.

மேலும் மறைமலையடிகளாரின் தமிழ் வகுப்பாலும், அவரது ஆராய்ச்சித்திறத்தாலும் உள்ளம் பறிகொடுத்தவர் நாவலர் பாரதியார். இத்தகையபுலமை மிகுந்தோர்தம் கூட்டுறவால், பிற்காலத்தில் சிறந்த ஆராய்ச்சியாளராக விளங்கும் நிலை உண்டாயிற்று எனலாம்.

பின்னர்த் தூத்துக்குடி வந்து வழக்கறிஞராக இருந்தபொழுது, நாட்டுத்தொண்டில் மட்டுமன்றி அரிய பல நூல்களை எழுதித் தமிழ்த் தொண்டிலும் ஈடுபட்டு உழைத்த தீரர் வ. உ. சியுடன் நட்புக்கொண்டமையாலும், தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின் தொடர்பு இருந்தமையாலும் நாவலர் பாரதியார், தமது தமிழ்ப்பணியைத் தொடர்ந்து செய்யும் வாய்ப்பினைப் பெறமுடிந்தது.

### ஆராய்ச்சி நூல்கள்

"ஆரய்ச்சிக் கருத்துக்களைத் தெரிவிப்பதில் பிறரிடமிருந்து கடன் வாங்காமல், திருடாமல், தன் மனத்தில் பட்டதைத் தாம் கண்டு அறிந்த உறுதியான கருத்துக்களைப் புதுமையாகவும், துணிவாகவும், புலமை நலத்துடனும் அவர் (நாவலர் பாரதியார்) வெளியிட்டார்!" [19]

என்று சோம.லெ. நாவலர் பாரதியாரது ஆய்வுத்திறன் குறித்துப் பேசுவார். ஆங்கிலப்புலமை பெற்று வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்ட தமக்குத் "தமிழில் ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும்" என்ற எண்ணம் எவ்வாறு உண்டானது என்பதுபற்றி நாவலர் பாரதியார் கூறுவது வருமாறு:

> "ஆங்கிலச் சுவடியே முதலிற் தொடங்கி, அம்மொழிப் பயிற்சியிலழுந்திய எனக்குத் தோன்றாத் துணையாய்த் தமிழறிவுறுத்திய முதற்பெருங் குரவர் சிவஞான முனிவர். எந்தையார் கண்பர் எனக்குத் தந்த 'நைடதம்' வெறுத்து, நான் முதலில் விரும்பிப் படித்து வியர்ந்தது, காஞ்சிப்புராணம் சிவன்பால் அன்பு தடிக்கச் செய்து, எனைப் பதினாலாண்டுப் பருவத்து விசேட தீக்கை வெறவைத்துத் தமிழ்ச்சுவையோடு நுண்புல நுகர்வில் வேட்கை விளைத்தது அவர் பன்னூற் பயிற்சியே! ***பிறரெவர் கூற்றையும் அறிவிலாய்ந்து கண்ட மெய்யை நான் கடைப்பிடித்து ஒழுகும்*** பண்பினை வளர்த்தது, அவர் நுண் பொருளுரைகளே!"[20]

இதனால் மாதவச் சிவஞான சுவாமிகளின் நூல்கள் இவர்தம் சிந்தனையைத் தூண்டி ஆராய்ச்சிமனப் பான்மையை உருவாக்கின என்பது தெளிவாகின்றது. மேலும், இவரது ஆங்கிலப்புலமையும், வழக்கறிஞர் தொழிலும், சட்டப்புலமையும் இவரது ஆராய்ச்சிக்குத் துணைபுரிந்தன எனலாம்.

இவர்தம் ஆய்வு நெறிமுறைகளினால் நாம் அறியத்தகுவன சில: (1) வினாவிடைமுறை; (2) தருக்க முறை; (3) ஒப்பீட்டு முறை; (4) சொல்லாராய்ச்சி; (5) முன்பு மற்றவர்கள் கூறியதையே திரும்பக் கூறாமல் புதுமை காணும் முறை; (6) பிறரையும் சிந்திக்கத் தூண்டுதல்.

இவர் இலக்கியங்களையும், இலக்கண நூற்பாக்களையும் ஆராய்ந்து அரிய பல புதுமைக் கருத்துக்களைக் கூறியுள்ளார். இங்கே சிலமட்டும் சுட்டலாம்.

இவர் எழுதிய ஆராய்ச்சி நூல்கள் நான்கு:

(1) ***தசரதன்குறையும், கைகேயிநிறையும்:***

"தசரதன் அறநெறி தவறாது ஒழுகியவன். கைகேயியோ,

தன் கணவன் உயிர் கவர்ந்த கொடியள்." என்று நெடுங்காலமாகக் கூறிவருவது சரியா, தவறா என ஆராய எழுந்தது இந்நூல் கம்பர், வால்மீகி இவர்களின் கூற்றுக்களையே அடிப்படையாகக்கொண்டு, கதா பாத்திரங்களின் நிறைகுறைகளை எடுத்து அலசி ஆராய்கின்றார் நாவலர் பாரதியார். அவற்றுள் குறிப்பிடத்தக்கன சில.

தசரதன் குறைகளாக இவர் கூறுவன:- (1) கைகேயியை மணமுடித்த காலத்து, அவளுக்கு 'கன்யா சுல்கமா'க அயோத்தி நாட்டை அளித்துவிட்டான். எனவே நாடு பரதனுக்கே உரியது. அவனை வஞ்சித்து இராமனுக்கு முடிசூட்ட முயன்றான்; (2) சம்பராசுரப் போரின்போது கொடுத்த வாக்குறுதியை மீறிக் கைகேயியை வஞ்சிக்கத் துணிந்தான்; (3) காரணம் எதுவுமின்றிப் பரதனைக் கேகய நாட்டுக்கு அனுப்பினான்; (4) அவன் சென்றதும், ஆட்சித்துறையில் இராமனை ஈடுபடுத்தினான்; (5) தன் எண்ணத்தை மறைத்து வைத்திருந்தான்; (6) பரதன் இல்லாதபோது இராமனுக்குப் பட்டாபிடேகம் நடத்த முடிவு செய்தான்; (7) அழைப்பை அனைவருக்கும் அனுப்பியவன், கேகயனுக்கும் அவனிடத்திருக்கும் பரதனுக்கும் அனுப்பாதொழிந்தான்; (8) பட்டாபிடேக ஏற்பாடுகளைக் கைகேயியிடத்து மட்டும் கூறவில்லை!

***கைகேயியின் நிறைகளாக இவர் காட்டுவன:*** (1) மக்கள் நால்வரிடத்தும் எவ்வித வேறுபாடும் காணாதவள். (2) இராமன்பால் அளவற்ற அன்பினள். (3) போர்க்களத்தும் தன் கணவனைப் பிரிய மனமின்றி, அவனது தேர்ச்சாரதியாக இருந்து, தன்னையே அவனுக்காகப் பலியிடத் துணிந்தவள். (4) தன் கணவனுக்குப் பழி வரலாகாது என்று எண்ணி, அப்பழியைத் தனதாக்கிக் கொண்டவள்.

இவர்தம் ஆய்வுக்கு அடிப்படையாக எடுத்துக்கொண்ட பாடல்:

> "கெடுத்தொ ழிந்தனை உனத்தரும் புதல்வனை கிளர்நீர்
> உடுத்த பாரக முடையவன் ***ஒருமகற் கெனவே***
> ***கொடுத்த பேரரச*** அவன்குலக் கோமைந்தர் தமக்கும்,
> அடுத்த தம்பிக்கு மாம்; பிறர்க் காகுமோ என்றாள்"[21]

ழுப்பாடலில் வரும் "ஒரு மகற்கு எனவே கொடுத்த பேரரசு" என்ற தொடரே இவரது ஆய்வுக்கு நிலைக்களன். "ஒரு மகற்கு" என்பது இராமனைக் குறிக்கும் என்பதே இதுவரை கூறிவந்த உரையாகும். ஆனால் நாவலர் பாரதியாரோ 'ஒப்பற்ற மகனாகிய பரதனுக்கு முன்பே கொடுக்கப்பட்ட அரசு' என்று புதுப்பொருள் காண்கின்றார். தசரதன் கைகேயியை மணமுடித்த போது 'கன்யாசுல்கமாகக் கொடுத்த இச்செய்தி வால்மீகத்தில் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. கம்பரும். "வரனில் உந்தை சொல் மரபினால்" எனும் பாட்டில் குறிப்பாக இதனைச் சுட்டியுள்ளார்.

இவர் தம் குறிக்கோளை நிறுவப் பல்வேறு சான்றுகள் தருகின்றார்:

"தசரதன் குறைகளாக நாவலர் பாரதியார் கூறுவன பொருத்தமாகத் தோன்றுகிறது. கைகேயி நிறைகளாக இவர் கூறுவனவற்றுள் ஒருசில ஏற்கத்தக்கனவாக இல்லை" என்றே கூறத் தோன்றுகின்றது.. தம் நண்பர் சி.சு. பாரதியார் 'பாஞ்சாலிக்' காக "பாஞ்சாலி சபதம்" பாடியது போல இவரும் கைகேயிக்காக "கைகேயி நிறை" என்றார் போலும்![22]

> "நக்கீரர் மரபிலே தோன்றிய திரு. பாரதியாரின் வாக்கு வாதத்தை மறுக்க எந்தச் சட்டமும் துணைக்கு முன்வரவில்லை! அரசு பரதனுடையது. என்பதை மறுத்து வாதிட எந்த வழக்கறிஞரும் என்றும் முன்வர முடியாது. அயோத்தி அரசைப் பெறச் சட்டப்படி கைகேயிக்கு உரிமை உண்டு எனபதை நானும் மறுக்கவில்லை"[23]

என்று தி. மாணிக்கவாசகம் கூறுவதும் இங்கு எண்ணத்தகும்.

***(2) திருவள்ளுவர்:***

தமிழகத்தில் தலைசிறந்த தமிழ்ப் புலவர்களான தொல்காப்பியர், திருவள்ளுவர், நக்கீரர், கம்பர் முதலானோரைப் பற்றி எழுந்த கட்டுக்கதைகள் பலவாகும். இவர்களில் சிலரின் பிறப்பைப் பற்றிப் பிற்காலத்தில் எழுதிவைத்த கதைகள், அறிவுடையோரால் ஏற்கத்தக்கனவல்ல.

அன்றியும் இவை தமிழ்ப்புலவர்களை இழிவுபடுத்துவன வாகவும் உள்ளன. இக்கதைகளைப் புனைந்தவர்களின் துணிச்சலைவிட, இவற்றை அப்படியே நம்பும் தமிழ்மக்களின் துணிச்சல், வியப்பிற்குரியது. இவற்றின் பொய்ம்மையை வெளிக்காட்ட விழைந்தார் நாவலர் பாரதியார் அவ் எண்ணத்தின் விளைவால் உருவானது 'திருவள்ளுவர்' என்னும் ஆராய்ச்சி நூல்.

வள்ளுவர் பற்றி வழங்கிய கட்டுக் கதைகளில் குறிப்பிடத்தக்க சில: (1) 'ஆதி' என்ற புலைச்சிக்கும், 'பகவன்' என்ற பார்ப்பனனுக்கும் பிறந்த எழுவருள் கடைமகனாய்த் தோன்றியவர் (2) வள்ளுவ வகுப்பினரால் வளர்க்கப் பெற்றமையால் 'வள்ளுவர்' எனும் பெயர் பெற்றார். (3) வள்ளுவர், மயிலை ஏலேலசிங்கனால் வறுமை வருத்தம் நீங்கப் பெற்றார் (4) வாசுகி என்பாளை மணந்தார். (5) கடைச் சங்கத்தில் அரங்கேற்ற வந்தபோது தம்மையும் தம் நூலையும் அவமதித்த சங்கப் புலவர்களை இவர், தம் தெய்விக ஆற்றலால் பொற்றாமரைக் குளத்தில் வீழ்த்த, அப்புலவர்கள் புகழ்ந்து பாடித் தம் உயிரை இரந்து பெற்றனர்!

இக் கட்டுக் கதைகளை மறுப்பதற்கு இவர், 'நற்றிணை' முதல் 'சோமேசர் முதுமொழி வெண்பா' ஈறாக, ஏறத்தாழப் பதினைந்து நூல்களினின்றும் சான்றுகள் தருகின்றார்.

வள்ளுவரைப் பற்றி எழுந்த கட்டுக்கதைகளுக்கு ஆதாரமாகக் காட்டப்படுவன: (1) "அறம்பொருளின்பம் வீடென்னும்" என்னும் திருவள்ளுவமாலைச் செய்யுள்: (2) "மெய்த்ததிரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார்" என்னும் சோமேசர் முதுமொழி வெண்பாச் செய்யுள் எனும் இரண்டாகும்.

"திருவள்ளுமாலை" சங்கப்புலவர்களால் பாடப்பட்ட தாகக் கொள்ள முடியாது., ஒருவர் அல்லது ஒரு சிலர், முன், நன்கு சிந்தித்துப் பாடித் தொகுத்த நூலாகத் தோன்றுகின்றது. அவ்வாறே 'சோமேசர் முதுமொழி வெண்பா'வும் இன்றைக்கு ஏறத்தாழ 200 ஆண்டுக்கு முன் எழுந்த ஒரு நூல். இதில் ஆசிரியர் சிவஞான யோகிகள், தம் காலத்தில் வழங்கிய கதையைக் கட்டினாரேயன்றி, அக்கதை உண்மையா. இல்லையா என்று ஆராய்ந்து பாடினாரல்லர்! எனவே இக்கதைகளுக்குப் பழைய நூற்சான்று இருப்பதாகத்

தெரியவில்லை!" என்று கூறும் நாவலர் பாரதியார், குறட்பாக்களோடு சங்க இலக்கியங்கள் எவ்வாறு ஒப்புமையுடையன என்பதை (19 திருக்குறள்-15 சங்க இலக்கியப் பாக்கள் இவற்றை) எடுத்துக் காட்டுகின்றார். மேலும், திருக்குறளுக்குப் பின்னர் வந்த 'சிலப்பதிகாரம், மணிமேகலை' முதலான நூற்கருத்துக்கள், திருக்குறளோடு எந்தெந்த வகையில் ஒப்புமையுடையன என்பதையும் (17 திருக்குறள்-18 பிற நூல்கள்) இவற்றைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

"சாணக்கியம் முதலிய ஆரிய நீதி நூல்களினின்று அறங்களைத் திரட்டி வள்ளுவர் நூல் செய்திருக்க வேண்டும்; எனவே சாணக்கியருக்கு வள்ளுவர் பிற்பட்டவராயிருக்க வேண்டும்" என்று கூறுவார்தம் கூற்றையும் மறுத்து,

> "ஆரிய தருமசாத்திர முறை வேறு; தமிழறநூல் மரபு வேறு; வள்ளுவர் குறளோ, தமிழ் மரபு வழுவாமல், பொருட்பகுதிகளான அகப் புறத்துறை அறங்களை மக்கள் வாழ்க்கை முறைக்கு ஆமாறு ஆராய்ந்து அறுதியிட்டு வடித்தெடுத்து விளக்கும் தமிழ்நூல், எனவே குறள் நூல், தமிழில் தோன்றிய தனிமுத அறநூல்!" [24]

என்று தங்கோள் நிறுவுகின்றார் இவர்.

இவ்வாறே, "வள்ளுவர் என்ற ஒரு சாதி வகுப்பே பண்டைத் தமிழகத்தில் இல்லை. வள்ளுவப் பெயர், சங்க காலத்தில், தமிழரசர் உள்படுகருமத் தலைமைப் பதவிப் பெயராய் இருந்தது. 'பெருங்கதை' எழுந்த இடைக்காலத்தே அப்பதவிக்குரிய தொழிலில் ஒன்றான அரசு விழாக்களை அறிவிப்போர்க்கு உரியதாயிற்று" என்றும் கூறுவர் இவர். மேலும், "சங்க நூல்களில் மயிலாப்பூர் என்ற பெயரே இல்லை. ஆதலின் வள்ளுவர், கூடல் மாநகரில் பீடுபெற வாழ்ந்த பெரியர்!" என்றும்; "அருந்தமிழ் வேளிர் குடியில் தோன்றியவர்" என்றும்; "வள்ளுவர் மனைவி வாசுகி என்பதற்கு ஆதாரமில்லை, மாதானுபங்கி என்பதே பொருந்தும்" என்றும் கூறுவர்.

நாவலர் பாரதியார் கூறும் இவ்வாராய்ச்சி முடிவுகளிற் சில ஏற்க முடியாதனவாகவும் இருக்கலாம். எனினும் வள்ளுவர் போன்ற நுண்மாண் நுழைபுலப் புலவர்களைப் பற்றி எழுந்த கட்டுக் கதைகளையே மெய்யான வரலாறுகள்

என்று எண்ணி, அவற்றை இலக்கிய வரலாற்று ஏடுகளிலும் எழுதித், தமிழர் மட்டுமன்றி வெளிநாட்டறிஞர்களும் நம்பும்படியாகச் செய்துவிட்ட இச்செயலுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க முன் வந்த அறிஞர்களில் நாவலர் பாரதியாரும் ஒருவர் எனின் மிகையன்று!

> "தொன்மை வாய்ந்த தமிழ்ச் சான்றோர்களின் பிறப்பும் பிறவும் புன்மை மிகுந்த இருள்படலத்தால் சூழப் பெற்றன. சம்பிரதாயங்கள், கர்ண பரம்பரைகள், முன்னோர் கூறினரென்பதால், பொன்னேபோற் போற்ற வேண்டுமென்ற முரட்டு நம்பிக்கைகள் ஆகிய புல்லும் புதரும், கல்லும் கரடும் நிறைந்துகிடந்த குகையில் துணிவுடன் சென்று, திருவிளக்கேற்றித் தனித்தமிழ்ப் பெரியார்களாகிய தொல்காப்பியர், வள்ளுவரைப் பற்றிய உண்மை வரலாறுகளை நாடறியச் செய்தவர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களாவர்!"[25]

> "திறனாய்வு அணுகுமுறைக்கு இத் 'திருவள்ளுவர்!' ஆய்வினையும் ஒன்றாகக் கொள்ளலாம்"[26]

என்னும் அறிஞர்கள் கூற்று, நாவலர் பாரதியாரின் ஆய்வுக்கு அளித்த சான்றாகும்.

இத் 'திருவள்ளுவர்' என்னும் ஆய்வு நூலை நாவலர் பாரதியார், ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தகும்.

இவ்வாறு 'திருவள்ளுவர்' பற்றித் தெள்ளத் தெளிவாக, அறிஞர் பலரும் ஏற்கும்படி சொன்ன பிறகும், இன்று பள்ளிப் பாட நூல்களிலும் பிறவற்றிலும், "திருவள்ளுவர், ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்தவர்" என்றே காணப்படுவது மிகவும் வருந்துதற்குரியது!

### (3) சேரர் தாயமுறை:

"மக்கள் தாயமுறை, மருமக்கள் தாயமுறை, இவ்விரண்டும் கலந்த தாயமுறை" எனத் தாயமுறைகளில் முப்பிரிவுகள் சொல்லப்படும். இவற்றுள், 'மருமக்கள் தாயமுறை', கேரளத்தில் கடந்த ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்து வருவதாம். நாயர்கள், நாஞ்சில்

வேளாளர்கள், வடமலையாளத்தில் மகம்மதிய மாப்பிள்ளைமார்கள், பொய்யானூர்க் கூற்றத்துப் பார்ப்பன நம்பூரிகள், தென்கன்னடத் தொன்மக்கள் துளுவர் கொங்கணர் இவர்களிற்சிலர் ஆகியோர், இம் 'மருமககள் தாயமுறை'யைக் கொண்டிருந்தனர். இம்முறை, சேர நாட்டில் புதிதாகப் புகுந்ததா, அன்றிச் சங்ககாலநதொட்டே இருந்து வருவதா என்பதை ஆராய எழுந்ததே இந்நூல்.

இம் 'மருமக்கள் தாயமுறை' பற்றி முதன்முதலில் ஆங்கிலத்தில் ஆராய்ந்து எழுதியவர் எம். சீனிவாச ஐயங்காராவர். ஆனால், இதனை நாவலர் பாரதியார் பின்னர்த்தான் அறிய நேர்ந்தது என்கின்றார்.

இவ் ஆராய்ச்சியை இவர் மேற்கொண்டதற்குரிய காரணங்கள் மூன்று: (1) தமிழ் இலக்கியங்களில், தந்தைக்கு மகன் முறை சுட்டும் இடங்களில், 'இன்னான் சேய் இன்னான்' என்று காணப்படப் பதிற்றுப்பத்துப் பதிகங்களில் மட்டும் 'கு' உருபு கொடுத்துப் பிரிந்து, முதலில் நிறுத்தி, அதன் பின் அவனுக்கு இன்னான் தேவி ஈன்ற மகன் பாட்டுடைச் சேரன் என்ற புதுமுறை காணப்பட்டமை. (2) கேரள நம்பூரிமார் கூறும் சில கூற்றிலிருந்து, 'பெண்டிர், சிற்றின்பக் கருவிகள்' என்ற கருத்து உண்டாவதால், 'அஃது எந்த அளவுக்கு உண்மை' என ஆராயுங்கடப்பாடு. (3) எதனையும் ஆராயாமல் கண்டபடி கொண்டமைவதால் பழஞ்சரிதங்களை உணர முடியவில்லை; இவ் இழிநிலை போக்க வேண்டும் எனும் எண்ணம்.

கேரளத்தில் வழங்கும் 'மருமக்கள தாயமுறை'க்கு அடிப்படையாக உள்ளவை: (1) பெண்வழியிலேயே உறவுமுறை. தாய்மாரே குடிபேணும் அடிமரம். (2) ஆடவர்கள், தம் மாமன்மார்களுக்கு வழித் தோன்றல்கள். (3) குடியின் தலைமை உரிமை, மருகர்களில் வயது முறைப்படி வரும். (4) குலநிதியைப் பிரித்தாளும் பிறப்புரிமை ஆண்மக்களக்கு இல்லை. (5) அரசர் குடும்பங்களிலும் நாடாளும் உரிமை, மருகர் வழியே வரிசை முறைப்படி வரும். (6) தந்தையர்க்கு ஆண்மக்கள் வாரிசு ஆகார். அத் தந்தையருடன் பிறந்த பெண்வயிற்று மருகரே வழித்தோன்றல்.

இவ் ஆராய்ச்சிக்கு இவர் பல்வேறு நூல்களைச் சான்றாகக் காட்டினாலும் மிகுதியாக எடுத்து ஆள்வது 'பதிற்றுப்பத்து' நூலேயாகும்.

இவண், இவர் காட்டுவனவற்றுள் ஒரு சான்று மட்டும் சுட்டலாம்:

"ஆராத் திருவிற் சேரலாதற்கு
வேள்ஆவிக் கோமான்
பதுமன் ***தேவி*** ஈன்ற மகன்" (4ஆம் பத்துப்பதிகம்)

இதில் வரும் 'தேவி' என்பதற்கு 'மகள்' என்றே இதுகாறும் பொருள் கூறப்பட்டு வந்துள்ளது, இவ்வாறு பொருள் கொண்டால், "பிறமன்னர் பலரைக் கூடி மக்களைப் பெற்றவள்" என்று தவறாகக் கொள்ள நேரிடும். எனவே 'தேவி' என்பதற்கு 'மனைவி' என்று பொருள்கோடவேண்டும் என்கிறார் இவர்.

இந்நூலில் தம் ஆய்வு முடிபுகளாக இவண் கூறுவன வருமாறு: (1) தமிழ்நாட்டில் குடகுமலைத் தொடருக்கு மேற்கே, குடபுலத்தில் மட்டுமே இம் 'மருமக்கள் தாயமுறை' நெடுவழக்காய் உள்ளது. 'நாயர்' என்ற திராவிட சமுதாயத்தார், 'நம்பூரி' என்ற ஆரியப் பிரிவினர், பிறநாட்டிலிருந்து குடியேறிய மாப்பிள்ளைமார் இவர்கள் மருமக்கட்டாயிகளாவர். (2) சங்ககாலப் பழஞ்சேரர்குடியில் தொன்று தொட்டே இது வழக்கத்தில் இருந்து வந்ததாகத் தெரிகிறது. (3) ஆனால் அப்பகுதி தவிரத் தமிழகத்தில் 'மக்கட்டாயமே' நிலைத்து நிற்கின்றது.

இவ்வாறு கூறும் நாவலர் பாரதியார் 'இஃது இன்னும் ஆராயத்தக்கது' என்று குறிப்பிடுவது[27] இவரது நடுவுநிலைத் திறனாய்வைக் காட்டுவதாம்.

நாவலர் பாரதியார் எழுதிய இவ் ஆய்வுக்கு மு. இராகவையங்காரும், ரா. இராகவையங்காரும் ஆகிய இருவரும் தனித்தனி மறுப்புகள் எழுதியுள்ளனர். எஸ். கிருட்டிணசாமி பாரதியார், நாவலர் பாரதியாரின் கருத்தினை ஆதரித்து, அக்காலத்துச் 'செந்தமிழ்' இதழில் கட்டுரை எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தகும்.

"முறையாக எழுதி வைக்கப்படாத பண்டைத் தமிழ் மக்களின் பழக்கவழக்கங்களை ஒன்றிரண்டு பாடல்களிற் காணப்படும் சொற்களைக் கொண்டு அறுதியிடுதல் கடினம்"[28] என்பது இக்கட்டுரையாளரின் கருத்து.

எனினும், "இவ் ஆராய்ச்சி மிகவும் பயனுடையது"[29] என்றும் "எவ்வகையான குற்றமுமின்றிச் செவ்வையாகவும் கௌரவமாகவும் எழுதிய மறுப்புரைகளுள்ளே பாரதியாரவர்கள் எழுதிய இந்நூல் மிகச் சிறந்ததாகும்"[30] என்றும் அறிஞர் போற்றுவர்.

"சேரர் தாயமுறை" என்னும் இந்நூலை நாவலர் பாரதியார் ஆங்கிலத்திலும் (The System of Succession of Chera Kingdom) எழுதியுள்ளார்.

*(4) சேரர் பேரூர்:*

பண்டைச் சேரமன்னர்களின் தலைநகரமான 'வஞ்சி' பற்றிய ஆய்வு நூல் இது. 'அஃது எங்கு உள்ளது?' என்பதற்கான விடை காண்பதே இதன் நோக்கம்.

"வஞ்சிமாநகர், ***கடலோரம்*** பேராற்றின் மேலது" என்று சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும், பெரியபுராண ஆசிரியர் சேக்கிழாரும் கூறுவர். உ.வே.சா. வின் கருத்தும் இதுவே. வி. கனகசபைப் பிள்ளை, "***குடமலைத் தொடரின்*** அடிவாரத்தில் பேரியாற்றின் கரையில், ஒரு பாழூராயி திருக்கரூரே வஞ்சி" என்பர். மு. இராகவையங்கார், "திருச்சிக்கு மேற்கே ***ஆம்பிராவதிக் கரைமேலதாய*** கருவூரானிலையே வஞ்சி" என்பர்.

இம்மூவகைக் கருத்துக்களுள் பொருந்துவது எது என ஆராய முற்பட்ட நூலே "சேரர் பேரூர்"

இவ் ஆய்வின் பெரும் பகுதி, மு. இராகவையங்காரின் கருத்தினை மறுப்பதாகவே அமைந்துள்ளது.

மு. இராகவையங்கார், 'சேரன் செங்குட்டுவன்' எனும் தமது நூலில், ஏறக்குறைய 17 காரணங்கள் காட்டித் தங்கோள் நிறுவுகின்றார். நாவலர் பாரதியார் இக்காரணம் ஒவ்வொன்றையும் தக்க ஏதுக் காட்டி மறுக்கின்றார். இறுதியில் ஆய்வின் முடிபாகப் பின்வருமாறு நிலை நாட்டுகின்றார்:

"பட்டினப்பாக்கமும் அரசன் குடிப்பாக்கமும் கூடியது வஞ்சி மூதூர். பிற்காலத்தில், பட்டினப்பாக்கம்

'மகோதை' என்றும் அகநகராய கருவூர்ப்பாக்கம், 'வஞ்சிமுற்றம்' என்றும்; அழைக்கப் பெற்றன. இவ்'வஞ்சி முற்றம்' நாளடைவில் 'வஞ்சைக்களம்' ஆயிற்று. 'வஞ்சி - வஞ்சை; முற்றம் - களம். பிற்காலத்துத் தலங்களுள் வைத்தெண்ணப் படுங்கால், 'திரு' அடைபெற்றுத் 'திருவஞ்சைக்களமா' யிருக்க வேண்டும். . . . ஆகவே, சேரர் சங்ககாலப் பேரூர், பேராற்றின் ***மலைவாரத்தே*** கடலி னின்றும் சுமார் 30 மைலுக்காப்பாலுள்ள திருக்கருருமன்று; காவிரி ஆம்பிராவதிக் கூட்டத்திற்கு மேற்கே புனல் நாட்டிலுள்ள சோழர் பழவூரான திருவானிலையு மாகாது! சேரர் பேரூரான வஞ்சி மூதூர் மலைநாட்டில், ***மேலைக் கடற்கரையில்*** பேராற்றின் கழிமுகத்திலமைந்த பழம் பட்டினமேயன்றிப் பிறிதுண்ணாட்டூரெதுவுமாகாது!"[31]

இவ்வஞ்சி மாநகரின் இருப்பிடம் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகளும் உண்டு. எனினும், மயிலை, சீனி.வேங்கடசாமி கூறும் கருத்து, நாவலர் பாரதியாரின் கருத்துக்கு அரண் செய்வதாக உள்ளது, அது வருமாறு:

> "சேர நாட்டுத்தலைநகரமாக அக்காலத்தில் இருந்த வஞ்சி (கரூர்) நகரம், பேரியாறு கடலில் விழுந்த இடத்துக்கு அருகில், பேரியாற்றின் கரைமேல் இருந்தது, வஞ்சி நகரத்திலே சேர அரசர் வாழ்ந்திருந்தார்கள். ***இந்தச் சேரர் வஞ்சி கொங்கு நாட்டு வஞ்சி (கரூர்) அன்று!*** சேர நாட்டிலும் கொங்கு நாட்டிலும் 'வஞ்சி' என்றும் 'கரூர்' என்றும் பெயர் பெற்றிருந்த இரண்டு ஊர்கள் சங்ககாலத்தில் இருந்தன!"[32]

இவ்வகையில், "நாவலர் பாரதியார், இந்நூலாராய்சிக்குக் கடுமையான உழைப்பினை மேற்கொண்டார்"[33] என்று கே.சீனிவாசபிள்ளை கூறுவது முற்றிலும் பொருந்தும்.

'சேரர் பேரூர்' எனும் இந்நூல்னையும் ஆங்கிலத்தில் எழுதி (Cheras of Yore) வெளியிட்டுள்ளார் நாவலர் பாரதியார்.

***படைப்பிலக்கியம்:***

நாவலர் பாரதியாரின் படைப்பிலக்கியங்கள் இரண்டு: (1) மாரி வாயில் (2) மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி.

இவை இரண்டும் கவிதை நூல்கள். 'நாவல்' ஒன்று எழுதத் தொடங்கினார்; ஆனால் அது முற்றுப் பெறவில்லை!

இவர், ஆண்டுதோறும் கோடை விடுமுறையின்போது தம் குடும்பத்துடன் குளிர்ச்சியான இடங்களுக்குச் சென்று வருவது வழக்கம். அவ்வகையில் 1909இல் கன்னியாகுமரி சென்றார். ஆங்கே இவர், ஒரு தமிழ் கிறித்தவரையும், ஆங்கிலம் வடமொழி தெரிந்த அவர்தம் மராட்டிய மனைவியையும் சந்தித்து உரையிட நேர்ந்தது. அப்போது மராட்டிய மங்கை, "மராட்டியர்கள் தங்கள்மொழியில் புத்தம் புதிய காவியங்களையும் நாவல்களையும் உருவாக்கி வருகின்றனர். ஆனால், தமிழர்களோ, தங்கள் பழம்பெருமை ஒன்றே பேசி வருகின்றனரேயன்றிப் புத்தம் புதிய இலக்கியங்களை உருவாக்கவில்லை!" என்று கூறி எள்ளி நகையாடினார். ஒவ்வொரு நாளும், தாமே பாட்டும், கதையும் புதியதாகப் புனைந்து கூறுவதாக வாக்களித்த நாவலர் பாரதியார், அவ்வாறே முற்பகலில் பாட்டும் பனுவலும் உரைக்கதையும் புனைந்து, மாலைதோறும் அவர்கட்குப் படித்துக் காட்டி மகிழ்வித்தார். அவ்வாறு பாடிய பாடலே, பின்னர், மாரி வாயில், என்னும் நூல்வடிவம் பெற்றது; கூறிய கதை, 'மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி' என்னும் நூலாயிற்று.

'மாரி வாயில்', தூது நூல்வகையைச் சார்ந்தது. மாரி-மேகம்; வாயில் - தூது; பண்டைத் தமிழ் சொல், வழக்கிழந்து போகலாகாது என்று எண்ணித் 'தூது' என்னாமல் 'வாயில்' என்றமைத்தார் இவர். மேகத்தைத் தூது அனுப்புவதாகப் புனையப்பட்டது இது. 'தூது' நூல், பொதுவாகக் 'கலிவெண்பாவில்' பாடுவது மரபு. ஆனால் இவரோ, விருத்தப்பாவால் யாத்துள்ளார்; அதற்கான காரணமும் கூறுவார்.

இம் 'மாரிவாயிலு'க்கு மூலம், பாரதக் கதையில் உள்ளது. புண்ணிய நீராட்டுப் பயணத்தை மேற்கொண்ட அருச்சுனன், மதுரைக்கு வந்தபோது பாண்டியனின் விருந்தினனாகத் தங்கியிருந்தான்; அப்போது மன்னனின் மகள் 'சித்திராங்கதை' என்பாளைக் கண்டு காமுற்றான்; இருவரும் கந்தருவமுறையில் காமம் துய்த்தனர். இருவர்க்கும் மணம்நிகழ்ந்தது. 'பப்ருவாகனன்' என்னும் ஆண்மகவும் பிறந்தது. அருச்சுனன், தனியாகக் குமரியில் நீராடச் சென்றவன், திரும்ப மதுரை வாராமல், வடக்கே இந்திரப்பிரத்தம் சென்றுவிட்டான் என்பது பாரதக்கதை.

இதனை அடிப்படையாகக் கொண்டு, தம் கற்பனை மூலம் புதிய கதை புனைந்துள்ளார் நாவலர் பாரதியார்.

கணவனின் பிரிவாற்றாது கலங்கிய சித்திராங்கதை, அவன் சென்ற கன்னியாகுமரிக்குச் சென்று நாளும் நீராடி வணங்குபவள், ஒருநாள் கீழ்வானத்தே தேர்போல் ஊர்ந்து வரும் மேகத்தைக் கண்டு அதனையே தன் கணவனுக்குத் தூதுவிடத் துணிந்தாள். தான்படும் பிரிவுத் துன்பத்தையும் ஆராக்காதலையும், பார்த்தனுக்குச் சொல்லி அவனைத் தன்பால் கூட்டிவைக்க வேண்டுமென்று அதனிடம் கூறினாள். அவ்வாறே அந்த மேகமும், வான்வழி விரைந்தேகிப், பாண்டவர் பதியணுகிப் பார்த்தனைக் கண்டு, வந்த செய்தியை உரைத்தது. அவனும், தன் அண்ணனின் கட்டளைக்கேற்பப் பகைவர்களை வென்றபின் பாண்டியநாடு மீண்டு தன் காதல் தமிழ்மனையாளுடன் பிரியாது வாழ எண்ணியிருப்பதாகவும் அதுவரை அவள் ஆற்றியிருக்க வேண்டுமென்றும் கூறி அம்மேகத்தை அனுப்பி வைத்தான். மேகமும், திரும்ப வந்து சித்திராங்கதையிடம் உண்மை உரைத்தது! - இதுவே 'மாரிவாயில்' கூறும் கதையாம்!

'தூது' நூலின் இலககணங்களில் வரும், "தூதாகச் செல்லும் பொருளை விளித்தல், பிறபொருள்கள் தூதுசெல்லத் தகுதியற்றவை எனல், செல்லும் வழி கூறுதல்" முதலான எழுவகைகள் இம்மாரிவாயிலிலும் அமைந்துள்ளன. இயற்கை வருணனை, காதற்சிறப்பு ஆகியவற்றை இதன்கண் கண்டு மகிழலாம்.

"மலயம் என்ற ஒரு பசுவுக்குக் காவிரி, வெள்ளாறு, பாலாறு, பெண்ணை எனும் நான்கு முலைக் காம்புகள்; அவை தரும் பாலே - தமிழ்!" என்பது கற்பனைக்கு ஒரு சான்று.

பார்த்தனைப் பிரிந்தமையால் துயருறும் சித்திராங்கதை, முன்னர் நிகழ்ந்தவற்றை எண்ணிப் பார்ப்பதாக வரும் பகுதியில், காதற்சிறப்புக் களிநடம் புரிகின்றது. "எனை மணந்த மணவாளன், 'உன் இரண்டு காந்தன் மலர்க் கையால் எனைத் தழுவுக' என்ற போது, நாணும் பரவசத்தால் தழுவினேன். என்னை நோக்கி, 'மகளிர் எழில் விளக்கு நீ' என்றான்; பிற மகளிரையும் அவர்தம் எழிலையும் வியந்தானே என்றெண்ணி ஊடினேன்; அவனோ. தன் மலர்க்கரம் கூப்பி எனைத் தொழுதான்!"[34]

நூல் முழுதும் தமிழின் சீர்மை பேசுகின்றது. தமிழ் மரபையும் ஆரியமரபையும் சுட்டுகின்றார் நாவலர் பாரதியார்.

"நல்லவை எல்லாம் ஆற்றல்
நம்கடன் என்பர் *தென்னர்;*

வல்லவை வழக்கா றென்னும்
*வடவரோ* கடன்கள் எல்லாம்

நல்லவை, மெலியார் தம்மை
நலிவதா ணறமென் பாரால்!"[35]

'விந்தியமலை'யைப் பற்றிக் கூறவந்த நாவலர் பாரதியார், "தமிழர்க்கும் வடவர்க்கும் மொழி வழக்கு, நெறிகள், கலைகள், தொழில், அறம், கொள்கை, நாகரிகம் முதலானவற்றில் வேறுபாடுகள் உண்டு; இவை ஒன்றுக்கு ஒன்று கலவாதபடி காத்தமலை - விந்தியமலை" என்ற பொருள்பட,

"நிலத்தியலு மொழிவழக்கும் நெறிபலவும்
கலையுணர்வு நீண்ட நாளாய்க்
குலத்தியலும் தொழிலறமும் கொள்கைகளும்
வெவ்வேறாக் குலவக் கொண்டு
நலத்தியலு மறத்தொல்லை நாகரிக
மிரண்டுமிந்த நல்ல நாட்டில்
கலத்தியலு நீரென்னக் கலவாமற்
காக்குமிடை விந்தங் காண்பை!"[36]

என்று கூறுவது, இவரது அடிப்பட்ட கொள்கையைக் காட்டுவதாம்.

வடவர் கொண்ட கேவலாத்துவிதப் பொருண்மையை மறுத்துத் தென்னாடுடைய சிவனையே போற்றும் சித்தாந்த சைவ அத்துவித உண்மையைச் சித்திராங்கதை கூற்றில் வைத்து உரைப்பது[37] சைவ சித்தாந்தக் கொள்கையில் இவருக்கிருந்த பற்றினைக் காட்டுவதாம்.

'உவமை, உருவக அணி'களுக்கும் பஞ்சமில்லை:

"தென்னவர் புகழும் செந்தமிழ்ப் பரப்பும் அன்ன தென்கடல்",

"போரினை விருமபி வாழும் போதகக் களிறுஅன்னான்"
"காவியம் உருக்கொண் டென்னக் களிறுஅன்னான்"
"கோப்பெருந் தேவிபோலச் சாதலால் உய்வன்!"[38]

என்பன உவமைகளிற் சில!

"காதல்இருங் கடல்படிந்து, கவலையெனும்
கரு முதிர்ந்து . . . . .
ஆர்வலர்க்கு அரும்பும் அன்பே
ஆயத்தின் நட்பாம் போதாய்"[39]

என்பன உருவகங்கள்.

கவிதைக்கு 'ஓசைநயம்' இன்றியமையாதது. இம் 'மாரி வாயிலி'ல் அத்தகு பாடல்களும் உண்டு.

"என்மேலது பேதைக்குணம் இயல்பேழையை யன்றோ?
வின்மேவிய படிவத்தோடு விரதத்தையும் விழைவு
தன்மேவிட மின்மேவிறை தனிவிட்டயல் பெயர்வான்
கன்மேவிய நெஞ்சந்தரு லஞ்சங்கரு திலனால்!"[40]

எனும் பாடல் சான்று!

தமிழைப் பல்வேறு அடைமொழிகள் கொடுத்துச் சிறப்பித்தார் இவர்போல் எவரும் இலர் என்று சொல்லுமளவுக்குக் கையாண்டுள்ளார் நாவலர் பாரதியார்:

"தாய்த்தமிழ், தென்மொழி, தீந்தமிழ், தொன்மொழி, சொற்றமிழ், தமிழணங்கு, தமிழ்நங்கை, தமிழ் இறைவி, செந்தமிழ், வளர்தமிழ், நல்லதமிழ், முறையார்தமிழ், வண்டமிழ், வளருந்தரு தண்டமிழ், எங்கள் தமிழ், நற்றமிழ், தென்றமிழ், தெய்வப்பழந்தமிழ், பாண்டியர்தமிழ், நின்றதமிழ், மெய்கண்டதமிழ், வளர்பெரியதமிழ், அமிழ்து எழு தமிழ், தெய்வச் செழுந்தமிழ், முத்தமிழ்" என்பன, இந்நூலின்கண் இவர் எடுத்தாள்வன!

'தமிழ்வணக்கத்'துடன் நூலினைத் தொடங்கியவர், தமிழுக்கெனப் 'பல்லாண்டு' பாடும் புதிய மரபினையும் தோற்றுவித்துள்ளார்.

"நல்லதமிழ் நங்கைவளம் நாடுதுநாம் நாடி
நானிலத்து மேன்மொழிகள் நல்குபல நலமும்
எல்லையறு மெழிலினையாட் கணிந்து மகிழ்ந்தேத்தி
என்றுமிசை வளர்க்குவம்பல் லாண்டுநிதம் பாடி!" [41]

என்பது இவர் பாடும் பல்லாண்டு!

வடநாட்டுப் பார்த்தனுக்கும் தென்னாட்டுச் சித்திராங்கதைக்கும் உள்ள தொடர்பைப் பாடுவதன் மூலம், இவ்விரு பெரும் பகுதிகளும் ஒத்து நின்று ஒருமைப்பாட்டுக்கு உறுதுணை புரிதல் நலம் பயக்கும் என்று இவர் கருதியிருப்பாரோ என எண்ணத் தோன்றுகின்றது. ஆயினும், 'தமிழும் ஆய்ந்து வேண்டளவறிந்துளானாம்!' என்று பார்த்தனைக் குறிப்பிடுவதால், வடவரும் தமிழ் படிக்க வேண்டும்; அங்ஙனம் படித்தால்தான் இவ்விரு பகுதிகளும் ஒருமைப்பாட்டினைப் பெறமுடியும் என்று கருதினாராதலும் வேண்டும்![42]

'மாரி வாயில்' எனும் இந்நூல், 'தமிழ்வணக்கம்' முதலாயின நீங்கலாக 222 பாடல்களே கொண்டதாயினும், இதன்கண் புராணக்கதை, காப்பியச் செய்தி, பன்னூல்களின் தாக்கம், தமிழ் இலக்கண இலக்கிய மரபுகள் ஆகிய பலவும் அமைந்துள்ளன.

இராமாயணத்தில் இராமனால் அனுப்பப்பட்ட அனுமன்; சீதையைக் கண்டு திரும்பி வந்த நிகழ்ச்சியை மனத்திற் கொண்டு காளிதாசர், 'மேகசந்தேசம்' பாடினார் என்பர் அறிஞர்.[43] அந்த மேகசந்தேசத்தைப் பின்பற்றி இம் 'மாரிவாயிலை' யாத்துள்ளார் நாவலர் பாரதியார். ஆதலின் 'மேகசந்தேசம்' நூலுக்கும், இம் 'மாரிவாயிலு'க்குமிடையே, ஏறத்தாழ 14 ஒப்புமைகள் காணப்படுகின்றன. ஆயினும் ஒருசில வேற்றுமைகளும் உண்டு.[44]

இங்ஙனம் பல்வேறு சிறப்புக்களும் அமைந்த இந்நூலினை அறிஞர் பலரும் ஒருங்கே பாராட்டியுள்ளனர்.

"இழுமென் மொழியால் விழுமிய துரைத்தலின்
தோலென மொழிகோ"[45]

என்பர் ஆ. சிதம்பரநாதச் செட்டியார்.

“இம் மாரிவாயிலில் நாவலர் பாரதியாரது ஆழ்ந்த தமிழ்ப்புலமை சுடர்விடுகிறது!” [46] என்பர் க. கைலாசபதி.

“செம்மாந்த நடையும் தேக்கெறிந்த பெருஞ்சுவையும் இக்காவியத்தை ஒப்புயர்வற்றதாய் உயர்த்திக் காட்டுகிறது. உரைநடை யுகத்திலும் காவியங்கள் தோன்ற முடியும் என்பதற்கு இது ஒரு சான்று” [47] என்பர் மா. இராமலிங்கம்.

எல்லாவற்றுக்கு மேலாகத் திரு.வி.க. “இந்நூல், தமிழ் மாரியாகவே தமிழ் நிலத்தைக் குளிர்விப்பது” [48] எனப் போற்றுவது கொண்டு இந்நூலின் தனிப் பெருமையை அறிய முடிகின்றது.

*மங்கலக் குறிஞ்சிப பொங்கல் நிகழ்ச்சி:*

இஃது ஒரு ‘கதை தழுவிய பாடல்’ நூலாகும். தமிழ் வாழ்த்தும், உலக வாழ்த்தும் ஆக இரண்டு பாடல்கள் நீங்கலாக 193 பாடல்கள் கொண்டது இது. சங்க அகப்பாடல் போல், சுட்டி ஒருவர் பெயர் கூறாமல், பொதுவாகத் ‘தலைவன்’, ‘தலைவி’ என்றே நாவலர் பாரதியார் கூறுகின்றார். எனினும், இது, பல்லாண்டு இடைவெளிக்குப் பின் நூலாக்கம் பெற்றமையால், இடையிடையே கதாபாத்திரங்கள் சிலரின் பெயர்கள் இடம் பெற்றுவிட்டன எனலாம்.

திருமணமான தலைவி ஒருத்தி, தன் வாழ்வில் முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சி குறித்துத் தன்தோழிக்குக் கூறுவதாகப் புனையப்பட்டது இது. நாவலர் பாரதியார் இந்நூல் ‘முன்னுரை’யில், “இச்செய்யுள் அகப்பகுதியில், ‘நிகழ்ந்தது கூறி நிலையல்’ என்ற துறையில் தலைவி கூற்றாகும்” என்பர்.

“பொதியமலைச் சாரலில் ‘மங்கலக் குறிச்சி’ என்ற ஓர் ஊர். தைப்பொங்கல் வந்தது. மகளிர் நீராடச் சென்றனர். நானும் சென்றேன்; ஆற்றில் வழுக்கி விழுந்தேன். அப்போது அங்குவந்த காளை ஒருவன், என்னைக் காப்பாற்றினான்” என்று தலைவி கூறுவதாகக் கதை தொடர்கிறது. இடையே பல்வேறு நிகழ்ச்சிகள், சிக்கல்கள்; இறுதியில் பாட்டனார் மூலம், ஆற்றில் அவளைக் காப்பாற்றியவன், அவளுக்கு மாமன் மகனே என்னும் உண்மை அறிந்தாள். பின்னர் இருவர்க்கும் மணம் நிகழ்ந்தது என முடிகின்றது.

இக்கதை, நான்கு தலைமுறையோடு தொடர்புடைய 'நிகழ்ச்சிப் பின்னற்கதை' (Emphasis on an event) எனலாம்.

இந்நூலில் ஒரு கதைக்குரிய கூறுகளான, எதிர்பார்ப்பு நிலை (Suspense), முரண் (Conflict), கரு (Theme), பாத்திரப்படைப்பு (Characterization), சூழ்நிலை (Atmosphere), பின்னோக்கு நிகழ்ச்சி (Flashback) முதலாயின அமைந்துள்ளன எனலாம்.

இவற்றுள், 'கரு' இன்றியமையாதது. இக் 'கரு'வைக் கதாசிரியர் நேரடியாகக் கூறுவதும் உண்டு; குறிப்பாக உணர்த்துவதும் உண்டு. இந்நூலில் நாவலர் பாரதியார், கதைக் 'கரு'வினை நேரடியாகவே உணர்த்தியுள்ளார்.

"வாழ்வு வழங்கும் அறக்காதல
　　வம்பர் விழையங் கழிகாமம்
தாழ்வு தருமதனிற் சிறிதும்
　　சந்தேகம் இல்லை!"

"முன்னை அறம்முடிந்த முடிச்சு;
　　மூர்க்கர் இதையவிழ்க்க முயன்றால்
பின்னை அறம் அழிக்கும் அவரை!"[49]

என்ற அடிகளால் "அறம்வெல்லும், மறம்தோற்கும்" எனும் கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இனி, இந்நூலின்கண், உவமை உருவகங்கள், பழமொழிகள், இலக்கண - இலக்கிய மரபுகள், தொடைநயங்கள், பெண்ணுரிமை, காதல் நிகழ்ச்சி, இயற்கை அழகு, தமிழின் சிறப்பு, சைவசமயக் கருத்து எனப் பல்வேறு சிறப்புக்களும் உள்ளன,

'பெண்ணுரிமை'க்குக் குரல் கொடுத்தவர் நாவலர் பாரதியார். இந்நூலிலும் இதனைக் குறித்துப் பாடுகின்றார்.

"வானாட்டு மாட்சிசொல் மண்ணில்
　　வாழ்வுரிமை பெண்களுக்கு மறுக்கும்
தாநாட்டு நூல்கள் என இகழ்ந்து . . . ."[50]

'காதலை' ப் பற்றி இவர் பாடும் பாடல்களில் ஒன்று:

"அன்பே! எனதுயிர்ப்பெண் அழகே!
அருளின் உருஒளிரும் அறிவே!
இன்பே! எனக்குதவ மலர்விட்
டிறங்கி எழுந்தருளும் திருவே"!

"திங்கள் முகத்தில் மறு இல்லாய்!
தீம்தேன் மொழிதரவும் வல்லாய்!"[51]

இயற்கையை வருணிக்க வருங்கால்,

"வெள்ளை மலரினங்கள் குவிய,
விரிந்து பல நிறவுண் பூக்கள்
கள்ளை உகுக்கமரந் தோறும்
களித்தெழு புட்கள்கல கலக்க
தன்னைப் பசுத்தொழுவில் கன்றைத்
தான் ஊட்ட அம்மாஎன் றழைக்க
நொள்ளைக் குடிஞைமரப் பொந்தில்
நுழையப் புலரிவிளர்த் ததுவே!" [52]

என்று பாடுவது, கம்பனை நினைவுபடுத்துவதாக உள்ளது.

இந்நூலின் தொடக்கத்திலும், தமிழணங்கை வாழ்த்தி வணங்குகின்றார் நாவலர் பாரதியார்.

"பேசும் மனிதருடன் உலகில்
பிறந்து தவழ்ந்துநடந் தோடி
வீசும் பொதியைவளி ஊர்ந்து
வினையும்நினைவுகளும் வேண்டும்
தேசும் இயலிசையும் வளரத்
திகழும் தமிழணங்கை, அறிவு
கூசும் அழகின்மை இனிமை
கூர்அறக் கிழத்தியைத் தொழுவாம்!"[53]

இந்நூல் முன்னர்ச் சுட்டியவாறு, 'கதை தழுவிய பாடல்' என்னும், சாலை இளந்திரையன் கூறுவதுபோல், "கதைக்குரிய எளியநடை இதன்கண் அமையவில்லை. கடுநடைப் பாடல்களை இடம் பெற்றுள்ளன"[54] என்பதும் பொருத்தமே.

செல்வச் செழிப்புள்ள பண்ணையார் குடும்பமொன்றில் நிகழும் நிகழ்ச்சியாகக் கதையைச் சித்திரித்திருப்பதால், செல்வத்தால் எத்தகைய அநீதிகளும் கொடுமைகளும்

நா க்குக்கூடும் என்பதை நாவலர் பாரதியார், மறைமுகமாகச் காட்டிக் காட்டியுள்ளார் என்று கருதவும் இடமுள்ளது![55]

மு. அருணாசலம்பிள்ளை கூறுவதுபோல், இந்நூல், தமிழுக்குக் கிடைத்த ‘ஆய்ந்தாய்ந்து சொற்பெய்து அமைத்த விருந்து’ எனலாம்.

*தொல்காப்பியப் புத்துரை:*

“திராவிட மொழிகளில் காணப்படும் மிகவும் பழமையான நூல்களில் முதன்மையானது தொல்காப்பியம்” என்பர் அறிஞர்.[57] இத்தகு நூலுக்கு அக்காலத்தில் உரைகண்டோர் பலர். அவருள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர் என்போர் குறிப்பிடத் தக்கோராவர்.

“தமிழில் தலைசிறந்தது தொல்காப்பியர் இயற்றிய நூல்” என்பது நாவலர் பாரதியாரின் கருத்து. ஆதலின் இந்நூலின் பால்இவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு என்றால் மிகையன்று. இந்நூலின் பெருமை குறித்துப் பல்வேறு இதழ்களிலும் எழுதியுள்ளார்.

இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராயிருந்தபோது மாணவர்க்குத் தொல்காப்பியப் பொருளதிகாரப் பாடம் நடத்தினார். அப்போது பழைய உரைகளில் விளங்காத பகுதிகளை விளங்க வைத்தார். பொருந்தாத உரைகளை நீக்கிவிட்டுப் புத்துரைகள் கூறினார். உண்மையில் ஊன்றிய உளச் செல்வரான புலவர் சிலர், பொருளதிகாரத்திற்காவது புத்துரை எழுதித் தர வேண்டுமென விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டனர். அதற்கிணங்க நாவலர் பாரதியார், ‘தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை - அகத்திணையியல், புறத் திணையியல், மெய்ப்பாட்டியல்’ எனும் மூன்று இயல்கட்கும், முன்னைய உரையாசிரியர்கள் போல வரன்முறையாக உரை எழுதி வெளியிட்டார்.

தாம் இங்ஙனம் புத்துரை எழுதியதற்கான காரணத்தையும் இவர் விளக்கியுள்ளார்.

"எழுத்தினும் சொல்லினும்விடப் பொருட் பகுதியில் உரைகாரர், தொல்காப்பியர் நூற்கருத்தைப் பல்காலும் பிறழக் கொண்டு மயங்குமுண்மை ஒருவாறு உணரலானேன். பொருளிலக்கணம் தமிழுக்குத் தனிச்சிறப்பாதலானும், அம்முறையில் வரையறுத்து வடித்தமைத்த வடநூல் முடிபுகளின்மையானும், தமிழ் மரபுகள் மொழி வளர்ச்சியின் மெய் வரலாறுகளைக் கருதாமலுரைகாரர் தத்தமக்குத் தோற்றியவாறு வடநூல் முடிவுகளை வலிந்து புகுத்தி இந்நூலொடும் தம்முள்ளும் மாறுபட்டு வெவ்வேறு பொருள் கூறி மயங்க வைத்த பெற்றிமையும் உற்றுநோக்க ஓரளவு வெளியாயிற்று!" [58]

என்பது இவர் கூற்று. எனினும் முன்னைய உரையாசிரியர்களின் கருத்துக்களில் ஏற்புடையனவற்றை எடுத்துக் கொண்டு, போற்றுகின்ற பண்பையும் இவர்பால் காணலாம்.

இவர்தம் உள்ளத்தில், 'தமிழ்-தமிழ் மரபு தமிழ்ப் பண்பாடு!' எனும் எண்ணங்கள் ஆழப் பதிந்திருந்தன. இப்புத்துரை எழுதுவதற்கு இவ்வெண்ணங்களும் காரணமாக அமைந்த எனலாம்,

இவர் கூறும் புத்துரைகளிற் சிலமட்டும் இவண் சுட்டப்படுகின்றன.

(1) "மேலோர் முறைமை *நால்வர்க்கும்* உரித்தே" (அகத்.29) என்பது அகத்திணையியலில் வரும் ஒரு சூத்திரம். இதன்கண் வரும் 'நால்வர்க்கும்'. என்பதற்கு இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் ஆகிய இருவருமே, தம்முள் மாறுபாடான உரைகூறுவர். இவருரைகளை மறுத்து நாவலர் பாரதியார் பின்வருமாறு புத்துரை கூறுவர்:

"நால்வர் என்பதை '***நான்கு வருணத்தார்***' என்று இளம்பூரணரும், வணிகரை விலக்கி வேளாளரை இருவகையராக்கி, அந்தணர் அரசரோடு கூட்டி 'நால்வர்' என நச்சினார்க்கினியரும், தம்முள் மாறிக் கூறுவதும் அவ்விரு கூற்றும் தொல்காப்பியர் கருத்தன்மை காட்டும். தமிழகம், 'முல்லை' முதலிய நானிலமாகத் திணை பற்றிப் பகுக்கப்படும் . . . . அந்நானில மக்களும் திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரொடு அகத்துறைகளில்

கிழவராவர் . . . . . . . . ஈண்டு 'நால்வர்' என்பது ***அந்நாளில மக்களையே*** குறிக்கம் . . . ."[59]

(2) "ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகைமை யான" (புறத்.30)

என்பது புறத்திணையியலில் வரும் ஒரு சூத்திரம். இதற்கு நச்சினார்க்கினியர் கூறும் உரை தமிழ்ப்பண்பாட்டுக்கு முற்றிலும் முரணானது எனக் கண்ட நாவலர் பாரதியார், பின்வருமாறு மறுத்துப் புத்துரை காண்பார்!:

"முதலடிக்கு இவர் (நச்சர்) கூறும் புதுப்பொருள், தமிழறமும் பழமரபும் அழியவரும் இழுக்காகும். '***ஊரிற்பொதுமகளிரொடு கூடிவந்த விளக்கமும் பாடாண் திணைக்குரித்து***' எனக் கூசாது கூறுகிறார். பரத்தை ஒருத்தியேயன்றிப் பலரொடும் வாழ்வாரிருக்கலாம். அன்னாரும் அவ்வாழ்வை நாணாமல் ஊரறியக் காட்டி அதைப் பாராட்டும் உயர்ஒழுக்கமாகக் கருதும் பேதைமைக்கு ஆளாகார்! அவ்வளவு நாணற்ற கீழ்மக்கள் உளராயின், அவர் கயமையைப் பாடாண்திணைக்கு உரித்தெனப் புலவர் தலைவரான தொல்காப்பியர் கொள்ளார்! அக் கயவர் வாழ்வு, 'வரைவிலா மாணிழையார் மென்தோள் அளறாழும் புரையிலாப் பூரியராம் திருநீக்கப்பட்டார் தொடர்பாக, வெறுக்கப்படுவதே தமிழ்அறமரபாய் இருக்க, அதைப் புலவர் புகழ்ந்துபாடும் பீடுசான்ற பாடாண்திணைப் பகுதியாக நச்சினார்க்கினியர் கூறத் துணிந்தது வியப்பாகும். அத்துணிவு, அவர் மதித்த ஒரு சில பிற்காலப் போலிப் புலவர் செய்யுட் போக்கையும், அவர்காலக் கயவர் சிலர் வாழ்க்கையையும் நோக்கி அவர்கொண்டார் போலும்!"

-இவ்வாறு மறுப்பவர்,

"தலைமக்களின் ஊர்ச்சிறப்பும் உயர்குடிப்பிறப்பும் பாடாண்திணையில் பாராட்டுக்குரிய எனக் கூறுவர் புறநாற்புலவர்!"[60]

எனப் புத்துரையும் கூறுகின்றார்.

இவ்வாறே, தொல்காப்பிய மெய்ப்பாட்டியலுக்கும் முன்னைய உரையாசிரியர்கள் பிழைபட உரை எழுதி விட்டனர் என்பதும் நாவலர் பாரதியாரின் கருத்தாம். இவ்வகையில் இவர் கூறுவது வருமாறு:

"ஒருவரின் உள்ளுணர்வுகளுள் மற்றவர் கண்டும் கேட்டும் அறியப் புறவுடற்குறியாற் புலப்படுபவையே இயற்றமிழ்ச் செய்யுளில் 'மெய்ப்பாடு' எனப் பெறும். 'பாட்டு, உரை, நூல்' முதலிய எழுவகைத் தமிழ்ச் செய்யுள் எல்லாம். 'வடவேங்கடம் தென்குமரி' ஆயிடைத் தமிழகத்து முடிவேந்தர் வண்புகழ் மூவர் தண்பொழில் உரைப்பின் நாற்பெயரெல் அகத்து யாப்பின் வழக்குகளைக் கொள்ளாது தமிழ்மரபினையே தாம் கூறுவதாகப் பலவிடத்தும் தொல்காப்பியத்தே வற்புறுத்துவதாலும், தொல்காப்பியர் கூறும் மெய்ப்பா டுள்ளிட்ட செய்யுள் உறுப்பனைத்தும் இயற்றமிழ் மரபு தழுவியவேயாகும் என்பது ஒருதலை! இவ் உண்மைக்கு மாறாகப்பிற்கால உரைகாரர் தொல்காப்பியருக்குக் காலத்தாற் பிந்திய வடஆரியக் கூத்து நூல்களின் கொள்கைகளே தொல்காப்பியரும் கூறுவதாகக் கொண்டு, இவ் இயற்றமிழ் நாற் சூத்திரங்களுள் வடநூல் வழக்குகளைப் புகுத்தி இடர்ப்பட்டுச் சொல்லொடு செல்லா வல்லுரை வகுத்து மயங்க வைத்தார்! சொற்றொடர் சுட்டும் செம்பொருளே, செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத் தொடு மங்கா மரபிற் புலம்தொகுத்த தொல்காப்பியரின் கருத்தாமாறு உணர்ந்து நோக்கின், செய்யுள் உறுப்புக்களுள் ஒன்றாய் எண்ணப்பட்டுச் செய்யுளியலில் தெளிக்கப்பெறும் இயற்குறியாம் மெய்ப்பாடுகளின் வகைகளே இம் மெய்ப்பாட்டியலில் முறைப்பட எண்ணி விரிக்கப்பெறுஞ் செவ்வி இனிது விளங்கும்!"[61]

இவ்வாறு 'மெய்ப்பாட்டியல்' ஏற்பதற்குப் புதிய விளக்கம் தரும் நாவலர் பாரதியார் இவ்வியலில் சில சூத்திரங்களுக்கு முன்னைய உரைகளை மறுத்தும் எழுதியுள்ளார்.

"உடை பெயர்த் துடுத்தல்" (மெய்ப்.14)

என்பது ஒன்று. இதற்குப் பூரணர், "ஆடையைக் குலைத்து உடுத்தல்" என்றும்; பேராசிரியர், "உடுத்த உடையினைப் பலகாலும் அழித்து உடுத்தல்" என்றம் உரை கூறிப் போந்தனர்.

இவ்வுரைகளை மறுத்து,

> "அழியும் உணர்வால் குழையும் உடலில் குலையும் கலையின் நிலையைத் திருத்தி அணிதல்; முன்கட்டி ஆடை நெகிழ்வதை 'மீட்டும் இறுக்குதல்' என்பதே பொருந்திய பொருளாகும். அவ்வாறன்றி, ஆடையைத் தலைவன் எதிரில் தலைவி தானே அழித்துடுத்தல் பெண்ணீர்மை யன்று ஆதலின் அது பொருள்மை தேற்றம்!"[62]

என உரையும் விளக்கமும் தருவர் நாவலர் பாரதியார்.

*ஆய்வுக் கட்டுரைகள்:*

நாவலர் பாரதியார் எழுதிய கட்டுரைகளில் இதுகாறும் கைக்குக்கிட்டியன 82 ஆகும்.

1. தமிழ் இலக்கியம் (சமயம் உட்பட) - 32
2. தமிழ் இலக்கணம், சொல்லாய் - 13
3. தமிழ் மொழி, தமிழ்ப்புலவர், தமிழ்ப்பண்பாடு, தமிழர் நலன்கள் - 25
4. அரசியல் - 8
5. மொழிபெயர்ப்பு - 4

இவை தவிரக் கவிதைகள், அணிந்துரைகள், நூல் மதிப்புரைகள், வாழ்த்துரை, இரங்கலுரை எனப் பலவாகும்.

இவற்றில் பெரும்பாலான கட்டுரைகள், இக்கட்டுரை யாளரின் அரிய முயற்சியால், 'தமிழும் தமிழரும்', 'அழகு', 'திருவள்ளுவர்', 'ஆராய்ச்சி' என்னும் நூலாக்கம் பெற்றுள்ளன.

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு" (குறள்: 423)

எனும் கொள்கையுடையவர் நாவலர் பாரதியார். எதனையும் 'ஏன் எதற்கு?' என்று தமக்குத் தாமே கேள்வி கேட்டு விடை காண்பது இவரது வழக்கம். முன்பே ஒருவர் சொன்னதைத் திரும்பச் சொல்லும் வழக்கம் இவர்பால் காண்டலரிது. எனவே எந்த ஓர் ஆய்வுக் கட்டுரையாயினும்

ஏதேனும் ஒரு புதுமைக் கருத்துக் காண முடியும். இங்கே சில சான்றுகள்:

1. "யாயும் ஞாயும் யாரா கியரோ?" எனம் குறுந்தொகைப் பாடலில் வரும் 'செம்புலப் பெயல் நீர் போல' எனும் உவமைக்கு உ.வே.சா. கூறும் உரையை மறுத்துச், 'செம்புலட் - செவ்விய சமநியம்' எனப் பொருள் கொண்டு, "சமநிலத்தில் பெய்யும் மழை நீர்த் தாரைகள், முன்தொடர்பின்றி வேறிடங்களில் வீழினும் நிலத்தின் சம இயல்பால், ஒன்றை ஒன்று நெருங்கி இரண்டறக் கலந்து ஒன்றுபடும். அதுபோல, வேறு தொடர்பெதுவுமில்லாத நாம் பாலியல்பால் கூடி, நெஞ்சு ஒருப்பட்டுச் சேர்ந்தோம். இனிப்பிரிதலும் நமக்கில்லை!"[63] என்பர் நாவலர் பாரதியார்.

2. கம்பராமாயணத்தில்

"வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு ***மவனுமவ னடிவீழ்ந்தான்***"

எனும் பாடலில், 'அவனும் அவனடி வீழ்ந்தான்' என்னும் தொடருக்கு மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலைத் தலைமைப் பேராசிரியராக இருந்த திரு. திருநாராயாணயங்கார், "***குகன் காலில் பரதன் விழுந்தான்;*** விழுந்த வேந்தனை (வாளா) வேடன் வாரி யெடுத்துத் தழுவினான்" என்று உரை கூறினார்.

"யார் காலில் யார் விழுந்தால் என்ன?" என்றுதான் பொதுவாகப் பலரும் கருதுவர். ஆனால் நாவலர் பாரதியாரோ, 'இவ்வுரை பொருந்தாது' எனக் கண்டு "***பரதன் அடி குகன் பணிதல்*** இயலறமும் உயர்மரபும் ஆவதோடு, குகனுக்கும் அவன் பெருமை குறையாமல் வீறு தரும் முறைமையாகும்!"[64] என்று கூறித் தம் கருத்துக்கு அரணாகப் பல்வேறு சான்றுகளைக் கொட்டுகின்றார்.

இது, 'செந்தமிழ்' இதழில் 'ஓர் எதிருரை' என்ற தலைப்பில் வெளிவந்தது. ஆனால் ஐயங்காரவர்கள் அம்மட்டோடு விட்டாரிலர். தமது கருத்தை நிலைநாட்டி எழுத இவ் இருவரிடையே கருத்து மாறுபாடுகள் தொடர்கட்டுரைகளாக வெளிவந்தன. கம்பராமாயணப் பிரியர்களுக்குப் பெருவிருந்தாக இருந்தன!"[65]

3. தருமன் நல்லவன் என்றே பலரும் கூறுவர். ஆனால் நாவலர் பாரதியாரோ, "மண்ணாசை, பெண்ணாசை எனும் இரண்டிலும் தப்பான, உளங்கொண்டு, நல்லவன் போல நடந்தான்", அத்தகையானைத் 'தருமன்' என்பது கருநிறத்தானை 'வெள்ளையப்பன்' என்றும், 'நச்சுப்பாம்பை' 'நல்லது' என்றும் கூறுவதைப் போன்றது" என்கின்றார்.[66]

4. "அனுமன் ஒரு தூதன்" என்றே கூறுவர் அறிஞர். ஆனால் நாவலர் பாரதியார் இதனை மறுப்பர்.

> "வேந்தன் ஒருவன் வேவுகாரனாய் சீதை இருப்பிடம் அறிந்துவரும் பணிமேற்கொண்ட அனுமனைத் 'தூதன்' என்பது எப்படியாகும்? மேற்கொண்டு சென்ற தொழிலும் தூதன் தொழிலன்றே! கரவாது அறத்தாறு அழுங்காது வேற்றுவேந்தனிடம் தன் மன்னன், 'விடுமாற்றம்' செலச்சொல்லி மீள்வதன்றோ தூதன் துறை? உருக்கரந்து சென்று, அரசனும் அவன் வினைவிலரும் அறியாவண்ணம் தன் எண்ணம் முடிப்பவன் ஒற்றனேயாக வேண்டும்!" [67]

என்பது இவர் கண்ட ஆய்வு.

5. சங்க இலக்கியத்தில், 'சிலம்புகழிநோன்பு' எனும் ஒரு சடங்கு சொல்லப்படும். 'மண வினைக்கு முன்பு, பெண்ணிற்கு நடத்தும் சிலம்பு கழற்றுதலாகிய சடங்கு வகையே சிலம்புகழி நோன்பு" எனப் பலரும் கூறுவர். இதனை மறுத்து நாவலர் பாரதியார் கூறுவது இது:

> "தமிழகத்து மணம் புணர் மகளிர், காலிற் சிலம்பு கழிப்பதில்லை! மணந்தமகளிர் மங்கலக்குறியாய் அணியும் பூண்களுள் சிலம்பு ஒன்றாகும். கலன்கழி கைம்மை எய்தியோர் மட்டுமே அவலக்குறியாய் பிற அணியோடு சிலம்பையும் கழிப்பர்; மணம்புணர் சிறுமியர் மனைபுகுமுன்னர்ப் புகுமனைக் கிழத்தியர், சிலம்பணிகாலைக் கழுவி வரவேற்றல்மரபு .... 'சிலம்பு கழீஇ அயர்தல்' என்பது மனைபுகும் மணமகள் காலை அம்மனைப் பெருமுது கிழத்தியர், மங்கல விழாவாய்க் கழுவி வரவேற்கும் சிறப்பினைச் சுட்டும்!" [68]

நாவலர் பாரதியார் தம் கூற்றுக்கு அரணாகக் குறுந்தொகை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பெருங்கதை,

அகநானூறு, நற்றிணை முதலான பல்வேறு நூற்சான்று காட்டுகின்றார்.

6. "சங்க காலத்துச் சாத்தனாரே, மணிமேகலைக காப்பியம் யாத்தவர்" என்பர் அறிஞர். ஆனால் 'சங்கப்புலவர்-சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை பாடியவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாராவர். இவ்விருவரும் வெவ்வேறான புலவர்கள்" என்பது நாவலர் பாரதியார் கருத்து.[69]

7. திருக்குறளில் உள்ள முதல் நான்கு அதிகாரங்களைப் 'பாயிரம்' என்பர். நாவலர் பாரதியாரோ, "தொல்காப்பியர் கூறும் 'புறநிலை' வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறூஉ ஆகும்" என்பர்,[70]

8. தொல்காப்பியத்தில், 'வடவேங்கடம் தென்குமரி' எனும் பாயிரத்தில் வரும் 'குமரி' என்பதற்கு, 'மலை' என்றும், 'கடல்' என்றும் பொருள் கூறுவர். நாவலர் பாரதியார், 'பழங்குமரி, மலையுமன்று; கடலுமன்று; யாறே ஆகும்" என்று சான்றுகளால் நிறுவுவர்.[71]

9. 'சிவன்' என்பது வடசொல் என்று கூறுவர் சிலர்.

> "சிவன் என்பது நல்ல தமிழ்ச் சொல், 'செம்மை, செவ்வை, செவ்விது' என்று வழங்குவ எல்லாம் தனித்தமிழ்ச் சொற்களாவது வெளிப்படை"[72]

என்று கூறுவர் நாவலர் பாரதியார்.

10. மெய்கண்டார் அருளிய 'சிவஞானபோதம்' தமிழில் தோன்றிய தனி முதல் நூல்; அதன் மொழிபெயர்ப்பே, வடமொழிப் 'போதம்' ஆகும்.[73] என்றும் இவர் கூறுவர்.

11. கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப் பாலை யின் தலைவன், சோழன் கரிகாற் பெருவளத்தான் என்றே பலரும் கூறுவர். ஆனால் இவரோ, "கரிகாலனல்லன், அவனின் மகனாகிய திருமாவளவன்" என்பர்.[74]

12. கால்டுவெல் துரைமகனார் "வேற்றுமை வகை, தமிழுக்கு வடமொழி வந்த நன்கொடை" என்ற

கொள்கையுடையர். இதனை வன்மையாக மறுப்பவர் நாவலர் பாரதியார்.

> "எண்ணாற் பெயர் கொளல், வடமொழி போன்ற சிலமொழி இயல்பு; பொருளாற் பெயர் கொளல், இலத்தீன்முதலிய மேல்புல மொழி முறை; உருபாற் பெயர் கொளல், அடிப்பட்ட தமிழ்மரபு" தமிழ்ச்சான்றோர், அவ்விரு முறைகளினும் அடிப்பட்ட உருபுகளால் வேற்றுமைகளுக்குப் பெயரிடுதல் இயலடைவில் ஏற்றதெனக் கண்டு கொண்டார்"[75]

எனச் சான்று காட்டி நிறுவுவர்.

13. இறையனார் களவியலில்

> "இரவு மனையிகந்த குறியிடத் தல்லது
> கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை" (21)

எனவரும் நூறபாவுக்குப் பழைய உரைகாரர் "இரவின்கண் மனையகத்து நீங்கிய, குறிக்கப்பட்ட இடத்து அல்லது, தலைமகற் சேர்தல் தலைமகட்கு இல்லை" என்று பொருள் கூறுவர். இவ்வுரையே தொன்றுதொட்டு வழங்கிவருவது. ஆனால் நாவலர் பாரதியார்,

> "இது (இப்பொருள்) அகப்பொருள் நூலின் அடிப்பட்ட மரபுக்கும், அறிவுக்கும் வழக்குக்கும் முற்றிலும் மாறாக முரணுகிறது. மானம் பேணும் குடியில் வளர்ந்த மணவாத பெண்கள் எவளும் கற்புறக் களவில், காதலனைக்கூட இரவில் கூசாமல் தன் மனை வரைப்பைக் கடந்து புறம் பெயர்ந்து போகத் துணியாள். அறக் காதலோடு அவள் நலம் விரும்பும் ஆண் மகன் எவனும் இரவில் 'இல்' இறக்கத் தன் தலைவியைத் தூண்டான் இந்நூற்பாவில் '**மனையகத்த**' என்றிருந்த மூலபாடம் ஏடு பெயர்த்தெழுதியோரால் தவறுபட '**மனையிகந்த**' என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். தொல்காப்பியர் கருத்தொடு நோக்க, மனையகத்த என்பதே சரியான பாடம்" [76]

என்றுஓ கூறுவது தமிழ்ப் பெண்களின் நீர்மையைச் சுட்டுவதாக உள்ளது.

மேலும் இவர் எழுதிய கட்டுரைகளை ஆழ்ந்து நோக்கினால் தமிழ்ச்சிந்தனை, தமிழர் மேம்பாடு, தமிழ்ப்புலவர் பெருமை, தமிழ்வளர்ச்சிக்கான வழிகள், பெண்டிர்மரபு மாண்பு, தமிழர் - ஆரியர் வேறுபாடுகள் எனப் பல்வகைக் கருத்துகளையும் காணலாம். [77]

*மொழிப்போர்:*

நாவலர் பாரதியார், தமக்கு நினைவு வந்த நாள் தொடங்கித் தமிழ் மீது ஆராக் காதலுடையவராய்த் திகழ்ந்தார். அஃது அவரது வாழ்நாள் முழுதும் சுடர்விட்டுக் கொண்டிருந்தது.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தினஆண்டு விழா, அக்காலத்தில் பல்வேறிடங்களில் கொண்டாடப்பட்டது. அம்முறையில் அதன் **16** ஆவது ஆண்டுவிழா, **24, 25, 26-8-1917** ஆகிய மூன்று நாட்கள் திருநெல்வேலியில் நிகழ்ந்தது. அக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நாவலர் பாரதியார் தமிழைக் குறை கூறிக்கொண்டிருந்தவர்களைக் கண்டித்துத் தமிழின் சிறப்பை எடுத்துரைத்தவர். [78]

தமிழர்கள வடமொழி மோகம் கொண்டு திரிந்த அவல நிலைகுறித்து இவர், **1945** திசம்பரில் கரந்தைத் தமிழ்ச்சங்கப் பெருமன்றத்தில் உரைநிகழ்த்துங்கால் "இடைக்காலத்தில், தமிழர்கள், மானத்தை மறந்து, ஆரிய மொழியில் இருந்தாற்றான் பெருமை என எண்ணி மக்கள் பெயர் முதல் மரப்பெயர் ஈறாக உள்ள எல்லாப் பெயர்கட்கும் வடமொழிப் பெயர்களையே இட்டு வழங்கலாயினர்!" என்று தமிழர்க்கு நேர்ந்த கேட்டினைக் குறிப்பிட்டவர் வடமொழியில் உள்ள நல்லனவற்றை மேற்கொண்டு அல்லனவற்றைக் கல்லாமல் தம் தூய தமிழ் நெறியை அறவே மறந்தனர் என வருந்தியுரைப்பதும் நோக்கத்தகும்.

> "தமிழின் வளர்ச்சிக்குக் கேடு செய்வதாகிய சேர்க்கை நம் தமிழகத்தில் சுமார் **1500** ஆண்டுகட்கு முன்பே வந்து தோன்றிற்று. அது தோன்றுவதற்கு முன் தமிழ், மிக்க வளமும், சீரிய நாகரிகமும் பெற்றே இருந்தது. தமிழரது நாகரிக வர்ழ்க்கையில் தேர்ந்து சிறந்த ஆரியருடைய கலப்பு அக்காலத்தில் உண்டாயிற்று. அவ் ஆரியருடைய பாஷை, சமூகம் முதலியவற்றுக்கு இடமாகிய

சமஸ்கிருதத்தில் காணப்படும் நன்மைகளை மேற்கொண்டு, அவற்றை மட்டில் நம் தமிழ் மொழியில் தழுவி தமிழ் மாண்பினை வளர்த்துக் கொள்வதை விடுத்து அந்தச் சமஸ்கிருதத்தையே பின்பற்றி, தம் தூய தமிழ் நெறியை விடுத்துவிட்டனர்! இதனால் ஆபாசப் பொய்க்கதைகளும் பொய் யொழுக்கங்களும், தமிழ் மொழிக்கும் பொருந்தாத இலக்கிய இலக்கணங்களும் எழுந்து, தமிழர்களின் இயற்கை அறிவைக் கெடுத்து, தமிழன் என்பதையும் மறந்து, கெடுமாறு செய்துவிட்டன. இவ்வகையில் தமிழர்கள் தங்கள் பண்டைத் தமிழ்ச் செல்வங்களையும், நாகரிக இயல்புகளையும் இழந்தனர்."[79]

எனத் தமிழரின் தற்கால நிலை குறித்து, வட ஆற்காடு மாவட்டத் தமிழர் மாநாட்டுத் தலைமையுரையில் வருந்தி உரைக்கின்றார்.

"தாய்மொழியில் உயர்தரக்கல்வி" குறித்துக் கடந்த 50 ஆண்டுகளாகவே பேசப்பட்டு வந்தும், நடைமுறைக்கு இதுகாறும் வராதது வருந்துவதற்குரித்து. இது குறித்து நாவலர் பாரதியார், திருச்சி வானொலியில் 20.5.1948 இல் பேசியது, இன்றைக்கும் பொருந்துவதாக உள்ளது!:

"கல்வியும் தாய்மொழியில் பயில்வதே தெளிவும், திட்பமும் எளிதில் உதவும். பிறிதொரு மொழியினால் அறிவு பெற வேண்டின், தாய்மொழிப் பயிற்சி தானே குறையும். பிறமொழிக் கல்வியும் பெருகி வளராது. தாய்மொழி தன்னையே படிக்க இயலாதிருக்க, அயல் மொழிக் கல்வியைப் படிக்க முயல்வரோ?... எந்த நாட்டிலும் எக்காலத்திலும், எல்லோரிடையுமே அவரவர் தாய் மொழிக் கல்வியே தழைக்கக் காண்போம்!.

பிறமொழிச் சொற்களை எடுத்தாளுகையில், தமிழ் எழுத்தியல்பு, மொழி மரபு எதுவும் பிறழ விடாமல் மாற்றி வழங்கலாம். மொழி இயல் மரபொடு, முழுதும் முரண எழுத்தையும் சொல்லையும் புகுத்துதல் வழுவாகும்!"[80]

என்பது இவர் கூற்று.

### மொழிப் போர்

நாவலர் பாரதியார் ஆற்றிய தமிழ்த் தொண்டுகளில் எல்லாம் தலையாயது, கட்டாய இந்தியை எதிர்த்தும் களம் கண்ட செயலாகும்.

மதுரையில் அக்காலத்தில் திங்கள் ஒன்றுக்கு ஆயிர ரூபாய்க்கும் குறையாமல் வழக்குத் தொழிலில் வருமானம் பெற்ற நிலையையும் பொருட்படுத்தாது, அண்ணாமலைச் செட்டியாரின் விருப்பத்திற்கு இணங்க, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் பொறுப்பில் திங்கள் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய் ஊதியத்தில் அமர்ந்தார், நாவலர் பாரதியார் எனின், இதற்கு இவர் தமிழின்பால் கொண்டிருந்த அளவற்ற பற்றே காரணம் எனலாம். 1933 முதல் 1938 வரை இப்பொறுப்பிலிருந்த இவர், பாடம் நடத்தும் முறையாலும் மாணவர்பால் அன்போடு பழகின பண்பாலும், பிற ஆசிரியர்களை மதிக்கும்வகையிலும் இன்னபிறவற்றாலும் அனைவரின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். இவர்பால் தமிழ் பயின்ற மாணவர்களில் பெரும்பாலோர் பிற்காலத்தில் தமிழ்ப் பேராசிரியர்களாகவும், கல்லூரி முதல்வர்களாகவும் ஆராய்ச்சி அறிஞர்களாகவும் இருந்து, ஆயிரக்கணக்கான தமிழ்மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

இவரின் தலைமாணவராயிருந்து இவரது தலைமையின் கீழ் அதே பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்து பிற்காலத்தில் தியாகராசர் கல்லூரி முதல்வராக விளங்கிய முனைவர் அ. சிதம்பரநாதச் செட்டியார் தம் ஆசிரியப் பெருந்தகை பற்றிக் கூறுவது இங்கு எண்ணத்தகும்!

"அவருடைய (நாவலர் பாரதியார்) மாணவர்களாக இருந்து பயனுற்ற பலர் வாழையடி வாழை எனத் தமிழ் ஆர்வம் மிக்க மாணவர் குழாத்தினராய் அமைந்து உருவாகியுள்ளனர். பாரதியார் அவர்களிடமிருந்து நான் கற்றதை, என்னிடமிருந்து திருவாளர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன், அ.ச. ஞானசம்பந்தம் போன்றவர்கள் கற்றுத் திறம்படப் பெருக்கித் தமிழ் நாடெங்கணும் வழங்கிவருவது பலர் அறிந்த செய்தி ....... அக்காரணத்தினால் தமிழுக்கு இழிவும் வராமற் பாதுகாப்பதற்கு ஒரு பெரும்படை நம்நாட்டில் திரளும் என்பது எதிர்பார்க்கக் கூடியதுதானே!"

என்று கூறுவது கொண்டு நாவலர் பாரதியார் தமக்குப்பின்னே தமிழைக் காக்க எத்தகு மாணவர்களை உருவாக்கினார் என்பது புலனாகும். ஆனால் இத்தகு நிலை இன்று உள்ளதா என ஒவ்வொரு தமிழாசிரியரும் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

நாவலர் பாரதியார், பேராசிரியராக இருந்தபோது தான் இந்த எதிர்ப்புப்போர் மூண்டது.

1937இல் காங்கிரசுக் கட்சி அமைச்சரவை அமைத்தபோது, சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த மாண்புமிகு இராசகோபாலச்சாரியார், தமிழகப் பள்ளிகளில் இந்தி மொழியைக் கட்டாயமாக ஆக்கும் திட்டத்தைக் கொண்டுவந்தார் நாவலர் பாரதியார் காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவரே யாயினும், அப்போது நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசே வெற்றி பெற வேண்டும் என்று பெரும்பான்மையான வாக்குச்சீட்டுகளை வாங்கித்தந்தவரேயாயினும் இராசகோபாலச்சாரியார் அவர்களுக்கே, தம் சொந்த வாக்குரிமைச் சீட்டை அளித்தவரேயாயினும், அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் சிலரை "இந்தி பிரச்சார சபை" யின் வாணாள் உறுப்பினர்களாகச் சேர்த்தவரேயாயினும் "***தமிழுக்கு ஊறு நேரும்***" என்ற ஒரே காரணத்தால் ***கட்டாய இந்தித் திட்டத்தை*** எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார். இவரைப் பின்பற்றிப் பிற தலைவர்களும் இந்திமொழிக் கட்டாயத்தை எதிர்த்து மாபெரும் அறப்போர் ஒன்றைத் தொடங்கிவிட்டனர். இதனால் தமிழ் நாடெங்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி வலுத்தது.

"இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம் - நீங்கள்
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழுக்குத் தீமை வந்தபின்னும் - இந்தத்
தேகம் இருந்தொரு லாபமுண்டோ?"[81]

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், தமிழர்களைத் தட்டி எழுப்பினார், கவிஞர் கண்ணதாசன் ஒருபடி மேலே சென்று,

"தமிழனுக்குச் சூடில்லை சொரணை யில்லை!
தன்முன்னோர் வகுத்தவழி நினைவு மில்லை!"

"பிள்ளை மனம் கெடுப்பதற்கே இந்தி யென்னும்
பிய்ந்த செருப்பினை எடுத்துத் தமிழர் சேயின்
உள்ளமதிற் கட்டாயம் புகுத்த வென்று
உரைத்ததனைக் கேட்டவர்கள் துடித்தார் மாதோ!"[82]

என வீர முழக்கமிட்டார்.

இந்தியை எதிர்த்து ஆங்காங்கே சொற்பொழிவுகள் மாநாடுகள் நிகழ்ந்தன. அவற்றில் எல்லாம் நாவலர் பாரதியார் கலந்து கொண்டார். 20-11-1937இல் கரூரில் 3000 பேர் கலந்து கொண்ட இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் நாவலர் பாரதியார் மூன்று மணி நேரம் பேசியுள்ளார். சென்னை மாநகரில் 5,6,9,1937இல், நடந்த 'இந்தி எதிர்ப்புமாநாடு' குறிப்பிடத்தக்கது. இதில் சாதி, மத, கட்சி வேறபாடின்றித் தமிழ் மக்கள் அனைவரும் திரண்டு கூடினர். முதல் நாள் நாவலர் பாரதியார் தலைமை தாங்கினார். அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டவைகளில் பின்வரும் இரண்டு தீர்மானங்கள் குறிப்பிடத்தக்கவை:

(1) பள்ளிகளில் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக அரசாங்கத்தார்வைக்கப் போவது தமிழ்மொழி வளர்ச்சிக்கும், தமிழர் நாகரிகத்திற்கும் கேடு செய்யுமாதலால்சென்னை நகர மக்கள் கூட்டிய இப்பொதுக்கூட்டம் அதனை வன்மையாகக் கண்டிக்கிறது!ணி

(2) சட்டசபைகளிலும் நீதிமன்றங்களிலும் அரசியல் அலுவல் கூடங்களிலும் *தாய்மொழியாகிய தமிழ் மொழியிலேயே* எல்லாக்காரியங்களும் நடைபெறுதல் வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறது!"

இம்மாநாட்டில் நாவலர் பாரதியார் தம் தலைமையுரையில்,

"இந்திமொழி கட்டாயப் பாடமாக்குவதைத் தமிழ் மக்கள் முழுவன்மையோடு கண்டித்து ஒழிக்க வேண்டும். அதுவே தமிழர் வீரமுடையர் என்பதைக் காட்டும், அவ் *எதிர்ப்பினால் ஏதாவது கேடு வருமானால் அதனைப் பெற நான்முன்னணியில் இருப்பேன்!*"[83]

என்று கூறினார் என்றால், இவர்தம் தமிழ்ப்பற்றுக்குப் பிற சான்று வேண்டா!

இவ்விடத்து மற்றொரு நிகழ்ச்சியைக்குறிப்பிடல் வேண்டும், ஒரு சமயம் நாவலர் பாரதியார் தாம் பிறந்த எட்டையபுரத்தில் இந்தி எதிர்ப்புக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார், கி.ஆ.பெ. விசுவநாதத்தின் சொற்பொழிவு

நிகழ்ந்தது. அப்போது 'இந்தி' ஆதரவாளர்கள் மேடை நோக்கிச் சரமாரியாகக் கல் எறியத் தொடங்கினர். நாவலர் பாரதியாரையும், கி.ஆ.பெ.யையும் நான்கைந்து ஊர்க்காவலர் அருகிலிருந்த தகரத் தாழ்வாரத்திற்கு அழைத்துச் சென்று காவல் காத்தனர். எனினும் கல்லெறி ஓயவில்லை. இவ்விருவர் தலையிலும் காயம் உண்டாகிக் குருதி வழிந்தது![84]

ஆங்கிலப் பேராதிக்கத்தை எதிர்த்துப் பேசிய போது கூட அடி வாங்கினாரல்லர் நாவலர் பாரதியார். ஆனால் தமிழராட்சியில், தமிழ் காக்கும் கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காகத் தாம் பிறந்த மண்ணிலேயே, தம் இனத்தவராலேயே கல்லடி பட்டார் என்பது வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொன்றாகும்!

எனினும் ஆச்சாரியார், கட்டாய இந்தித் திட்டத்தைக் கைவிடவில்லை. எனவே நாவலர் பாரதியார் 25-10-1937இல், அவருக்குத் 'திறந்த மடல்' ஒன்றை எழுதி அவருக்கு அனுப்பிய தோடன்றி அதனைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிட்டு அனைவருக்கும் வழங்கினார். இந்நீண்ட மடல் மூலம் தமிழின் சிறப்பும், தமிழர் மீது இவர் கொண்டுள்ள பேரன்பும், இந்தி மொழியால் தமிழுக்கு எவ்வாறு எல்லாம் கேடுவரும் என்பதும் தெரியவரும்.

எனினும் ஆச்சாரியார் அசைந்து கொடுக்கவில்லை. எனவே இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி வலுப்பெற்று நாளடைவில் அரசியல் கிளர்ச்சியாக வெடித்தது. தந்தை பெரியாரின் தலைமையில் நடந்த இது, தமிழகம் எங்கும் காட்டுத்தீயாகப் பரவிக் காங்கிரசு ஆட்சியே கவிழும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது!

அப்போது சென்னை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் ஆவார். எட்டையபுரத்தில் நாவலர் பாரதியாரும், கி.ஆ.பெ.யும் கல்லடிபட்டது பற்றிச் சரமாரியாகக் கேள்விக்கணை தொடுத்தார். அப்போது இராசாசி, இந்தியை எதிர்ப்பவர்கள், ஈ.வெ.ரா.வும் இன்னுமொரு பாரதியும் ஆகிய இரண்டு பேர்கள் தானே? என்றார். அதுகேட்ட பன்னீர் செல்வம், சிங்கம்போல் எழுந்துநின்று 'நன்றுசொன்னீர் பெரியவரே! அதிலேகூட நல்ல மெஜாரிட்டியினை நான் காண்கிறேன். இந்தியை இன்று எதிர்ப்பவர்கள் இருவர்

என்றால் அதனைக் கொண்டு வந்தவர் நீர் ஒருவர் தாமே' என்று காரசாரமாகக் கூறினார்.

இவ்வாறு கூறிய அதே இராசாசி பின்னர்ப் "புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் வந்து கொண்டே இருக்கின்றார்கள், 'என் செய்வேன்' என்று வருந்துமளவுக்கு வந்துவிட்டது.

> "இந்தியை எதிர்ப்பவர்களைப் போலீஸ் படை கொண்டு நசுக்க வேண்டும் என்று விளம்பரத்துறை அமைச்சர் இராமநாதன் கூறினார். அதற்கெல்லாம் நாவலர் பாரதியார் அஞ்சினார் இலர்."[85]

இத்தகு ஆற்றல்மிக்க மொழிப்போரின் விளைவால் 1939 அக்டோபர் 27இல் "பள்ளிகளில் இனி இந்தி இல்லை" என நாடாள்வோர் அறிவித்து விட்டனர்.

இவ்வாறு மொழிப்போரில் ஈடுபட்டவர் என்பதனாலும், இராசகோபாலாச்சாரியார் அவர்களை எதிர்த்தவர் என்பதனாலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணியினின்றும் நாவலர் பாரதியார் விலக நேர்ந்தது என்பதைக் கவிஞர் முடியரசன் குறிப்பினால் புலப்படுத்துவர்.[86]

இதனைக்குறித்து நாவலர் பாரதியார் 27-5-1950இல், கோவையில் நடந்த "முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டி"ல் பேசும்போது,

> "அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், என்னுடைய ***வேலையை ராஜினாமா செய்துவிட்டு*** இந்தியை உங்களுடன் (திராவிடர் கழகத்தார்) எதிர்த்தேன். எடுக்கப்பட்ட இந்திச் சனியனைமறுபடியும் கொண்டு வந்து நுழைத்தது யார்? தமிழ் மந்திரியாயிருந்த அவினாசிலிங்கம் செட்டியார் 'தான் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். சர்க்காரைத்தாக்கி உண்மைகளைப் பேசுகிறேனே என்று ***என்னை அரசியலார் சிறையிலே தள்ளினாலும் தள்ளலாம். அதற்கு நான் அஞ்சவில்லை.***"[87]

என்று குறிப்பிட்டது இவரது பேராண்மைக்குச் சான்றாகும்.

இதுபற்றியே பேரறிஞர் அண்ணாவும்,

"கல்லூரி வகுப்பறையில் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறையில், சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு மேலே கிறுகிறுணி வென மின்விசிறி சுழன்றாட, "விரித்த ஏட்டில் தெரிந்த செய்தி இதுணி என்று நீட்டி முழக்கி, ஆராய்ச்சி செய்துகொண்டு, இதுவே இன்பம் ஈடு இதற்கு ஏது? என்று இருந்திருக்க வேண்டிய அந்தப் பேராசிரியர் (நாவலர் பாரதியார்) குகை விட்டுக் கிளம்பிய புலி எனப் போர்க்கோலம் கொண்டு ஊரை நாடி, மக்களைக் கூட்டி, உரத்தகுரலில் உறங்கிடுவோர்க்கும் உணர்ச்சிவரும் வகையில், தமிழின் தன்மையை - அதன் சிறப்பை, அதனை அழிக்கவரும் பகையை - அந்தப் பகையை வெல்ல வேண்டிய இன்றியமையாமையை எடுத்துச் சொன்னார். அவர் ஆற்றிய தொண்டினைக் கண்டு வியக்கின்றோம்!"[88]

என்று புகழ்வாராயினார்.

"அடலேறுத் தோற்றம் கொண்டவரும், இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் அயராது பாடுபட்டவருமான நாவலர்சோமசுந்தர பாரதியார்"

என மாண்புமிகு *கலைஞர்* பாராட்டுவார்.[89]

நாவலர் பாரதியார் தம்மையொத்த பிற புலவர்களைப் போற்றிப் பாராட்டும் பண்பினர். "அமரகவி" எனப்போற்றப்படும் தம் இளமைக் காலத் தோழர் சி.சுப்பிரமணிய பாரதியாரின் தொடக்க காலத்துச்சுவையான பல்வேறு வரலாற்று உண்மைகளை முதன்முதலில் கூறிய சிறப்பினர். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்தபோது மதுரையில் வாழ்ந்த மு.ரா.அருணாசலக் கவிராயருக்குத் திங்கள்தோறும் ஐந்து ரூபாய் பணவிடை மூலம் அனுப்பி வந்தார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செயலாளராகவும் இருந்தவர். இவரது காலத்தில்தான் நெருப்பினால் சேதமடைந்த கட்டிடம் பழுது பார்க்கப்பட்டது. இவ்வாறு இவர் செய்தன எண்ணில் பலவாம்.

*பெரும்புகழும்*

ஒருமுறை திருநெல்வேலிக்கு வருகை புரிந்த கவி இரவீந்திரநாத் தாகூரை நாவலர் பாரதியார் சந்தித்து

மகிழ்ந்தார். அப்போது "இவரை (நாவலர் பாரதியார்)ப் போன்றவர்கள், விசுவபாரதிக்கு வரக்கூடுமானால் மிக நன்றாயிருக்கும்"[90] என்று கூறினார் என்றால், நாவலர் பாரதியாரின் நுண்மாண் நுழைபுலத்தை அவர் நன்கு அறிந்திருப்பார் என்று கருத வேண்டியுள்ளது.

இவரது தொடக்க காலததில் இவர்தம் பெருமை தெரிந்து தக்கபடி போற்றவில்லை என்பதைப் 'பாரதி' இதழாசிரியர் நாராயணசாமி கூறுவதனால் உணரலாம்.

> "தமிழர்கள் இவரை (நாவலர் பாரதியார்) ஏற்றவாறு ஊக்கியிருப்பின், என்றோ இவர் தமது சட்டப் புஸ்தகங்களைத் தூக்கி எறிந்துவிட்டுத் தமிழ்க்கடலில் ஆழ்ந்து, நம்மவர்களின் தமிழ்த் தாகத்திற்கு, தமிழமிர்தப்பானப் கொடுத்துக் கொண்டே வந்திருப்பார். கவி ரவீந்திரர் ஏற்படுத்தியிருக்கும் சாந்தி நிகேதனம் என்னும் விஸ்வபாரதிக்குத் தமிழர் ஏராளமாய்ப் பொருளுதவி செய்திருப்பின் தமிழுககாகவும், தமிழர் கலைகளுக்காகவும் ஒரு பீடம் அங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும். அந்தப் பீடத்திற்குப் பேராசிரியராய் இவரே சென்றிருப்பார். இவரைத் தவிர்த்து வேறுயார் அதற்குத் தகுதி?"[91]

எனினும் நாவலர் பாரதியார், தாம் வாழ்ந்த காலத்திலேயே புகழ் ஏணியின் உச்சிக்கும் சென்றுவிட்டார்.

ஈழ நாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் இவரை மூன்று முறை அழைத்துச் சிறப்பித்தனர். முதன்முறையாக இவர் 1930இல், அங்குசென்று சர். இராமநாதன் விருப்பத்திற்கிணங்கப் பல்வேறிடங்களிலும் தமிழ் இலக்கிய விருந்து நல்கினார். பின்பு, 1936இல் இரண்டாம் முறையாகச் சென்று பல இடங்களிலும் சொற்பெருக்காற்றினார். அடுத்து 'ஈழ நாட்டுத் தமிழ்ப் புலவர் மன்றத்'தின் அழைப்புக்கிணங்க 1944ஆம் ஆண்டில் அங்கு சென்றார். அப்போது அம் மன்றம் அவரது தமிழ்ப்பணியைப் போற்றுமுகமாக 'நாவலர்' என்னும் நற்றமிழ்ப்பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியது. அன்று முதலே 'சோமசுந்தர பாரதியார்' 'நாவலர் பாரதியார்' எனப் பெருமையுடன் அழைக்கப் பெற்றார்.

"ஈழ நாட்டுப் புலவர்களால் பட்டமளித்துப் பாராட்டப் பெற்ற ஒரே ஒரு தமிழ்நாட்டுப் புலவர் நாவலர் பாரதியார் அவர்களே"

எனக் கா.பொ.இரத்தினம், பெருமையாகக் கூறுவார்!

அடுத்து மதுரைத் திருவள்ளுவர் கழகம் 1954இல் கருமுத்து. தியாகராசச் செட்டியார் தலைமையில் கணக்காயர் எனும் கவிமிகு பட்டமளித்துப் பொன்னாடை போர்த்திப் பாராட்டியது.

பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தனது வெள்ளிவிழாவின் போது (9-2-1955) நாவலர் பாரதியாருக்கு 'டாக்டர்' (D.Litt) என்னும் பட்டமளித்துச் சிறப்புச் செய்தது. அப்போது பல்கலைக்கழகத் துணைவேந்தர் சர் சி.பி.இராமசாமி ஐயர் அவர்களும், பட்டம் வழங்கிய வேந்தர் - சென்னைமாநில ஆளுநர் மேதகு ஸ்ரீபிரகாசா அவர்களும் போற்றிய புகழுரைகள் நாவலர் பாரதியார் செய்த நற்றமிழ்த் தொண்டினை எடுத்துரைப்பனவாம்!

இதன்பின்னரும் நாவலர் பாரதியாருக்குப் பாராட்டு விழாக்கள் எடுக்கப்பட்டன. அதை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 28-2-1955இல், இராசா சர் மு.அ.முத்தையாச் செட்டியார் தலைமையில் இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பாமாலை சூட்டி மகிழ்ந்தது,. சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 22-6-1957இல் தனது 5ஆவது மாநாட்டின்போது இவருக்கு வெள்ளிக் கேடயம் வழங்கிப் போற்றியது. 27-8-1959இல் மதுரையில் தமிழ் அன்பர்கள் கூடி நடுவர் பெருமைமிகு மகராசபிள்ளை தலைமையில், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில், இவரது 80ஆவது ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது.

அவ்விழாவில் இவர்

"நான் இன்னும் வாழவே விரும்புகின்றேன், காரணம்
**தமிழுக்குத் தொண்டு செய்யவும்,**
**தமிழுக்குக் கேடு செய்பவர்களை**
**விரட்டியடிக்கவுமேயாம்!"**

என்றார். இங்ஙனம், நாட்டுக்கும், தமிழினத்துக்கும் நற்றமிழ் மொழிக்கும் ஒருசேரப் பாடுபட்ட நாவலர் பாரதியார் தம்

எண்பத்தோராம் வயதில் *14-12-1959*இல் புகழுடம்பு எய்தினார்!

நாவலர் பாரதியாரின் மறைவு குறித்துப் புலம்பியோர் பலர்; இவர்தம் தொண்டுகளை நினைவுகூர்ந்தோர் பலர். அவருள் ஒருசிலரின் கருத்துக்கள் இங்கே சுட்டப்படத்தகுவன:

"தமிழ் வயலில் இந்தி மாடு புகுந்துள்ள இந்த வேளையில் தமிழ்க்களஞ்சியத்தில் தில்லித் திருடன் புகுந்துள்ள இந்த வேளையில், தாய்மொழியின் ஒவ்வொரு சொல்லையும், 'வடசொல்' என்று கூறிச் சில தமிழரே தமிழின் பகைவனிடம் கெஞ்சிக் கூத்தாடும் இந்தக் கசப்பான வேளையில், 'வானொலி' என்ற தமிழ் வேண்டாம். 'ஆகாஷ்வாணி' என்ற அயல் மொழியே வேண்டும் என்று கூறுவானை, அரசினரே தட்டிக்கொடுக்கும் வருந்தத்தக்க இந்த வேளையில், 'கோயிலில் தமிழ் வழிபாட்டு முறை வேண்டாம். வட மொழியிலேயே இருக்கட்டும், என்று ஆளவந்தார்களே அறிவற்று உளரும் இந்த வேளையில் *தமிழரின் தமிழ்ப் பாசறை* - ஒரு தமிழ்ப் படைத் தலைவனை இழந்தது! தமிழர் தலைவரின் சிறிய பட்டியலிலிருந்து ஒரு பெரிய புள்ளி, *சோமசுந்தர பாரதியார்* பெயர் இப்போது இல்லை. நினைத்தால் நெஞ்சம் கொதிக்கிறது! ஆறுதல் கூற எவராலும் முடியாது. 'அவர் போனால் மற்றும் வீரர் பலர் இருக்கிறார்கள்' என்று என் நெஞ்சம் எனக்கு அமைவு கூற முற்படலாம்; ஏற்கத்தக்கதன்று! சோமசுந்தரபாரதியார் முழுத்தமிழன்! தமிழனுக்கே பிறந்தவன்; தமிழ் ஆராய்ந்தவன்; *தமிழுக்குக் கேடு நேர்ந்தால் உயிரையும் பொருட்படுத்தாதவன்;* பகைவனைப் பகைக்கத் தெரிந்தவன், அஞ்சாமை உடையவன்- ஆகிய அத்தனை பொருளும் சேர்ந்த பொருளே 'முழுத்தமிழன்'! முக்கால், அரை, கால் ஆகிய இவைகள் எல்லாம் தமிழனாகலாம் ஆயினும் முழுமை எய்த முடியாது. தமிழகம், முழுத்தமிழனை எண்ணித் தவம் கிடக்கும் இந்த வேளையில், இருந்தாரில் சிறந்தாராகிய நாவலரும் இறந்தார் என்றால், ஈடுசெய்யமுடியாத இழப்பால் அன்னை அலறுகின்றாள்!

சாவுக்குப் பசி என்றால் அது நிறையக் கிடக்கும் பதர்களை அள்ளித் தின்றிருக்கலாம். காட்டிக்கொடுக்கும் கயவர்கள், 'தமிழர்கள்' என்று சொல்லிக்கொண்டு தமிழைக்

குறைத்துப பேச வயிறு வளர்க்கும் பேடிகள் இல்லாமலா போய் விட்டார்கள். புலவர்களையும், வீரர்களையும், தமிழ்ப்பற்றுள்ளோரையும் உண்டாக்கக் காரணமாய்த் திகழ்ந்த சோம சுந்தர பாரதியாரை - விதை நெல்லை அல்லவா விழுங்கிவிட்டது சாவு?

நான் ஆறுதலடையத் தமிழறிஞர்களை தமிழ்ப்புலவர்களை வேண்டுகிறேன். சோமசுந்தர பாரதியாரைப் பின்பற்றுங்கள் தமிழைக் காப்பாற்ற முன்வாருங்கள்; அஞ்சாதீர்கள்!" பாரதியார் ***தமிழுக்கும், தமிழருக்கும், தமிழகத்திற்கும்*** நிறையத் தொண்டு செய்துள்ளார், நிறைந்த புகழைப் பெற்றுள்ளார். ஆதலின் இருக்கின்றார், இறக்கவில்லை! [92]

எனப் புரட்சிக்கவிஞர் நாவலர் பாரதியாரின் அளக்கவொணா அஞ்சாமைப் பண்பையும், அன்னைத் தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டையும் தம் எழுத்தால் வடித்துக்காட்டுவது இன்றுங்கூட ஒவ்வொரு தமிழனும் சிந்திக்கத் தூண்டுவதாம்.

***கவிஞர் கண்ணதாசன்,***

"தாயின் கருங்குழலை அலங்கரித்து வந்த புதுமலர்கள் சரிந்து வீழ்கின்றன. மலர்ந்து மணம் சிந்தி, நாட்கள், பலவானாலும் புத்தெழிலுடன் விளங்கின அவை! காலத்தின் விளையாட்டுப்புத்தி, அவற்றைத் தட்டி விட்டுக் கருக்குகின்றது ,,,, அவர் தமிழன்னையின் குழற்கற்றையை அழகு செய்த புது மணமலர்!" [93]

என்றதனோடமையாது,

"தமிழ்மகள் உறங்கத் தான் விழித்திருந்து
இமையசை யாதொரு பகையணு காமற்
காத்திருந் தானுயிர் காற்றொடும் போயது!"[94]

எனத் தமிழன்னைக்குக் கேடுவராமல் கண்ணிமை போல் காத்து நின்றவர் நாவலர் பாரதியாரே என்கின்றார்.

நாவலர் - கணக்காயர் - டாக்டர் ச. சோமசுந்தர பாரதியாரைப் போல் "நாடு-இனம்-மொழி" எனும் மூன்றினுக்காகப் பாடுபட்ட ***நற்றமிழ்க் காவலரை,***

நம்காலத்தில் காணும் பேறுபெற்றோம்.

"எங்கும் ஆங்கிலம் - எதிலும் ஆங்கிலம் - எல்லாமே ஆங்கிலம்"

எனும் அவலநிலைக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ் இழிவுநிலை போக்கிட மற்றொரு நாவலர், இத்தமிழ் மண்ணில் தோன்றவேண்டும்!

*வாழ்க தமிழ்!*

*வளர்க நாவலர் பாரதியார் புகழ்!*

---

*சான்றெண் விளக்கம் :*


1. அறிஞர் அண்ணா, 'திராவிட நாடு', 20-12-59.
2. ச. சாம்பசிவனார், நாவலர் சோமசுந்தரபாரதியாரின் தமிழ் இலக்கியப்பணி, பக்.292-293.
3. ச. சாம்பசிவன், இரா இளங்குமரன், நாவலர் பாரதியார், பக்.15-16.
4. ச.சோ.பாரதியார், திருச்சி வானொலிப்பேச்சு 6-1-47.
5. 'பாரதி' செப்-அக்டோபர்-1931.
6. முருகபாரதி, 'நாவீறு படைத்த நாவலர்' குறள்நெறி 15-12-65.
7. 'பாரதி', சனவரி- மார்ச்சு, 1934.
8. அ.இராமசாமி, தமிழ்நாட்டில் காந்தி, ப.239.
9. திரு வி.க.வாழ்க்கைக் குறிப்புக்கள், பகுதி 1. பக்.261-262.
10. ச.சோ.பாரதியார், முத்தமிழ் வளர்ச்சி மாநாடு, கோவை, 27-5-1950.
11. அறிஞர் அண்ணா, தீ பரவட்டும், பக்.39-40

12. 'பாரதி' செப்-அக்.1931.
13. ச.சோ.பாரதியார், இந்தி கட்டாயப்பாடமா? திறந்தமடல், ப.32.
14. 'லக்ஷ்மி' சனவரி, 1925.
15. ச.சோ.பாரதியார், நாகைத் தமிழ்ச்சங்கத்திறப்பு விழா உரை, 26-9-1937.
16. மு.கருணாநிதி, 'அணிந்துரை' தமிழ்க்கடல் அலை ஓசை, ப.X
17. முருகபாரதி, மு.கா.இதழ்.
18. சுவாமிநாத தேசிகர், இலக்கணக்கொத்து, பாயிரம்7.
19. சோம.லெ. பல்கலைக் கட்டுரைகள், ப.46.
20, ச.சோ. பாரதியார், தமிழும் தமிழரும், ப.127.
21. கம்பராமாயணம், மந்தரை சூழ்ச்சிப்படலம். ப.76.
22. ச.சாம்பசிவனார், மு.கா.நூல், ப.36.
23. தி. மாணிக்கவாசகம், தெய்வக் கற்பினள் கைகேயி, ப.41
24. ச.சோ.பாரதியார், திருவள்ளுவர், பக்.12-14.
25. ரம்போலா மாஸ்கரேனஸ், தமிழ்த்தொண்டர்கள், பக்.28-31.
26. T.P.Meenakshisundaram, Indian Literature Since Independence, p.323.
27, ச.சோ.பாரதியார், சேரர் தாயமுறை, பக்.42-44.
28. ச.சாம்பசிவனார், மு.கா.நூல், ப.76.
29. மா. இராசமாணிக்கனார், இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை, பக்.224,225.
30. எஸ். வையாபுரிப்பிள்ளை, 'மதிப்புரை', சேரர் தாயமுறை, ப.15
31. ச.சோ.பாரதியார், சேரர் பேரூர், பக்.70-72.
32, மயிலை சீனி. வேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிகம், ப.107.
33. கே.சீனிவாசபிள்ளை, 'அணிந்துரை', சேரர் பேரூர், ப.2.
35. மேலது, 215.
36. மேலது, 79.
37. மேலது, 173.
38. மேலது, 5, 14, 100, 188.
39. மேலது, 18, 212.
40, மேலது, 21.
41. மேலது, தமிழ்ப்பல்லாண்டு, 10.
42. ச. சாம்பசிவனார், மு.கா.நூல். ப.110.
43. K.S.Ramaswami Sastri, Kalidasa : His Period, Personality and Poetry, pp.172-173.

44. ச. சாம்பசிவனார் - மு.கா.நூல், பக்.100-103.
45. அ.சிதம்பரநாதச் செட்டியார், 'சிறப்புப்பாயிரம்' மாரிவாயில்.
46. க. கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம், ப.218
47. மா. இராமலிங்கம், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், பக்.182-184.
48. திரு. வி க., மு.கா.நூல்.ப.205.
49. ச.சோ.பாரதியார், மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி, 93.128.
50. மேலது, 38.
51. மேலது, 105,106.
52. மேலது, 182.
53. மேலது, 1.
54. சாலை இளந்திரையன், புதிய தமிழ்க்கவிதை, ப.142.
55. ச.சாம்பசிவனார்.மு.கா.நூல், ப.130.
56. மு.அருணாசலம்பிள்ளை, 'சிறப்புப்பாயிரம்', ம.ரு.பொ. நிகழ்ச்சி.ப.Xiii.
57. ச.அகத்தியலிங்கம், உலக மொழிகள்-5ம் பகுதி திராவிடமொழிகள்-1.ப.155.
58. ச.சோ.பாரதியார், தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை, பக்.4,5.
59. மேலது, ப.72.
60. மேலது, பக்.278, 279.
61. மேலது, ப.307.
62. மேலது, பக்.338, 339.
63. ச.சோ.பாரதியார், நாவலர் பாரதியாரின் கட்டுரைகள், ப.89.
64. மேலது, பக்.86.
65, மேலது, பக்.71-86: 90-137.
66. 'கலைக்கதிர்', சனவரி, 1955.
67. 'லக்ஷ்மி', ஆகஸ்ட், 1955.
68. ச.சோ.பாரதியார், மு.கா.நூல், ப.68.
69. மேலது, ப.282.
70. ச.சோ.பாரதியார், திருவள்ளுவர், பக்.52-73.
71. ச.சோ.பாரதியார், நாவலர் பாரதியாரின் கட்டுரைகள், ப.247.
72. மேலது, பக்.3-10.
73. மேலது, ப. 332.
74. மேலது, ப.233.
75. மேலது, ப.157.

76. ச. சோ. பாரதியார், தமிழும் தமிழரும், பக்.145-148.
77. ச.சாம்பசிவனார், மு.கா.நூல், பக்.216-219.
78. 'செந்தமிழ்' -தொகுதி-15.
79. ச.சோ.பாரதியார், 'தலைமையுரை' வடஆற்காடு மாவட்டத்தமிழர் மாநாடு, 26-2-38.
80. ச.சோ.பாரதியார், நாவலர் பாரதியார் கட்டுரைகள், பக்.19-20.
81. பாரதிதாசன், பண்மணித்திரள், ப.85.
82. கண்ணதாசன் கவிதைகள் தொகுதி-2. பக்.119,172,173.
83. 'செந்தமிழ்ச்செல்வி' - இதழ்,16/1.
84. மா.சு.சம்பந்தன், திருச்சி விசுவநாதம், பக்.35,36.
85. 'செந்தமிழ்ச்செல்வி' - 16-10-38.
86. முடியசரன், பூங்கொடி,9: 35-53.
87. ச.சோ.பாரதியார், 'திறப்புரை' முத்தமிழ்மாநாடு, கோவை, 27-5-50.
88. அறிஞர் அண்ணா, 'திராவிட நாடு', 20-12-59.
89. மு. கருணாநிதி - 'முத்தாரம்' 3-5-81.
90. 'தமிழ்ப்பொழில்', தொகுதி 21, ப.104.
91. 'பாரதி', சனவரி-மார்ச்சு, 1934.
92. பாரதிதாசன், 'குயில்', 22-12-59.
93. கண்ணதாசன், 'தென்றல்', 26-12-59.
94. மேலது, 19-12-59.

## துணைநூற் பட்டியல்

### நாவலர் ச.சோ.பாரதியார் நூல்கள்


சேரர் தாய முறை, ஆசிரியர், அண்ணாமலைநகர், 1935.

சேரர் பேரூர், ஆசிரியர், தூத்துக்குடி, 1917.

தசரதன் குறையும் கைகேயி நிறையும் (4ஆம் பதிப்பு), நாவலர் புத்தகநிலையம், மதுரை,1972.

தமிழும் தமிழரும், (கட்டுரைத்தொகுப்பு) (2ஆம் பதிப்பு), நாவலர் புத்தகநிலையம், மதுரை, 1971.

திருவள்ளுவர் (திருவள்ளுவர் ஆராய்ச்சியும், பிறகட்டுரைகளும்) நாவலர் புத்தகநிலையம், மதுரை, 1971.

தொல்காப்பியர் பொருட்படலப்புத்துரை, வசுமதி பதிப்பகம், சென்னை, 1997.

நாவலர் பாரதியாரின் கட்டுரைகள், வசுமதி பதிப்பகம், சென்னை,1998.

படைப்பிலக்கியங்கள், வசுமதி பதிப்பகம், சென்னை, 1997.

### நாவலர் பாரதியார் கலந்துகொண்ட மாநாடுகளும், பிறவும்

இந்தி கட்டாயப்பாடமா? மேன்மை தங்கிய சி. இராசகோபாலாச்சாரியர் அவர்கட்கு எழுதிய திறந்த மடல் 25-10-97 (தமிழ், ஆங்கிலம்).

நாகைத் தமிழ்ச்சங்கத்திறப்பாளர், 26-9-37.

வடஆற்காடு மாவட்டத் தமிழர் மாநாட்டுத்தலைமை, (திருவத்திபுரம்), 26-2-38.

முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டுத் திறப்பாளர், கோவை, 27-5-50,

திருச்சி வானொலியில் 'சுய ஆட்சி இந்தியாவில் புது சமூகம்', உரை, 6.1.47.

### பிறநூல்கள்

அகத்தியலிங்கம் ச., உலகமொழிகள், திராவிட மொழிகள்-I. (வி.உ.) பாரிநிலையம், சென்னை, 1976.

அண்ணா, அறிஞர் மற்றும் பலர், தீ பரவட்டும், திராவிடப் பண்ணை, திருச்சி, 1951.

அருணாசலம்பிள்ளை, மு., சிறப்புப்பாயிரம், மங்கலக்குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி, படைப்பிலக்கியங்கள், வசுமதி பதிப்பகம், சென்னை, 1997.

இராசமாணிக்கனார், மா., இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடைவளர்ச்சி, பாரிநிலையம், சென்னை, 1978.

• • • • • • •

# தமிழாராய்ச்சியின் வளர்ச்சி

**அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர்**
**அறக்கட்டளைச் சொற்பொழிவு**

நாள்

திருவள்ளுவராண்டு 2031 ஆவணி 8
24 - 08 - 2000
பிற்பகல் 2 . 30 மணி

முனைவர் தொ. பரமசிவன்
தமிழ்த்துறைத் தலைவர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

# தமிழாராய்ச்சியின் வளர்ச்சி

தமிழாராய்ச்சியின் வளர்ச்சி என்பது மிக விரிந்த ஒரு தலைப்பாகும். இந்தத் தலைப்பு ஒன்றரை நூற்றாண்டுக்கும் மேலான ஒரு காலப்பகுதியினைச் சுட்டி நிற்கின்றது என்று நான் கருதுகிறேன். காலம் என்பது இயக்கம் சார்ந்தது. காலமும் இயக்கமும் வினையும் பிரிக்க முடியாதவை என்பது தமிழ் இலக்கணிகள் ஆராய்ந்து கண்ட முடிவாகும். பண்பாட்டு வெளிப்பாட்டின் ஒரு கூறான மொழி இலக்கியத்தளத்தில், 150 ஆண்டுகளுக்கும் மேலான கால எல்லையில், தமிழ்நாடு கண்ட மாற்றங்களையும் வளர்ச்சி நிலைகளையும் ஒரு சேரக் காணமுயல்வது சற்று மலைப்புக்குரிய முயற்சிதான்.

இந்தப் பொழிவுக்குரிய தலைப்பிலே நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் (1958) 'தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி' என்ற நூலை ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் எழுதியுள்ளார். தமிழாராய்ச்சி என்றால் என்ன? தம்முடைய நூலில் இந்த வினாவினை எழுப்பி ஐயர் விடை சொல்கிறார். "தமிழ்மொழி, அதிலுள்ள இலக்கியம் இலக்கணம் பற்றிய கொள்கைகள், தமிழ்ப் புலவரின் காலம், வாழ்க்கை, நூற்களின் தன்மை, தரம், அவை எழுதப்பெற்ற சூழ்நிலை, புலவருக்கும் அவரை ஆதரித்த அரசர், வள்ளல் முதலியோர்க்கும் இடையே நிகழ்ந்த உறவு ஆகியவைகளைப் பொருளாகக்கொண்டு, விருப்பும், வெறுப்பும் இன்றி, நம்பத் தகுந்த ஆதாரங்களை வைத்துத் தக்க பரிசீலனை முறைகளைக் கையாண்டு, தற்காலப்பண்புடன் ஆராய்ந்து, உண்மையை நாடும் முயற்சியே தமிழ் ஆராய்ச்சி ஆகும்" என்பது அவர் கூறும் கருத்தாகும்.

'தக்க பரிசீலனை முறை', 'தற்காலப்பண்பு' ஆகிய சொற்களுக்கு உரிய அழுத்தத்தைத் தந்த பின்னரும் ஐயர் அவர்கள் தமிழாராய்ச்சி என்பது கடந்த கால நூல்களைப் பற்றிய ஆராய்ச்சி என்றே கருதுகிறார் என்பது புலப்படும். அவரது நூலும் நிகண்டுகள், உரையாசிரியர்களின் காலத்தோடு நின்றுவிடுகிறது. அவரது கணிப்பினை நாம் முழுமையாக மறுக்கவியலாது. மாறாக மேலதிகமாகச் சிலவற்றைக் கூட்டிச் சொல்ல வேண்டும். இலக்கிய ஆராய்ச்சி "சமூக அரசியல் வரலாற்றுப் பின்புலத்திலும் அமைய வேண்டும்" என்பதுதான் அது.

"ஆராய்ச்சியும் திறனாய்வும் ஒன்றுதானே?" என்பது நம்முடைய மாணவர்களுக்கு இயல்பாக ஏற்படும் ஐயமாகும். திறனாய்வைவிட வளர்ச்சி பெற்ற பார்வையே ஆராய்ச்சியாகும். ஆராய்ச்சியாளனுக்கு அவன் தேர்ந்தெடுத்த ஒரு நோக்குநிலை (Stand Point) உண்டு. அவன் மெய்ம்மைகளை (Fact) மட்டுமே தேடுகிறவன். நோக்கு நிலைக்குப் பின்னர் அவனுக்கு விருப்பங்கள் (அபிப்பிராயங்கள்) என ஏதும் இல்லை. 'ஆய்வும் அபிப்பிராயமும் சேர்ந்ததுதான் விமர்சனம்' என்று ஒத்துக் கொள்கிறார் அ. சண்முக சுந்தரம். ஒருவன் தான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கொள்கையின் வழியாக ஒரு முடிவுக்கு வருவதற்கும் தன்விருப்பத்திற்கேற்ற முடிவுக்கு வருவதற்கும் இடையில் ஒரு பெரிய 'இடைவெளி' உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆராய்ச்சியாளன் தான் தேடிக்கண்ட மெய்ம்மைகளைத் தன்னுடைய நோக்குநிலையில் நின்று ஆராய்ந்து தன் கண்டுபிடிப்புகளை வெளியிடுகின்றான் என்பதே ஆராய்ச்சியின் இலக்கணமாகும்.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் ஐரோப்பியர் வழி வந்த புதிய எழுது கருவிகளும், தாளும் தமிழ் அறிவுலகத்தின் புதிய வெளிச்சம் படரக் காரணமாயின என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்த வெளிச்சம் ஒரு நொடிப்பொழுதில் படர்ந்து இருக்க முடியாது என்பதனையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மெல்ல மெல்லத்தான் வெளிச்சம் படர்ந்திருக்கமுடியும். 1835க்குப் பிறகே அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தும் உரிமை காலனி ஆட்சியாளர்களால் நம் நாட்டு மக்களுக்கு வழங்கப் பட்டதாயினும் அதற்கு முன்னரே ஐரோப்பியர்கள், குறிப்பாகக் கிறித்துவத் துறவிகள் மொழி, இலக்கியத்

துறைகளில் தங்கள் கருத்தினை அச்சு ஊடகங்கள் வழியாக வெளிப்படுத்தினர். ஐரோப்பிய அறிவொளிக் காலத்தின் (Period of Enlightenment) தாக்கம் இவர்கள் மீது தவிர்க்க முடியாதபடி படிந்திருந்தது. அவர்களில் ஒருவரான, தமிழகத்தின் தென்கோடிப்பகுதியில் பாளையங்கோட்டையில் வாழ்ந்த சி.டி. இ. இரேனியஸ் அடிகள் (C.T.E. Rhenius) *1828* இல் 'செந்தமிழ் இலக்கணம்' என்ற தம் இலக்கண நூலை உரைநடைத்தமிழிலும், ஆங்கிலத்திலுமாக எழுதுகிறார். எளிமையான தமிழில் எழுதுவது என்பது மட்டுமல்ல, தனக்கு முன் எழுதிய ஐரோப்பியர்களைப் போல் அல்லாமல் 'கொச்சை நீக்கிய மொழிநடையில்' எழுதுவது அவரது நோக்கமாக இருந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக அவர் தரும் தொடர்களில் ஒன்று: 'பிராமணர்கள் பொய்களைக் கூறி ஜனங்களை ஏமாற்றுகிறார்கள்'. பின் வந்த *150* ஆண்டுக்காலச் சமூக அரசியல் மாற்றங்களுக்கும் அதன் பயனாகத் தமிழ் மொழி இலக்கியத் துறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கும் அவர் எதிர்கால உணர்வோடோ, அது இல்லாமலோ வித்தினைத் தூவி இருக்கின்றார் எனத் தெரிகிறது. அவரே *1832* இல் எழுதி வெளியிட்ட 'பூமி சாஸ்திரம்' என்னும் நூலில், "அவருடைய கிருபை தமிழர் ஆகிய வாலிபர் முதலான யாவர்க்கும் சம்பூர்ணமாயுண்டாவதாக" எனக் கடவுளின் அருளை வேண்டியதோடு 'தமிழர்க்கு அறிவுண்டாகும்படி' தாம் இந்த நூலைச் செய்துள்ளதாகக் குறிப்பிடுகின்றார். புதிய தமிழ் ஆராய்ச்சி உலகத்தின் தொடக்கப் புள்ளியாக இவரைக் கொள்ளலாம் என்று நான் நன்றியுணர்ச்சியுடன் கருதுகின்றேன்.

ஆராய்ச்சி என்பது வடிவமும், அளவும், தன்மையும் பயனும் ஆன ஒரு பொருளை தேவையும், உந்துதலும் கொண்டு அளக்க முற்படுவதே ஆகும். 'உந்துதல்' என்பது கடந்தகால, நிகழ்கால அனுபவங்களில் இருந்து உருவம் பெறுவதாகும். ஆங்கிலப் புதினங்களை வாசித்த வேதநாயகம் பிள்ளைக்கு 'தமிழில் இதுமாதிரி வசன காவியங்கள் இல்லையே' என்ற உறுத்தல் பிறக்கின்றது. ***2000*** ஆண்டுக்காலத் தமிழ் இலக்கியப் பரப்பும், மரபுகளும், நிகழ்காலத் தேவைகளுக்குப் போதுமானவையாக இல்லை என்ற கணிப்பின் அடிப்படையில்தான் இந்த உறுத்தல் பிறக்கிறது. இந்தக் கணிப்பினையே ஆராய்ச்சிக்கான அடிப்படையாக நாம் வைத்துக் கொள்ளலாம். தற்காலத் தமிழ் ஆராய்ச்சி இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்குமுன் சில கிறிஸ்தவத் தமிழ்ப்

புலவர்களால் தொடங்கப்பெற்றது. அவர்கள் தமிழ்மொழி, இலக்கணம் ஆகியவைகளைப் பற்றியே பெரும்பாலும் ஆராய்ந்தார்கள் (1985 : xi) என்று குறிப்பிடும் ஏ.வி. சுப்பிரமணிய அய்யர் "முப்பது. முப்பது ஆண்டுகளாகப் பகுத்துக்கொண்டு தமிழாராய்ச்சியின் வளர்ச்சியினைக் கணக்கிடவேண்டும்" என்கிறார். ஆனாலும் சமூக அசைவியக்கங்களைக் கருத்தில்கொண்டு 1920, 1970, அதன்பின்னர் என்று மூன்று காலப்பகுதிகளாக வைத்துக்கொள்ளலாம் என்பதே இந்தப் பொழிவுக்கு நான் மேற்கொண்ட கால அளவாகும். இவற்றுள் முதற்காலப்பகுதி இரேனியஸ், கால்டுவெல் - போப் முதற்கொண்ட ஐரோப்பிய முயற்சிகள், தேசிய இயக்கத்தின் பிறப்பு, அதற்கு மாற்றாகப்பிறந்த தமிழ் அறிவுலகத்தின் பிறப்பு. அதன் குரல்கள், வள்ளலார், ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர், அயோத்தி தாசப் பண்டிதர், திலகர்வழி தமிழகத்தில் பிறந்த புரட்சிகர தேசிய இயக்கம், பாரதியார், வ.உ.சி பிராமணர் அல்லாதார் அறிக்கை, தமிழ் இதழ்களின் வளர்ச்சியும் கருத்து மோதல்களும் ஆகிய தனித்த அடையாளம் காட்டும் நிகழ்வுகளின் காலமாகும்.

இரண்டாம் காலப்பகுதியானது தமிழ்நாட்டில் பார்ப்பனர் அல்லாதாரின் அரசியல் தன்னுணர்ச்சி, காந்தியத்தாக்கம், பெரியாரின் தொண்டு தமிழ் ஆராய்ச்சியின் விரிவு, புதிய தமிழ் அறிவாளிகள், தேசியம், திராவிடம் என்ற அரசியல் பண்பாட்டு எதிர்வு, மொழி பற்றிய புதிய பார்வைகள், தமிழ் உரைநடை பெற்ற மாற்றமும் வளர்ச்சியும், தமிழ்ச் சிற்றிதழ்களின் பெருக்கமும், வலிமையும், கல்வி உலகப் புதுமைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

மூன்றாவது காலப்பகுதியோடு நம்மில் பெரும்பாலோர் தம் வாழ்வினைப் பிணைத்துக் கொண்டவர்கள் ஆவோம். இதனைப் பின்னர்க் காணலாம்.

1852 இல் தொடங்கப்பட்ட சென்னைக் குடிமக்கள் சங்கத்தில் (Madras Native Association) பத்தாண்டுக் காலத்துக்குள்ளாகவே, 'முன்னெடுத்துப் போகவேண்டியது அரசியல் சீர்திருத்தமா? சமூகச் சீர்திருத்தமா? என்ற கேள்வியும் அதன் விளைவாக முரண்களும் தோன்றின. கஜீலு லட்சுமி நாசு செட்டியின் 'கிரசண்ட்' (இளம்பிறை) இதழுக்கு

எதிராக அந்த அமைப்பிலிருந்து வெளியேறியவர்கள் 'உதயசூரியன்' (Ricing Sun) என்ற பத்திரிகையைத் தொடங்குகின்றனர். 1857இல் திராவிட மொழிகளைப் பற்றிய கால்டுவெல்லின் இலக்கண ஆய்வு நூல் அக்காலத்திலிருந்த சமூகச் சீர்திருத்தக் கட்சிக்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேகரித்தது. திராவிடம், தேசியம் என்னும் கருத்தியல்கள் எதிர்நிலைப்பட்டனவாக உருவாவதற்கு இது வலிமையான அடிப்படையினை அமைத்துத் தந்தது எனலாம். 'குழந்தை மணம் வேண்டாம்', 'பெண்கல்வி வேண்டும்' என்பதான புதிய சிந்தனைகள் 'நாவல்' என்னும் புதிய இலக்கிய வடிவத்தில் வேதநாயகரிடம் வெளிப்பட்டதனை இந்தப் பின்னணியில்தான் நாம் காணவேண்டும். பேணப்படாத சங்க இலக்கியப் பெருஞ்செல்வத்தினைப்பற்றிய சி.வை. தாமோதரம் பிள்ளையின் ஆதங்கத்தையும், 27 தலபுராணங்களைப் பாடிய மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் மாணவர் உ.வே. சா. வை சேலம் இராமசாமி முதலியார் வேதமரபு சாராத இலக்கியங்களின் பக்கம் திருப்பி விட்டதையும் இந்தப் பின்னணியில் மட்டுமே நம்மால் விளங்கிக்கொள்ளமுடியும். அக்காலத்தில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழ்ப்புலமை நடாத்திக்கொண்டிருந்த தமிழாசிரியரிடமிருந்து உ.வே. சாமிநாதையர் வேறுபட்டதும் இந்த வகையில்தான். அதற்கு எடுத்துக்காட்டாக, 'திருத்தணிகை சரவணப்பெருமாளய்யர் முன் பதிப்பித்த பிரதிக்கிணங்க 1878 இல் பரிசோதித்து திரிசிரபுரம், தி. சபாபதிப்பிள்ளை' வெளியிட்ட திருக்குறள் பரிமேலழகர் உரையினைச் சொல்லலாம். இந்நூலில் முற்பகுதியில் திருவள்ளுவர் சரித்திரம் தரப்பட்டுள்ளது.

"உலகத்துள் மகாசிறப்புப் பொருந்திய கைலாசகிரியிலே அரசிருக்கை மண்டபத்தில் பிரமாதி முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள் - வித்தியாதரர் முதலியோர் வணங்கிச் சூழப் பார்வதி சமேதரராய்ப் பரமசிவன் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்தார். அப்போது தேவியானவள் எழுந்து வணங்கி நின்று 'ஸ்வாமி' திரிலோகத்திலே இல்லறம் வழுவாது நடந்து கதியடைந்தவருண்டோ, வென்று, வினவ, ஸ்வாமி, திருவுளம் பற்றுகிறார். "உமையவளே தெய்வலோகத்தில் வசிஷ்டர், அகத்தியர், அயன், பூயங்கன், சம்பு என்று ஐந்து பேருண்டு பூலோகத்தில் திருவள்ளுவன் என்று ஒருவருண்டு..." என்பதே இதன் தொடக்கப்பகுதியாகும். ஆராய்ச்சி உணர்வு என்பதே

மருந்துப் பொருளாகக் கருதப்பட்ட அக்காலத்தில் நூற்பதிப்புத் துறையின் நிலைமை இதுதான். இதனைக் கருத்திற்கொண்டு பிற்கால வளர்ச்சியினைக் காண முயலவேண்டும்.

சரியாக ஐம்பது ஆண்டுகள் கழித்து 1928 இல் மருங்காபுரி சமீன்தாரிணி லட்சுமி அம்மணி என்னும் அம்மையார் எழுதிய "திருக்குறள் தீபாலங்காரம்" என்னும் நூலிலும் திருவள்ளுவநாயனார் சரிதம் 'மகா சிறப்புப்பொருந்திய கைலாச கிரியின்கண்' என்றுதான் தொடங்குகிறது. இந்தநூலுக்கு கே.ஜி. சேஷஅய்யர், கா.சு. பிள்ளை, எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை, கோ. வடிவேலுசெட்டியார், உ.வே.சா. 'தமிழவேள்' உமா மகேசுவரனார். பா.வே. மாணிக்க நாயகர், 'தமிழகராதி' வெளியிட்ட பவானந்தம் பிள்ளை, தமிழறிஞர் ரா.இராகவையங்கார், திரு. வி.க. போன்ற தமிழறிஞர்கள் எல்லாம் பாராட்டும் வாழ்த்தும் எழுதியுள்ளதுதான் வரலாற்று வேடிக்கையாகும்.

இத்தகைய வறுமையான அறிவுலகச் சூழலில் உ.வே.சா - வின் பதிப்பு முறையியல் தமிழ் ஆராய்ச்சிக்கான உறுதியான தளத்தினை அமைத்துத் தந்தது என்றால் மிகையில்லை. ஆராய்ச்சியின் வளர்ச்சி என்பது மூலநூல் பதிப்பு, நூல் பதிப்பு, பிற துறையோடு ஒத்திட்டுப் பார்வையைத் தெளிவாக்கிக் கொள்ளுதல் எனத் தொடக்கப் படிநிலைகளையுடையது. இவ்வகையில்தான் உ.வே.சா. வின் பதிப்புப்பணியின் பெருமையினை நாம் அளவிடவேண்டும். இன்னும் விரிவாகச் சொல்வதானால் தன்னுடைய ஆசிரியரே படித்திராத, வேதமல்லா மரபு சார்ந்த சிந்தாமணியையும், மணிமேகலையினையும், பதிப்பிப்பதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் தமிழ் ஆராய்ச்சிக்குத் தளம் அமைத்துக் தந்தவையாகும். "புறநானூற்றை இன்னும் தெளிவு படுத்த முடியாதா?..... சிந்தாமணி பெரும்பாலும் சுலபமாகவே இருக்கிறது. அருமையும் பெருமையுமுள்ள தமிழின் பொருட்டுத் தொல்காப்பியத்திற்கு ஆராய்ச்சித் திறனமைந்த பதிப்பு ஒன்று வேண்டும்.... புராணக்கதைகளை விலக்கிவிட்டு முச்சங்க வரலாற்றைத் தக்க ஆதாரங்களைக் கொண்டு எழுதவேண்டும்....." என்று ஜி.யு. போப், உ.வே.சா, வுக்கு எழுதியிருக்கும் கடிதம் அக்காலத்தின் தேவையினை உணர்த்துவதாக அமைந்திருக்கின்றது. இதே காலப்பகுதியில்

வாழ்ந்த திருமணம் செல்வக்கேசவராய முதலியார் 1867 1921) 'தமிழில்' வசன நடையின் அம்சங்களை ஆராயப்புகுவது புது முயற்சியாதலால், சில கூறுகளை மயங்கியுரைப்பது கூடும். சில கூறுகள் புலனாகாது விடுபட்டிருப்பது கூடும். சில கூறுகள் கூறுவது கூறலாக இருப்பதுங்கூடும். ஆராய்ச்சி சிறத்தலாகும்போது இவையெல்லாம் திருத்தம் எய்தும்" என்று எழுதுவது தமிழ்ப் புலவர்களிடத்தில் ஆராய்ச்சி உணர்வு மெல்ல மெல்ல அரும்பி வந்ததற்கான சான்றாக அமைகின்றது.

19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிக்குள் தமிழாராய்ச்சியின் சில புதிய கதிர்களை நம்மால் குறிப்பிட்டு அடையாளம் காண முடிகிறது. அவர்களில் முதலாமவர் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை. 1882இல் தொடங்கப்பெற்ற இந்தியத் தொல்லியல் துறை 'வரலாற்று உணர்வு இல்லாத மக்கள்' என்று கருதப்பட்டவர்களுடைய வரலாற்றைக் காட்டும் கல்வெட்டுச் சான்றுகளை வெளியிலே கொண்டு வந்தது. இவற்றின் துணைகொண்டு திருஞானசம்பந்தரின் காலம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டு என்று அறுதியிட்டு உரைத்தவர் சுந்தரம்பிள்ளை. மற்றொன்று, கால்டுவெல்லின் கண்டுபிடிப்பும், சமகால ஆங்கில வாசிப்பும் சேர்ந்து தத்துவப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை. பண்பாட்டுத் தளத்தில் ஆரியம் X திராவிடம்' என்ற எதிர்வினை முன் வைத்ததாகும். சமகாலத்து ஐரோப்பிய அறிவியலாளர்களின் சிந்தனைகளையும் உள் வாங்கிக்கொண்டு தம்முடைய நூற்றொகை விளக்கம் நூலில் அவர்

இருக்குகை விளக்குநூல் தத்துவம் என்ப
இயக்க நூல் சத்திநூல் எனப்பெயர் பெறுமே
உள நூல் தத்துவ நூலோடு ஒன்றும்

என்று நூற்பா செய்கின்றார். "தற்கால நிலைமைக்கேற்ப சாஸ்திரங்களை எத்தனை வகுப்பாய் வகுக்கலாமென்பதும் ஆம் வகை எடுத்தும் விளக்குவதே கீழ்வரும் நூற்றொகை விளக்கம் பொதுவியலின் தலைமையான உத்தேசம்" என்பது நூற்றொகை விளக்கத்தின் முன்னுரைப்பகுதி. இந்தப் பார்வை காரணமாகவே அவரால் கி.பி. ஏழாம் நூற்றாண்டு எனத் திருஞானசம்பந்தரின் காலத்தைச் சரியாகக் கணிக்க முடிந்திருக்கிறது.

19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தொல்காப்பிய, சங்க நூல் பதிப்புக்கள் வெளிவரத் தொடங்கியதன் விளைவாக ஆராய்ச்சிக்கான கருப்பொருள்களும் நிறையவே கிடைத்தன. அவற்றைச் சரியாக இனங்கண்டு, 'தமிழர்களின தொல்பழங்காலம் வேதமல்லா மரபு சார்ந்த வாழ்க்கையினை உடையது' என்பதனை அறிஞர் சிலர் நிறுவ முற்பட்டனர். அக்கால எல்லையில் சங்க இலக்கியங்களை நுணுகி ஆராய்ந்து '1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் தலைப்பில் யாழ்ப்பாணத்துக் கனகசபைப்பிள்ளை எழுதிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இக்காலப்பகுதியில் நிகழ்ந்த மற்றுமொரு குறிப்பிடத்தகுந்த செய்தி, தமிழாராய்ச்சிக்கு உதவும் கருவி நூல் வெளியீடாகும். பழந்தமிழ் ஆராய்ச்சிக்குக் கருவியாக உதவும் தமிழ நிகண்டுகள் குறிப்பாக திவாகரம், சூடாமணி ஆகிய நூல்களின் பன்னிரண்டு தொகுதிகளும் 1892க்கு முன்னரே அச்சிடப்பட்டுவிட்டன. தாண்டவராய முதலியார், வேதகிரி முதலியார், ஆறுமுக நாவலர் ஆகிய மூவரும் இப்பெருமைக்கு உரியவர்கள். அச்சு எந்திர சாலைகளின் பெருக்கத்தினால் வெளிவந்த தமிழ் இதழ்களுக்குத் தமிழாராய்ச்சியின் வளர்ச்சியின் தொடக் காலத்தில் (1880 - 1920) ஒரு பெரும்பங்கு இருந்தது. இந்திய தேசியம், திராவிட தேசியம் என எதிர்நிலைப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் உருவாக இந்த இதழ்கள் அடித்தளம் அமைத்துத் தந்தன. பின்னர் ஒரு நூற்றாண்டுக் காலத்துக்குத் தமிழாராய்ச்சியின்மீது இந்தக் கருத்தியல்கள் செலுத்திய ஆதிக்கம் விரித்துப் பேசப்படவேண்டிய ஒன்றாகும். 1900-க்கு முன் வெளிவந்த இதழ்களில் பதினைந்து 'இந்து' என்னும் பெயரிலும், பதின்மூன்று இதழ்கள் 'திராவிட' என்னும் பெயரைக் கொண்டதாகவும் அமைந்திருந்தன. அத்திப்பாக்கம் வெங்கடாசல நாயகர் என்பவர் 'இந்து மத ஆபாச தர்சனி' என்ற நூலை எழுதியதும், அருட்திரு ஜான் ரத்தினம் என்பவரை ஆசிரியராகக் கொண்ட 'திராவிட பாண்டியன்' (என்ற 'திராவிடன்' இதழின் மூலவடிவம்) இதழ் பிறந்ததும் இக்காலப் பகுதியில்தான். இக்கருத்தியலின் செல்வாக்கும், வீச்சும் 1920க்குள் தமிழ் உலகத்தினையும், இலக்கிய ஆராய்ச்சி உலகத்தினையும் கணிசமாகப் பாதித்தன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் தமிழ் எழுத்துலகில் குறைந்தது 8 வகையான போக்குகள் இருந்தன.

1. ஆறுமுக நாவலர் தொடங்கி வைத்த, சைவ - கிறித்துவ தத்துவப்போரின் பகுதியாகக் கிறித்தவ, வைதீக, சைவ இதழ்க்கட்டுரை எழுத்துகள்.

2. சுதேசமித்திரன் இதழ் உருவாக்கிய இந்திய தேசியம் சார்ந்த அரசியல் எழுத்துகள்.

3. இந்திய தேசியத்திற்கு மாற்றாக (தமிழ் தேசியம் என்ற தன்னுணர்ச்சியோடு இல்லாவிட்டாலும்) உருவான சமய ஆராய்ச்சி, சமூக மாற்றம் குறித்த எழுத்துகள். இவை சுந்தரம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை, ஜே.எம். நல்லுசாமிப்பிள்ளை எனச் சைவச் சார்பாக ஒரு புறமும் அயாத்திதாசப் பண்டிதரின் 'திராவிடன்' இதழ்வழிப் பிறந்து 'பறையன்' இதழ் வழி வளர்ந்த ஒடுக்கப்பட்டோர் சார்பான எழுத்துகள் மறுபுறமும் ஆகப் பிறந்தவை.

4. கிறித்துவ சமய இதழ்கள் (குறிப்பாகப் பெண்கள் இதழ்கள் என வெளிவந்தவை)

5. மெக்காலே கல்வித்திட்டத்தின் விளைவாகப் பாடநூல்களாகப் பிறந்து, பின்னர் ஐரோப்பிய அறிவியலைத் தமிழில் கலைச்சொல்லாக்கத்துடன் கொண்டு வந்த எழுத்துகள்

6. சங்க இலக்கியம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்

7. தமிழ்க் கல்வெட்டுகளைக் கண்டறிந்த இலக்கிய, வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள்.

8. சிறிய அளவில் வாசிப்போருக்காகச் சென்னையிலிருந்த அச்சியந்திர சாலையினர் வெளியிட்ட ஓரணா, இரண்டணா (குஜிலி) புத்தகங்கள் (வெளியீடுகள்)

இந்தப் போக்குகளில் சிலவற்றை விரிவாகக் காண்பது, தமிழாராய்ச்சியின் வளர்ச்சியினைக் கணிப்பதற்கு நமக்கு உதவும்.

உ.வே. சா. வின் பதிப்பு முயற்சி நூல் வெளியிடுவோருக்குப் புதிய தடங்களை உருவாக்கித்தந்தது. சிறு நூல் (குஜிலி) வெளியீடுகள் கூட - இவற்றில்

பெரும்பாலானவை சித்தர்பாடல்கள் - முகப்புரைப்பகுதியில் 'பரிசோதித்து' அல்லது 'பிழையறப் பரிசோதித்து வெளியிடப்பெற்றது' என்ற குறிப்பினைத் தாங்கி வெளிவந்தன.

ஆங்கில நூல்களின் தழுவலான மொழிபெயர்ப்புக்களாக வெளிவந்த அறிவியல் பாடநூல்களின் போக்கிலும் புதிய மலர்ச்சி ஏற்பட்டது. இவ்வகையில் சேலம் பகடால நரசிம்மலு நாயுடு 1900 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் நாள் வெளியிட்ட 'வியவசாயம் அல்லது கிருஷி சாஸ்திர சங்கிரகம்' என்ற நூலைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். அரிய தமிழ்க் கலைச் சொல்லாக்க முயற்சிகளைச் செய்த நாயுடு (எ.டு. மாங்கனீஸ் - மாங்கனிசை (அ) காந்தப்போலி) வேளாண்மை தொடர்பான 860 பழமொழிகளைத் தம் நூலின் பின்னிணைப்பாகக் கொடுத்திருந்தார்.

ஆறுமுக நாவலரின் சைவ தூஷண பரிகாரத்தைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்கர், சீர்திருத்தச் சபையினர் ஆகியோரும் எழுதிக்குவித்த மறுப்புக் கட்டுரைகள் ஏராளம். 'பிறர் மதம் மறுத்தல்' என்ற இலக்கிய உத்தி, தமிழ் உரைநடையில் மறுப்பு நூற்பெருக்கத்துக்கு வீரமாமுனிவர் காலந்தொடங்கி ஒரு காரணமாக அமைந்திருந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் உச்சமடைந்த இச்சண்டையில் சிதம்பரத்திலிருந்து வெளிவந்த 'பிரம்ம வித்யா, இதழும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த கத்தோலிக்கர்களின் 'சத்திய வேத பாதுகாவலன்' என்ற இதழும் மோதியிருக்கின்றன. தமிழகத்தில் சிறுவெளியீடுகள் (Tracts) வழிவந்த இந்த மோதல் சென்னையிலிருந்த 'வேதாந்த விசாரணைச் சபை' யாருக்கும் டோனாவூரிலிருந்து வெளிவந்த 'போர்ச்சத்தம்' என்ற இதழுக்கும் (இரட்சணியசேனைச் சபையாருடையது) இடையில் நடந்துள்ளது. இந்த மோதலின் விளைவாக இரண்டு நல்ல கிறித்தவ இறையியல் நூல்கள் நமக்குக் கிடைத்தன.

'மறுபிறப்பு' பற்றி யாழ்ப்பாணம் ஞானப்பிரகாச அடிகளாரின் கட்டுரைகள் அடங்கிய 'மறுபிறப்பு' என்ற நூலும், தமிழ்நாட்டில் எச். ஏ. கிருஷ்ணபிள்ளை எழுதிய இரட்சணிய சமய நிர்ணயம் (1899) என்ற தமிழிலக்கிய மேற்கோள்களும் பழமொழிகளுமாக எளிமையான நடையில் அமைந்த இறையியல் நூலும் இவ்வகையில் குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்தவை.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் தமிழ் நாட்டில் மொழி, இலக்கிய ஆராய்ச்சிக்கெனத் தனியான களம் அல்லது நிறுவனம் ஏதும் இல்லை: சைவத்திருமடங்கள், கிறித்தவத் திருமண்டிலங்கள், பொருள் வசதிபடைத்தோரில் சிலர் நடத்திய அச்சுக் கூடங்கள், சிறிய இதழ்கள், அங்கங்கேஇருந்த சில 'பிரபுக்கள்' ஆகியோரின் ஆதரவுடன் தான் தமிழ் ஆராய்ச்சி உலகம் இயங்கிக்கொண்டிருந்தது. சென்னைப் பல்கலைக்கழகம் தனது பொன்விழாவைக் கொண்டாடும் நேரத்திலும்கூட (1907) அப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை உருவாக்கப்படவில்லை. தமிழ் ஆராய்ச்சிக்கென நிறுவனப் பிற்புலம் ஏதும் இல்லாத வெற்றிடம் ஒன்று இருந்தது.

இந்த வெற்றிடத்தை நிரப்பி தமிழாராய்ச்சிக்கென ஒரு மையமான நிறுவனத்தை ஏற்படுத்தியது பாண்டித்துரைத் தேவரால் உருவாக்கப்பட்ட மதுரைத் தமிழ்ச்சங்கம். 1901-இல் தொடங்கப்பெற்ற இச்சங்கத்தின் வெளியீடாக 'செந்தமிழ்' இதழ் 1904-இல் வெளிவரத் தொடங்கியது. அடுத்த இருபதாண்டுக் காலத்தில் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்ட யாராலும் தவிர்க்க முடியாத இதழாகவும் நிறுவனமாகவும் இருந்தது 'செந்தமிழ்' இதழே. இவ்விதழின் முதல் இரண்டு 'பத்திராசிரியர்'களாக இருந்த இரா. இராகவையங்காரும், மு. இராகவையங்காரும் விரிந்த தமிழ்ப் புலமையும் நுணுகிய பார்வையும் ஆராய்ச்சி உணர்வும் உடையவர்களாக இருந்தார்கள்.

1. செந்தமிழ் முதல் இதழ் தொடங்கி 'ஆராய்ச்சி' என்ற பெயரில் ஒரு பகுதி இதழில் இடம் பெற்றிருந்தது. 'பத்திராசிரியர்' ரா. இரா. இப்பகுதியில் இலக்கிய ஆராய்ச்சிக் குறிப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தார்.

2. தமிழ் எழுத்துலகில் சமயப்பூசல் பெருகியிருந்த அக்காலத்தில் அந்த எல்லையினைத்தாண்டி குலாம் காதிறு நாவலர், கீழக்கரை ஜோசப் டையஸ், கணேசையர், கனகசபைப் பிள்ளை என அறிஞர் பலரும் சந்திக்கும் களமாகச் 'செந்தமிழ்' இருந்தது.

3. தமிழகம் - ஈழம் என்ற நிலவேறுபாடு கருதாமல் யாழ்ப்பாணத்துக் கனகசபைப்பிள்ளை, சுன்னாகம் குமாரசாமிப்பிள்ளை, யாழ்ப்பாணம் முத்துத்தம்பியாபிள்ளை,

சி. கணேசையர், சதாசிவம்ஐயர் என ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் அனைவரும் செந்தமிழ் இதழைத் தமிழ் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தியுள்ளனர். (இக்காலப் பகுதிக்குப்பின்னர் மீண்டும் 1960 களின் பிற்பகுதியில்தான் ஈழத்துத் தமிழாய்வு முயற்சிகள் தமிழ்நாடடுக்குக் கிட்டின என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்). செந்தமிழ் 39 ஆம் இதழில் - 1907இல் பிரான்சு நாட்டுப் பேராசிரியர் ஜுலியன் வின்ஸ்லோ தென் மொழிகளில் தன்மை முன்னிலைகள் ஆமாறு, என்ற மொழியியற கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

4. தொல்லியல் துறையோடு குறிப்பாகக் கல்வெட்டியல் துறையில் தமிழ் ஆராய்ச்சியை இணைத்து ஆராய்ச்சிக் களத்தின் பரப்பினை விரிவு செய்ததும் செந்தமிழ் ஆற்றிய மற்றொரு பணியாகும். து. அ. (டி.ஏ) கோபிநாதராவ் தொடங்கி திருவாரூர் சோமசுந்தர தேசிகர் வரை அவ்வப்போது தாம் கண்டுபிடித்த கல்வெட்டுகளின் துணைகொண்டு தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றினையும் இலக்கிய வரலாற்றினையும் இவ்விதழின்வழி தெளிவு படுத்திக்கொண்டே வந்தனர். பழங்குடியினர் பற்றிய சமூக மானிடவியல் கட்டுரைகளும் கூட (கொச்சி தேசத்துக்காரர்கள் 3:12 ல ஆனந்தய்யர்) செந்தமிழ் இதழில் வெளிவந்துள்ளன.

பின்னாளில் தமிழறிஞர்கள என்று மதிக்கப் பட்டவர்களில் அக்காலத்தில் (1904 - 1924) செந்தமிழ் இதழிலிருந்து ஒதுங்கி நின்றவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். மறைமலை அடிகள்கூடச் செந்தமிழின் தொடக்ககால இதழ்களில் ஒன்றிரண்டு கட்டுரைகள் எழுதியுள்ளார். அக்காலத்தில் அரசியல் உலகத்திலும் ஒரு கால் வைத்து நின்ற திரு.வி.க. பாரதியார், சுப்பிரமணிய சிவா, வ.உ.சி. போன்றோரும். அயோத்திதாசப் பண்டிதர் போன்ற இதழாளர்களும் இக்கால கட்டத்தின் கடைசிப்பகுதியில் ஆராய்ச்சி உலகத்தில் கால்பதித்த மயிலை சீனி வே. போன்றோருமே செந்தமிழின் தமிழ் அராய்ச்சிப் பணியில் பங்குபெறாதவர்கள் எனலாம்.

1903 இல் மறைமலை அடிகள் ஆங்கில முன்னுரையுடன் கூடிய பட்டினப்பாலை ஆராய்ச்சி, முல்லைப்பாட்டு ஆராய்ச்சி ஆகிய இரண்டு நூல்களை வெளியிட்டாா. தமிழறிஞர் என்பதிலும் பார்க்க சைவத்தமிழறிஞர் என்ற முத்திரையே மறைமலையடிகளின் எழுத்துக்களில் ஆழமாகப்

பதிந்திருந்தது. பட்டினப்பாலை பாடிய உருத்திரங் கண்ணனாரை அடிகள் சைவ சமயத்தவராகக் காட்ட முயல்வது அவரது சமயச் சார்புக்கு எடுத்துக்காட்டாகும். மாணிக்கவாசகர் காலம் குறித்த அடிகளது பிற்கால எழுத்தையும் மற்றுமொரு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

தமிழாராய்ச்சி உலகத்தில் பிற்காலத்தில் தோன்றிய கல்விப்புலம் (அ) பல்கலைக்கழகம் சார்ந்தவர்கள் - சாராதவர்கள் என்ற பாகுபாடு அக்காலத்தில் தோன்றவில்லை. ஏனென்றால் 1929 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்படிப்பு தனித்துறையாக இடம்பெறவில்லை. பாடத்திட்டக்குழுக்கள் மட்டுமே இருந்தன. இருப்பினும் அக்காலத்தவரான திருமணம் செல்வக்கேசவராய முதலியார், உ.வே.சா. மறைமலையடிகள், மு.சு. பூரணலிங்கம் பிள்ளை. பரிதிமாற் கலைஞர் ஆகியோரைக் கல்விப்புலம் சார்ந்த ஆராய்ச்சியாளர் களாகவே நம்மால் இனங்காண முடிகிறது.

செந்தமிழ் இதழைத் தவிர்த்து 1920க்கு முன் வெளிவந்த தமிழாராய்ச்சி நூல்களில் குறிப்பிடத்தகுந்தது எம். ஸ்ரீனிவாச ஐயங்காரின் (Tamil Studies) என்ற ஆங்கில நூலாகும். 1914 இல் வெளிவந்த இந்த நூல், தமிழ் ஐந்திணை நிலமக்களை இன்றைய சாதிமுறையுடன் ஒப்பிட்டுப் பார்க்க முயன்றது. கால்டுவெல்,தாமோதரம் பிள்ளை ஆகியோரின் இலக்கியக் காலப்பகுப்பை மறுக்கும் ஐயங்கார் தம்முடைய காலப்பகுப்பில் தொல்காப்பியமும் திருக்குறளும் ஒரே காலத்தவை என்றும், சிலம்பும் மேகலையும் பத்துப்பாட்டும் பின்வந்த ஒரே காலப்பகுதியைச் சேர்ந்தவை என்றும் கூறுகிறார் (185 - 211) 'திருக்குறள்' வடமொழி நூல்களையும் மகாபாரதத்தையும் தழுவி எழுதப்பட்ட அறநூல் (பக். 194) என்ற கருத்தை உறுதிபடக்கூறுகின்றார். தன்னுடைய நூலைத் தொடங்கும்போதே (பக். 2-3) 'திராவிட' என்னும் சொல் வடமாநிலங்களுக்குச் சென்ற தமிழ்ப் பிராமணர்களை மட்டும் குறிப்பதற்கே வழங்கப்பட்ட சொல் என்ற விவாதத்துக்குரிய செய்தியோடுதான் தொடங்குகிறார். (1916 இல் இந்தியச் சமூகம் முழுவதையும் ஆரிய தேசிய இனம் Aryan Nationality என்று 'இந்து' நாளிதழ் எழுதியது. பாரதியும் 'ஆரிய நாடு' என்றே எழுதினார்.

ஐயங்காரின் நூல் வெளிவந்த பின்னர் (1914) தமிழ்ச் சமூகத்தின் அசைவியக்கங்கள் இலக்கியத்துறையல்லாத

வேறுபல துறைகளில் வீச்சுடன் காணப்பட்டன. இவையே பின்வந்த அரை நூற்றாண்டுக் காலத்தின் இயக்கப் போக்குகளையும் இலக்கியப் போக்குகளையும் வடிவமைத்தன. அவற்றை நினைவில் நிறுத்திக்கொண்டால் மட்டுமே அடுத்து வந்த 50 ஆண்டுகளில் தமிழாராய்ச்சியின் போக்குகளை நம்மால் வரையறை செய்யவும் வகைப்படுத்தவும் இயலும்.

1914 இல் சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து பிரிந்து ஆந்திரப் பல்கலைக்கழகம் உருவானது. 1916-இல் வெளியிடப் பெற்ற பார்ப்பனரல்லாதார் அறிக்கை (Non - Brahmins Manifesto) தேசிய இயக்கத்தில் திலகரின் மறைவும் காந்தியடிகளின் வருகையும், அரசியல்வாதியும் தமிழறிஞருமான திரு வி.க.வும், வ.உ.சி யும் எதிர் எதிர் அணிகளில் நின்றமை. தென்னிந்திய நலவுரிமைச் சங்கம். அதற்கு மாற்றாகப் பிறந்த சென்னை மாகாணச்சங்கம், அன்னிபெசண்டின் செல்வாக்கு, தொழிலாளர்களை முன்னிறுத்தி எளிய தமிழ் நடையில் எழுதப் புகுந்த தேசபக்தன், திராவிடன் நாளிதழ்கள், பெரியாரின் அரசியல் நுழைவு, தமிழுக்கெனத் தனிப்பல்கலைக்கழகம் வேண்டுமென்று தமிழறிஞர்களிடையே எழுந்த புதிய உணர்வு, சிதம்பரம் மீனாட்சி கல்லூரியின் பிறப்பு, இறுதியில் 1920 இல் நீதிக்கட்சி அரசதிகாரத்துக்கு வந்து சேர்ந்தது ஆகிய இலக்கியத்துறை அல்லாத அரசியல் இதழியல் துறைகளில் நிகழ்ந்த மாறுதல்கள் இவையெல்லாம் தமிழ்க்கல்வி, தமிழ் இலக்கியம், தமிழ் இதழியல், தமிழாராய்ச்சி ஆகிய துறைகளில் புதிய வேகமும், புதிய முயற்சியும் பிறக்கக் காரணங்களாயின.

'தமிழ்ப் பல்கலைக்கழகம்' வேண்டுமென்ற உணர்வின் வேகத்துடன் அப்பெயரில் சைவத் தமிழறிஞர் ஜே. எம். நல்லுசாமிப்பிள்ளையின் மகன் ஜே. என். இராமநாதன் ஒரு பதிப்பகம் (1921) தொடங்கிச் சில நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

1920களில் தமிழ் ஆராய்ச்சி உலகத்துக்குக் கிடைத்த புதிய வரவுகள் என்று இரண்டு பெயர்களைக் குறிப்பிடலாம். ஒருவர் ஆய்வு உலகில் புதுநெறி காட்டிய வையாபுரிப் பிள்ளை. மற்றொருவர் திருவாரூர் இலக்கணவிளக்கப் பரம்பரை சோமசுந்தர தேசிகர். 1925-இல் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேரகராதி ஆக்கும் பணியில் ஈடுபட்டார். சோமசுந்தர

தேசிகர் தமிழகத்தின் வடமாவட்டக் கோயில்களின் கல்வெட்டுக்கள் குறித்து தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்தார். ஆராய்ச்சி வளர்ச்சிக்கான கருவிப்பணிகளில் இந்த இருவரது பங்களிப்பும் குறிப்பிடத் தகுந்தது.

'செந்தமிழை' அடுத்து 1923-இல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 'தமிழ்ப்பொழில்' இதழும் தென்னிந்தியச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 'செந்தமிழ்ச்செல்வி' இதழும் தொடங்கப்பெற்றன.

'செந்தமிழை' அடுத்துத் தோன்றிய இவ்விரு இதழ்களும் தமிழாராய்ச்சிக்கான களத்தினை மேலும் விரிவுபடுத்தின என்றாலும் சார்பு நிலைகள் காரணமாகச் செந்தமிழ் இதழைப் போல் மிக விரிந்த ஆய்வுக் களத்தினை இவற்றால் உருவாக்க முடியவில்லை என்பது நமக்கு வரலாறு காட்டும் செய்தியாகும். மதுரைத் தமிழ்ச் சங்கத்தை அடுத்து, பழந்தமிழ் நூல்களின் பதிப்புக்கும், மறுபதிப்புக்கும் 1928 இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தன் பணியினைத் தொடங்கியது.

1929 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் படிப்புத்துறை தொடங்கப்பெற்றது. இத்துறையில் முதற்பிரிவு மாணவர்களில் ஒருவராக இருந்த மு. அருணாசலம், பிற்காலத்தில் தன்னுடைய இலக்கிய வரலாற்றுத் தொகுதிகள் மூலமாகத் தமிழாராய்ச்சியின் வளர்ச்சிக்குப் பங்களித்தார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

தமிழாராய்ச்சித்துறையின் இரண்டாம் காலப் பகுதியில் (1920-70) தொடக்கம் முதலாகவே பல்வேறு வகையான கருத்துப்பள்ளிகள் உருவாகின. வைதீக மரபு சாராத ஆய்வுகள், வைதீக மரபுக்கு எதிரான ஆய்வுகள், தனித்தமிழ் இயக்கச் சார்புநிலை ஆய்வுகள் என ஒரு கருத்துப் பள்ளி தமிழ் ஆய்வுலகில் உருவாயிற்று. இதற்கு மாறாக இந்திய தேசியத்தளத்தில் தமிழ்ப் பண்பாட்டையும் ஒரு கூறாக வைத்து ஆராயும் ஆய்வறிஞர்களும் இருந்தனர். மறைமலையடிகள், எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை, நாவலர் பாரதியார் ஆகியோரை முதல்வகைக் கருத்துப்பள்ளியின் முன்னோடிகளாகச் சொல்லலாம். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையினை இரண்டாம் வகையினரின் முன்னோடி என்று குறிப்பிடலாம்.

1933இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் மறைமலையடிகளாரின் 'அறிவுரைக் கொத்து' நூலுக்கு ஏற்பட்ட எதிர்ப்பு இதற்கொரு எடுத்துக்காட்டாகும். தமிழிலக்கிய ஆராய்ச்சியானது மொழி, இலக்கியம் சார்ந்ததாக மட்டும் அமையாமல் அன்று எதிர்நிலை கொண்டிருந்த தேசிய திராவிட இயக்கக் கருத்தியல்களின் போராட்டக் களமாக மாறியதற்கு மேற்குறித்த நிகழ்ச்சியே சான்றாகும். பிற்காலத்தில் தமிழிலக்கிய ஆராய்ச்சியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய மயிலை சீனி. வேங்கடசாமி, சாத்தன்குளம் அ. இராகவன் போன்றோர் அக்காலத்தில் 'குடியரசு' இதழின் எழுத்தாளர்களாக இருந்தனர் என்பது நினைத்துப்பார்க்க வேண்டிய செய்தியாகும். முப்பதுகளின் இறுதிப்பகுதியில் அரசியல் உலகில் கூர்மைப்பட்ட தமிழின உணர்வு. தமிழாராய்ச்சியின் போக்கில் பின்னர்ப் பல மாறுதல்களை உருவாக்கியது. இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாக விபுலானந்தரின் 'யாழ் நூலின்' பிறப்பினைச் சொல்ல வேண்டும். இக்காலப்பகுதியின் மற்றொரு நிகழ்வு, கம்பராமாயணத்துக்கு அரசியல் உலகில் எழுந்த எதிர்ப்பும், இலக்கிய உலகில் எழுந்த ஆதரவும் ஆகும். கம்பராமாயணத்துக்குத் திருத்திய பதிப்பு ஒன்று வெளியிடவேண்டும் என்ற முயற்சியினை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தொடங்குவதற்கு 'தீபரவட்டும்' இயக்கமே காரணமாக இருந்தது. வ.உ.சி.-யின் நண்பரான சி.கே. சுப்பிரமணிய முதலியார் பெரிய புராணத்திற்கு விரிந்த உரையுடனும் குறிப்புகளுடனும் ஒரு பதிப்பு வெளியிட முனைந்ததற்கும் எதிர்த்தலைக் காரணியாக நின்றது இந்த இயக்கமே.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை 1924 முதலாகவே தன்னுடைய ஆராய்ச்சி முடிவுகளைச் செந்தமிழ் இதழ்களில் கட்டுரைகளாக வெளியிடத் தொடங்கினாலும் அவரது பெரும்பாலான கட்டுரைகள் 1947-க்குப் பின்னரே நூல் வடிவம் பெற்றன.

நாற்பதுகளில் தமிழாராய்ச்சி உலகம் பெற்றபேறுகளில் ஒருவர் மயிலை சீனி. வேங்கடசாமி. வேதமல்லா மரபுகளுக்கும், தமிழிலக்கியத்துக்கும் தமிழர் வாழ்வியலுக்கும் உள்ள உறவினைத் தமிழ் ஆராய்ச்சிக்கு உட்படுத்திய பெருமையினை அவர் தனக்கே உரித்தாக்கிக் கொள்கிறார். நாற்பதுகளில் வெளிவந்த அவரது 'சமணமும் தமிழும்'

'பௌத்தமும் தமிழும்' ஆகிய இரு நூல்களும் இலக்கியத் துறையோடு கல்வெட்டினையும் கள ஆய்வினையும் இணைத்துத் தமிழாராய்ச்சிக்குப் புதிய சில களங்களை உருவாக்கித் தந்தன. வையாபுரிப்பிள்ளையின் கால ஆராய்ச்சி, சொல்லாராய்ச்சி ஆகியவற்றுக்கு எதிர்நிலையாக இக்காலப்பகுதியில் உருவான மூன்று ஆராய்ச்சி அறிஞர்கள் மா. இராசமாணிக்கனாரும், ஔவை துரைசாமிப் பிள்ளையும், 'மொழி ஞாயிறு' ஞா. தேவநேயப்பாவாணரும் ஆவர்.

எம்.எல். பிள்ளை என்றறியப்பட்ட கா. சு. பிள்ளையின் 'தமிழ் இலக்கிய வரலாறு' நூல் 1930-களிலேயே வெளிவந்திருந்தது. சைவச்சார்புநிலை அவருக்கிருந்தாலும் அது மறைமலையடிகளைப் போலத் தமிழ்ப் புலவர் கால ஆராய்ச்சியினைத் திசைதிருப்புமாறு அமையவில்லை. மறைமலையடிகளாரின் மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சியில் உடன்படாமல் நின்றாலும் அவரது காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு என்று கா. சு. பிள்ளையும் முடிவுக்கு வருகிறார். தமிழ்ப் புலவர் கால ஆராய்ச்சியில் அரசியல் சார்புநிலை காரணமாகத் தமிழறிஞர்கள் தட்டு மறித்து, கிளித்தட்டு ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். சார்பு நிலைகளை மீறித் தமிழ்ப்புலவர் கால ஆராய்ச்சி என்பது மருந்துப் பொருளாக இருந்தபோது, மு. இராகவஐயங்காரின் 'ஆழ்வார்கள் காலநிலை' 'சாசனத் தமிழ்க்கவி சரிதம்' ஆகிய நூல்க்ள் தமிழாராய்ச்சித் துறைக்கு வலிமை சேர்த்தன. தான் ஒரு வைணவராக இருந்தாலும் ஆழ்வார்களின் காலம்பற்றிய வைணவ மரபுக் கதைகளோடு உடன்பட மறுத்துத் தன் கருத்தை அவர் நிலைநாட்டினார். மா. இராசமாணிக்கனாரின் 'கால ஆராய்ச்சி' என்ற நூலும் 'பல்லவர் வரலாறு'ம் அறுபதுகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அவர் செய்த 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி'யும் குறிப்பிடத் தகுந்தவை. ஔவை துரைசாமிப் பிள்ளையின் 'சேர மன்னர் வரலாறு'ம் இவ்வகையில் குறிப்பிடத் தகுந்த மற்றொரு நூலாகும்.

ஐம்பதுகளில் தமிழாராய்ச்சித் துறையில் நிகழ்ந்த மற்றொரு மாற்றம் மொழியியல் என்னும் மொழி அறிவியல் துறையின் வரலாகும். அறிஞர்கள் வையாபுரிப்பிள்ளை, தெ.பொ.மீ. ஆகியோரின் கருத்துச்செல்வாக்கினால் பேராசிரியர் வ. ஐ. சுப்பிரமணியம் கேரளப் பல்கலைக்கழகத்தில் மொழியாராய்ச்சிக்கு உதவும் கருவி நூற்களை ஆக்கும் பெரும்பணியில் ஐம்பதுகளின்

நடுப்பகுதியில் ஈடுபட்டார். பழந்தமிழ் இலக்கியங்களுக் கெனச் சொல்லடைவு ஆக்கும் பணியில் கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை குறிப்பிடத்தகுந்த பணியாற்றியது என்பதை மறுப்பதற்கில்லை.

நாற்பதுகளும் ஐம்பதுகளும் தமிழ் ஆராய்ச்சி உலகில் தேசிய X திராவிடக் கருத்தியல்களின் போர்க்களமாக இருந்தது என்றே குறிப்பிடலாம். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் அனைத்துக் கட்டுரைகளும் நூல்வடிவம் பெற்றது ஐம்பதுகளில்தான். அவருக்கு மாற்றான கருத்துடைய எழுத்துக்கள் பெருகியதும் இக்காலத்தில்தான். இக்காலப்பகுதி தமிழாராய்ச்சித் துறையில் வேகமும் வெம்மையும் நிரம்பியதாக இருந்தது. மா. இராசமாணிக்கனாரின் கருத்தினை முன்வைத்து 'தாலி அணிவது தமிழர் வழக்கமா?' என்று அரசியல்வாதியும் இலக்கியவாதியுமான ம. பொ. சிவஞானமும், கவிஞர் கண்ணதாசனும் மோதிக் கொண்டதை இப்போக்கிற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

அறுபதுகளின் நடுப்பகுதியில் பழைய அணுகு முறைகளிலிருந்து வேறுபட்ட புதிய அணுகுமுறையான மார்க்சிய அணுகுமுறை தமிழாராய்ச்சி உலகில் அறிமுகமாயிற்று. வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையில் தமிழ் இலக்கியங்களை அணுகும் முறையினை அறிவியல் உணர்வுடன் முன்னிறுத்தியவர் பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள். முந்தியகட்ட ஆய்வாளர்களால் கணக்கிலே கொள்ளப்படாத நாட்டார் வழக்காறுகள் என்னும் பெரும் ஆய்வுப் பரப்பினைத் தமிழ் ஆய்வுலகத்தோடு இணைத்தவர் அவரேயாவார். ஆராய்ச்சி என்னும் பெயரோடு அவரால் தொடங்கப்பட்ட காலாண்டு இதழ் சமூகவியல், மானுடவியல் ஆகிய துறைகளோடு பிரிக்க முடியாத உறவினைத் தமிழ் ஆய்வாளர்களுக்கு ஏற்படுத்தியது. தனி நபர்களின் படைப்புகளாக அமையாமல் மக்களின் படைப்புகளாக அமைந்த நாட்டார் வழக்காறுகள் தமக்குரிய கல்வி மதிப்பினையும் ஆராய்ச்சி மதிப்பினையும் அவரால்தான் பெற்றன. தமிழ் இலக்கியத்துறையில் பொதுவுடைமை இயக்கம் கால்பதித்த இக்காலப் பகுதியோடுதான் தமிழாராய்ச்சி உலகத்தின் மூன்றாவது பகுதி தொடங்குகிறது. இக்காலப் பகுதியில்தான் ஈழத்துப் பேராசிரியர்களான க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோரது எழுத்துக்களும் தமிழ்நாட்டில் அறிமுகமாயின.

ஆராய்ச்சிக்குரிய மூன்றாம் காலப்பகுதியின் தொடக்கம் தமிழிலக்கிய ஆராய்ச்சியின் வெப்பநிலையினைக் கூட்டி வைத்தது. பெரியாரிடம் நெருங்கிய தொடர்புடைய வராயிருந்து பிரிந்து சென்று பொதுவுடைமை இயக்கச் சார்பு நிலை எடுத்த சாத்தன்குளம் அ. இராகவன் 1950களின் பிற்பகுதியில் தமிழாராய்ச்சியில் சில புதுமைகளைக் காட்டினார். தமிழ் நாட்டுத் திருவிளக்குகள், நம் நாட்டுக் கப்பற்கலை, தமிழர் பண்பாட்டில் தாமரை, தமிழ் நாட்டு அணிகலன்களள், இசையும் யாழும் ஆகிய அவரது ஆய்வு நூல்கள் அறிப்படாத தமிழ் ஆய்வு நிலங்களைச் சுட்டிக்காட்டின. இவரைப்போன்று அதுவரை அரசியல் பணியாற்றி வந்த பேராசிரியர் நா. வானமாமலையும் தமிழாராய்ச்சித் துறைக்கு வந்து சேர்ந்தார். தமிழ் நாட்டுப் பொதுவுடைமையாளர்களான இவர்களின் ஆய்வுநெறி, இயக்கவியல் பொருள் முதல்வாதப் பார்வையினைத் தமிழாராய்ச்சித் துறைக்கு அறிமுகப்படுத்தின. இவர்களை அடுத்து வந்த மூன்றாமவரான ஈழத்து அறிஞர் க. கைலாசபதியின் பார்வையோ முற்றிலும் வேறுபட்ட ஒரு நிலைபாட்டினைக் கொண்டிருந்தது.

19 ஆம் நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளர்களாக மதிக்கப்பெற்ற பேராயர் கால்டுவெல். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆகியோரது கருத்துகளின் மீது வன்மையான தாக்குதலைத் தொடுத்தார் பேராசிரியர் க. கைலாசபதி, பேராயர் கால்டுவெல் தன்னுடைய கண்டுபிடிப்புகளினூடே "தீமை விளைக்கத்தக்க கருத்துகளையும் உடன் கலந்து ஊட்டி" விட்டார் எனக் குற்றஞ்சாட்டும் கைலாசபதி "அவற்றில் ஒன்று பார்ப்பனர்பால் காழ்ப்பு உணர்வு" என்றும் கூறுகிறார். ஆரியர் - திராவிடர் பூசலுக்குத் "தத்துவார்த்த விளக்கம் கூற உதவியவரே கால்டுவெல்" என்று அழுத்தம் திருத்தமாகக் குற்றஞ்சாட்டும் அவர், மனோன்மணியம் சுந்தரனாரையும் விட்டு வைக்கவில்லை. 'நீராரும் கடலுடுத்த' எனத் தொடங்கும் ஆறடித் தரவுப் பாடல் இரண்டையும் குறிப்பிட்டு 'வேறு ஒன்றுமில்லாவிடினும் பாடலில் வேகம் இருக்கிறது' என்று மதிப்பிட்ட கையோடு "தமிழகத்தில் பாரதி தேசியத்தின் முரசொலி என்றால் சுந்தரம் பிள்ளை பிரதேசவாதத்தின் பிதாமகன்" என்று சொல்லி முடிக்கிறார். அ.மு. 90.95. 103 பதி. 1996) க. கைலாசபதியின் நண்பரும் ஆராய்ச்சித்தோழருமான கா. சிவத்தம்பி 1978-இல் வெளியிட்ட 'தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி'

என்ற நூலிலும் கூடத் "திராவிட இயக்கம் வேளாளர்களின் பார்ப்பன எதிர்ப்பு வெளிப்பாடு" என்ற கருத்தே எதிரொலித்தது. அதன் பின்னர் 1986இல் கூடத் பொதுவுடைமை இயக்கத்தினரால் திராவிட இயக்கத்தின்மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் "இலக்கியத்தை அவர்கள் ஒரு பிரச்சாரக் கருவியாகவே பயன்படுத்தினார்கள். தங்கள் இனவாதச் சித்தாந்தத்தைப் பரப்ப அவர்கள் ஒரு இனவாத இலக்கியக் கொள்கையை வகுத்துக் கொண்டனர்" என்பதுதான் (பொன்னீலன் 1986 ப. 27). "கலை ஓர் இனமக்களின் மனப்பண்பு, அவ்வின மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு" என்று 'தீபரவட்டும்' நூலில் அண்ணா வெளியிட்ட கருத்துக்குத்தான் பொன்னீலன் இப்படியொரு மறுப்புரையினை வழங்குகிறார்.

ஆனால் கடந்த பத்தாண்டுகளில் வெளிவந்துள்ள ஆராய்ச்சி எழுத்துக்கள் திராவிட இயக்க இலக்கியப் பங்களிப்பு குறித்த முதற்கட்ட ஆராய்ச்சிகளைத் தகர்த்து எறிந்துள்ளன என்பதையும் கண்கூடாகவே உணரமுடிகிறது. இரண்டாம் கட்டத்தில் தேசியவாதிகளும், மூன்றாம் கட்டத்தில் பொதுவுடைமையாளர்களும் உயர்த்திப் பிடித்த இந்திய தேசியம் பற்றி எஸ்.வி. ராஜதுரை, வ. கீதா ஆகியோரின் அரசியல் விமர்சனங்கள் ஒருபுறம் மறுபுறமாக அ. மார்க்ஸ், பொ, வேலுசாமி, கோ.கேசவன் ஆகியோரின் இலக்கிய விமர்சனங்கள் - இந்த இரண்டின் விளைவாகத் திராவிட இயக்கத்தின் இலக்கியப் பங்களிப்பு பற்றிய 'கொச்சையான' ஆராய்ச்சிகள் முடிவுக்கு வந்தன. இந்த முடிவினை உணர்த்தும் சான்றாக 'இந்தியா டுடே' இதழ் வெளியிட்ட முதல் இரண்டு இலக்கிய மலர்களுக்கு எதிராக 1995இல் எழுந்த தமிழ் இலக்கியப் படைப்பாளிகளின் உணர்வுகளைக் குறிப்பிடவேண்டும். "மலம் துடைக்க உதவும் காகிதம்" என அவர்கள் விமர்ச்சித்ததன் விளைவினை இந்தியா டுடே இதழின் மூன்றாம் இலக்கிய மலரின் (1995-96) தலையங்கத்தில் காண்கின்றோம்.

"இலக்கியம் என்பது ஒரு பண்பாட்டின்" ஒரு கலாச்சாரததின் ஒட்டு மொத்த வெளிப்பாடு அல்லது பிம்பம் என்றாலும் அரசியல் இயக்கங்களின் தாக்கங்கள் தமது பதிவுகளை ஏற்படுத்தாமல் இருக்க முடியாது. இந்த நூற்றாண்டின் முதல் பாதியில் திராவிட இயக்கத்தின் தாக்கம் பலமானது. அதன் விளைவாக அதற்கு முன்பு எப்போதும்

இல்லாத வகையில் தமிழ் அடையாளமும் தமிழ்ப் பண்பாடும் ஜனநாயகத்தன்மை பெற்றது(ன). அந்த(த்) தாக்கத்தை இந்த மலர் தனிப்பிரிவின் மூலம் பதிவு செய்கிறது. இந்தப் பகுதிக்கு(த்) தி.மு.க.-வின் தலைவர் மு. கருணாநிதி சிறுகதை எழுதியிருப்பது குறிப்பிட வேண்டிய விஷயம்" என்று குறிப்பிடும் இந்தியா டுடே (1995 - 96) மேலும் எழுதுகிறது. "ஜனநாயகமாக்கம் திராவிட இயக்கத்தினால் முழுமையாக(ச்) சாத்தியப்படவில்லை. அதன் அடுத்த கட்டமாக(க்) கிளம்பியிருக்கும் தலித் இலக்கியம் தனது கலகக் குரலால் இன்று தமிழகத்தில் பரவலான கவனத்தைப் பெறத் தொடங்கியிருக்கிறது."

தமிழிலக்கிய உலகில் திராவிட இயக்கத்தின் செல்வாக்கினைக் குறைத்து மதிப்பிடும் ஆராய்ச்சிப் போக்கிற்கும் 'மிகையாக மதிப்பிட முடியாது' என்று கூறும் இந்தியா டுடே இதழுக்கும் இடையிலான கால எல்லையில் தமிழாராய்ச்சி உலகத்தில் நடந்தவற்றை நாம் மீண்டும் மனப்பதிவு செய்தல் இங்கே அவசியமாகின்றது.

**1980** இல் வெளிவந்த கோ. கேசவனின் 'மண்ணும் மனித உறவுகளும்' நூல் சங்க இலக்கியம், பக்தி இலக்கியம் பற்றிய 4 கட்டுரைகளைக் கொண்ட நூலாக கைலாசபதியின் முன்னுரையுடன் வெளிவந்தது.

கல்விப்புலம் சார்ந்த தமிழாராய்ச்சி உலகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிய கேசவனின் இந்த நூல், அந்த உலகத்தைப் புறந்தள்ளாமல் அதற்குள்ளாகப் புதிய ஆராய்ச்சி வெளிகளை உருவாக்கியது. அடுத்து வந்த 'பள்ளு இலக்கியம் ஒரு சமூகவியல் பார்வை' என்ற அவரது நூலும் இதே பார்வையோடு அமைந்தது. க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோர் வளர்த்த இயக்கவியல் சார்ந்த வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையில்தான் கோ. கேசவனும் எழுதினார். ஆனால் பெரியாரையும் திராவிடக் கருத்தியலையும் அல்லது தமிழ் தேசியக் கருத்தியலையும் முற்றாக நிராகரிக்கும் போக்கு அவரிடம் காணப்படவில்லை. மேலும் அவரது பார்வை தமிழ் நாட்டு மரபுவழி மார்க்சீயர்களைவிடக் கூர்மையாக இருந்தது.

பாரதியைப் 'புரட்சியாளர்' என்ற தொ.மு.சி. ரகுநாதனின் கருத்துகளோடு க. கைலாசபதி போன்றோர் முழுமையாக

உடன்படவில்லை என்றாலும் கோ. கேசவன் ஆவணக்காப்பகச் சான்றுகளைப் புதிதாகத் தேடிக் கண்டறிந்து தொ.மு. சியின் கருத்தினை மறுத்தெழுதினார். பாரதியும் அரசியலும் (*1980*), Bharathi and Imperialism a documentation (*1980*), சோசலிசக் கருத்துகளும் பாரதியாரும் (*1987*) ஆகிய அவரது *3* நூல்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. "பாரதியின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைபாடு தொடர்ந்து இயங்காமற்போனது அவர் ஏற்றுக்கொண்ட வர்க்க நலன்களுக்குப் பொருத்தமுடைய வரலாற்று விசித்திரமாகும்" என்பது கோ. கேசவன் கண்ட முடிவாகும். இம்முடிவினைப் பின்னர் மார்க்சீய ஆய்வாளர் யாரும் மறுக்கமுற்படவில்லை என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

திராவிட இயக்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியதன் இலக்கிய உலக எதிர்விளைவுகள், புதுக்கவிதையின் செல்வாக்கு, சிறுகதை புதினத் துறைகளில் புதிய முகங்கள், ஆவேசம் மிகுந்த சிற்றிதழ்களின் விரைவான பெருக்கம் குறிப்பாக வானம்பாடிக் கூட்டத்தார். இருத்தலியல், அமைப்பியல், பிராய்டியம், பின் அமைப்பியல் ஆகியவற்றின் அறிமுகம், இவ்வகையான நோக்குநிலை ஆராய்ச்சிகள், கல்விப்புலத்து ஆராய்ச்சிகளில் இவற்றின் பாதிப்பு எனத் - தொடங்கிய மூன்றாம் காலப்பகுதி திராவிட இயக்க இலக்கியங்களின் மறுவாசிப்பு தலித் இயக்க, இலக்கிய எழுச்சிகள், பெண்ணிய எழுத்துக்கள், பின் நவீனத்துவம் என்று முடிவடைந்துள்ளது.

திராவிட இயக்கம் அதிகாரத்துக்கு வந்த நிகழ்ச்சியினை, 'மேல்தட்டு வர்க்கத்தின் கையிலிருந்த அதிகாரம் லும்பன் வர்க்கத்திற்குப் போய்ச் சேர்ந்தது' என்கிறார் மாலன். 'லும்பன்' என்ற மார்க்சீய விஞ்ஞானக் கலைச்சொல் பல பெருத்த விவாதங்களை ஏற்படுத்தக்கூடியது. இந்தக் கூற்றின் வழியாக வேறு வகையில் சொல்வதானால் ***திராவிட இயக்க எதிர்ப்புணர்வுத் தளம் தேசிய இயக்கத்திலிருந்து பொதுவுடைமைச் சார்பாளர்களின் கையிலே வந்ததனை*** உணரலாம். மற்றுமொரு புறமாக, திராவிடக் கருத்தியலுக்கு மாற்றாக மற்றொரு வேதாந்தக் கருத்தியல் தமிழ்ச் சிற்றிதழ் உலகத்திலும் புதுக்கவிதையிலும் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. க.நா.சு. சி.சு. செல்லப்பா, வெங்கட்சாமிநாதன், ஞானக்கூத்தன் ஆகிய பெயர்களை

இவர்களின் முன் வரிசையில் குறிப்பிடலாம். கசடதபற, பிரக்ஞை, யாத்ரா ஏற்கெனவே வந்து கொண்டிருந்த கணையாழி ஆகியவை இந்தப் போக்கின் குரல்களாக எதிரொலித்தன. இக்குரல் இன்னும் தமிழ் ஆராய்ச்சி உலகில் கேட்டுக் கொண்டே இருக்கின்றன என்பதற்கு அண்மையில் கணையாழி இதழில் வெளிவந்த 'யார் இந்தத் திருவள்ளுவர்' என்ற வெங்கட் சாமிநாதனின் கட்டுரையை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவற்றிலிருந்து சற்றே வேறுபட்டு மார்க்சீய சித்தாந்தச் சார்பில் வெளிவந்த படிகள், விழிகள், வைகை, பாலம், இலக்கிய வெளிவட்டம் ஆகிய இதழ்கள் சில புதிய முயற்சிகளைத் தமிழ் எழுத்துலகில் தொடங்கி வைத்தன. இலக்கியம் குறித்த ஆங்கில மொழிக் கட்டுரைகளின் தமிழாக்கங்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கன.

தேசிய இயக்கத்தின் சரிவுக்குப் பின்னரும்கூட நம்பிக்கையின் கதிர்கள் தங்களுக்குக் கிட்டவில்லை என்ற அறச்சீற்றத்தோடு சிறகு விரித்த வானம்பாடிகள் நெருக்கடிநிலை காலத்திற்குப் பிறகு திசைகள் பலவாகப் பிரிந்து சென்று விட்டன அவர்களிற் சிலர் கவிதை எழுதுவதனையே நிறுத்திக்கொண்டனர். வேறு சிலர் வெளிப்படையாகவே நெருக்கடி நிலையினை ஆதரித்தனர். இருபத்தைந்தாண்டுகள் கழித்து இன்று திரும்பிப் பார்க்கின்றபோது அவர்களில் பெரும்பாலோர் மிகக் குறைவான எண்ணிக்கையையுடைய சொல் வளையங்களுக்குள் சிக்கிக் கொண்டிருந்தனர் என்றே தோன்றுகிறது. தமிழ்ப் புதுக்கவிஞர்களின் சொல் தொகுதி இன்னமும்கூட இந்தச் சாபத்திலிருந்து விடுபட்டதாகத் தெரியவில்லை.

புதிய இசங்களை ஆய்வு அணுகுமுறைகளாகவும் ஆய்வுக் கருவிகளாகவும் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் பெரும்பாலோர் கல்விப்புலம் சார்ந்தவர்களாகவே இக்கால கட்டத்தில் இருந்தனர். இதனால் கல்விப்புலம் சார்ந்தவர், சாராதவர் என்ற இடைவெளி தமிழ் ஆராய்ச்சி உலகில் குறையத் தொடங்கியது. கல்விப்புல ஆய்வுகளில் அளவும் வகைமையும் எண்பதுகளில் பெரிய அளவில் விரிவு பெற்றன. பல்கலைக்கழகங்களில் புத்திலக்கியங்களுக்கும் ஆய்வுகளுக்கும் புதியதாகக் கிடைத்த மதிப்பு, ஆய்வேட்டுடன் கூடிய எம்ஃபில் பட்டப்படிப்பு அறிமுகம், சொந்தச் செலவில் புத்தகம் வெளியிடும் அளவு கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்பள வசதி பெற்றது ஆகியவை இப்பெருக்கத்துக்கான

துணைக் காரணிகளாகும். சமூகவியல், மானுடவியல், நாட்டார் வழக்காற்றியல், உளவியல், அமைப்பியல் எனப் பல்வேறு துறைகளைத் துணையாகக் கொண்டு தமிழாராய்ச்சியின் எல்லை விரிந்து கொண்டே செல்கின்றது. ஆனாலும்கூட, 'கலம்பகம் பார்த்தொரு கலம்பகம் தன்னையும் அந்தாதி பார்த்தொரு அந்தாதி தன்னையும்' என்பது போலவே இந்த ஆய்வுகளில் பெரும்பான்மையானவை அமைந்துள்ளன என்பது உண்மை. இருந்தபோதிலும் தமிழ் நாட்டின் எல்லா வருவாய் வட்டங்களிலும் யாரேனும் ஒரு தமிழாய்வு மாணவர் கடந்த பதினைந்தாண்டுகளில் கள ஆய்வு முயற்சி செய்துள்ளார் என்னுமளவிற்கு இந்த ஆய்வுகள் அளவிலே விரிவடைந்துள்ளன. குறிப்பாக இவற்றுள் ஒரு பிரிவு நாட்டார் வழக்காற்றியல் துறைக்கான தரவு வங்கியினை உருவாக்கியுள்ளது என்று உறுதியாகக் குறிப்பிடலாம்.

மூன்றாம் காலப்பகுதியின் மற்றொரு முக்கியமான நிகழ்வு, தமிழாராய்ச்சி நூல்களுக்குக் கிடைத்த நிறுவனப் பிற்புலமாகும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், கிறித்தவ இலக்கியச் சங்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், பிற நாட்டுப் பல்கலைக்கழகங்களின் வெளியீடுகள், தமிழ்நாட்டில் புதுநூல்களை வெளியிடத் தத்துவச் சார்புடன் தொடங்கப்பெற்ற புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் ஆகியவை இவ்வகையில் குறிப்பிடத்தகுந்தவை. இந் நிறுவன வெளியீடுகள் 'நூல்வெளியீட்டு முயற்சிகள் அப்படி ஒன்றும் அரிய செயலன்று' என்ற உணர்வினை எழுதுபவர்களுக்கு ஏற்படுத்தின.

*1930* முதலான முப்பது ஆண்டுகள் தமிழிலக்கிய காலம் பற்றிய ஆய்வுகளின் காலமென்றால் பின்வந்த *20* ஆண்டுகள் இலக்கியக் கோட்பாடு குறித்த விவாதங்களின் காலம் எனலாம்.

ஆராய்ச்சி இதழில் இடதுசாரிச் சிந்தனையாளர்களான பேராசிரியர் நா. வானமாமலை, வெ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோருடன் வெங்கட்சாமிநாதன் நடத்திய மோதல் ஈழத்தில் "*1956* முதல் *1963*: ஏழு ஆண்டு இலக்கிய வளர்ச்சி" என்னும் மு. தளைய சிங்கத்தின் நூலுக்கு ம்ாற்றாகக் க. கைலாசபதியின் எழுத்துக்கள், தமிழ் நாட்டில் க. நா. சு. குழுவினரை விமர்சித்துக் கைலாசபதி எழுதிய 'திறனாய்வுச்

சிக்கல்கள்' என்ற நூல் ஆகியவை குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்தவையாகும். இதனை அடுத்து, மரபுவழி மார்க்சியர்களின் மீது புதிய மார்க்சிய அணுகுமுறையோடு அ. மார்க்ஸ், கோ. கேசவன், பொ. வேல்சாமி ஆகியோர் முன்வைத்த விமர்சனங்கள் குறிப்பிடத்தக்கவை. இதன் விளைவாக, 'பொருளாதாரம் அடிக்கட்டுமானம், கலை வெளிப்பாடுகள் மேற்கட்டுமானம், என்ற மரபு வழி மார்க்சியப்பார்வை தமிழ் ஆராய்ச்சி உலகில் வலிமை இழந்து போனது. மரபு வழி மார்க்சியர்களில் புதிய விமர்சனங்களைப் பின்னர் ஏற்றுக் கொண்டவர் கா. சிவத்தம்பி மட்டுமே. இதன் தொடர்ச்சியாகப் பெரியாரும், திராவிட இயக்கப்படைப்பாளர்களும் 'மறு வாசிப்புக்கு' ஆட்படுத்தப்பட்டனர். பார்ப்பன எதிர்ப்பு, தமிழ்த் தேசியம் ஆகிய சொற்களுக்குப் புதிய மார்க்சியர்கள் இன்னும் விரிவான, ஆழமான பொருளைத் தரத் தொடங்கினர்.

எழுபதுகளிலும், எண்பதுகளிலும் தமிழ்ப்புனைகதை இலக்கியத்தில் காணப்பட்ட ஒரு போக்கினை இவ்விடத்தில் குறிப்பிடவேண்டும். அதுவரை தமிழ்ப் புனைகதைகளில் பேரிடம் பெற்றிருந்த "முகமில்லாத நகரவாசியான மனிதன்" காணாமல்போக, வட்டார அடையாளமும், சாதி அடையாளமும் கொண்ட மனிதர்களைச் சுற்றித் தமிழ்ப் புனைகதைகள் வெளிவரத் தொடங்கின. இலக்கியச் சிற்றிதழ்கள் இவ்வகையான புனைகதைகளுக்குப் பெருத்த வரவேற்பைத் தந்தன. இவ்வகையான புனைகதை ஆசிரியர்களில் பலர் உடனுக்குடன் கல்விப்புல ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இக்காலப் பகுதியில் புத்திலக்கிய ஆராய்ச்சியின் மீது குவிந்த அளவு கவனம் தமிழ் ஆராய்ச்சியின் ஏனைய பிரிவுகளில் காணப்படவில்லை.

எண்பதுகளின் கடைசிப்பகுதியில் பிறந்த தலித்தியப் பார்வை இன்னும் பெரிய வீச்சுடன் தமிழிலக்கியத்தை மறு வாசிப்புக்கு இட்டுச் சென்றது. 'பள்ளு இலக்கியம் ஓர் சமூகவியல் பார்வை' என்ற கேசவனின் நூல் வெளிவந்த ஏழுஎட்டு ஆண்டுகளுக்குள் நிலைமை தலைகீழாக மாறியது. சமூக, வரலாற்று ஆவணங்கள் என்று பதினைந்து ஆண்டுகளுக்கு முன் கொண்டாடப்பட்ட ராஜம் கிருஷ்ணனின் நாவல்கள் 'குலஸ்திரீ' வகை நாவல்கள் என்று ராஜ்கௌதமனால் விமர்ச்சிக்கப்பட்டன. 1975இல் வெளி வந்தபோது கொண்டாடப்பட்ட இந்திரா பார்த்தசாரதியின்

'குருதிப்புனல்' நாவல் 'அரை குறை பிராய்டியப் பார்வை' என விமர்சிக்கப்பட்டது. தலித் இலக்கியப் பார்வையின் கூர்மையடையச் செய்ததில் 'பறை', 'தோழமை', 'ஆய்வு' 'நிறப்பிரிகை ஆகிய இலக்கியச் சிற்றிதழ்களுக்குப் பெரும்பங்கு உண்டு. தலித் இலக்கிய ஆய்வுகளில் தேசிய இயக்கம் மட்டுமன்றி, திராவிட இயக்கம், பொதுவுடைமை இயக்கம், தமிழ்த் தேசியப் பார்வைகள் ஆகியனவும் மிகுந்த வேகமான தாக்குதலுக்குள்ளாயின.

ஜெயகாந்தன் திராவிட, கம்யூனிஸ்ட் கட்சி இளைஞர்களிடையே பெரும் கலகக்காரராகக் காட்சி தந்தார். கடைசியில் பார்ப்பானையும், பறையனையும் அர்த்த நாரீஸ்வரக் கோலமுறச் செய்து, 'ஜய ஜய சங்கரா' பாடி முடித்தார். இந்து மதத்தில் புதைந்துள்ள கர்மவினைக் கோட்பாட்டின் ஏறுவரிசையினை இவரிடம் காணமுடியும். பொதுவுடைமை இலக்கியங்களில், திராவிட இலக்கியங்களில், திராவிட இலக்கியம் வழங்கிய ***புனித ஏழைக்குச் சிவப்புச் சட்டை*** மாட்டிவிடப்பட்டது. சாதி அடையாளம் மறைக்கப்பட்டது, என்று குற்றம் சாட்டும் ராஜ்கௌதமன், தலித் இலக்கியம் சுகமான வாசிப்புக்கு உரியதல்ல. படிப்பவர்கள் சூடாகவேண்டும், முகம் சுளிக்க வேண்டும், படிப்பவனின் இதயமும் கண்களும் சிவக்க வேண்டும்" என்கிறார்.

தலித் இலக்கியப் பார்வையோடு வெளிவந்த ***'காலந்தோறும் நந்தன் கதை' (1989)*** என்ற உருத்திராபதியின் ஆய்வு நூல் இவ்வகையில் குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்தது ஆகும். தமிழிலக்கிய வரலாற்றை மறுவாசிப்புச் செய்யும் ராஜ்கௌதமனின் ***'அறம் அதிகாரம்'*** என்ற நூலும் இவ்வகையில் கவனத்துக்குரிய மற்றொரு ஆராய்ச்சி நூலாகும்.

தமிழாராய்ச்சி வரலாறு, பாடப்புத்தக வரலாறாகத் தமிழ் நாட்டில் தொடங்கப்படவில்லை. சமகாலத்தின் தேவையினைக் குறிக் கொண்டதாகவே இது அமைந்து இருக்கின்றது. எனவே தமிழிலக்கிய ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் தன் உணர்ச்சியோடோ, அல்லது தன்னை அறியாமலோ சமகாலத்து இயக்கம் ஒன்றின் பாதிப்பினைப் பெற்றவர்களாகத்தான் இருக்கின்றார்கள். அரசியல் அல்லது சமூகம் சார்ந்த முரண்பாடுகளைப் பழைய இலக்கியங்களைப்

பற்றிய ஆய்வுகளிலும் அவர்கள் எதிர்கொண்டு இருக்கிறார்கள். எனவே தேசிய, திராவிட, பொதுவுடைமை இயக்கங்கள் ஏதேனும் ஒன்றின் சார்பு நிலையோடுதான் தமிழாராய்ச்சி கடந்த 75 ஆண்டுகளாக நடைபெற்று வந்திருக்கிறது. கடந்த 15 ஆண்டுகளில் பெண்ணியம், தலித்தியம் ஆகிய புதுக்குரல்களும் தமிழாராய்ச்சியின் மீது தங்களின் கணிசமான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. சோவியத்தின் சரிவு மார்க்சிய அணுகுமுறையாளர்கள் சிலரைத் தமிழ்த் தேசியத்தின் பக்கம் சற்றே நகர்த்தியிருக்கிறது என்பதும் உண்மை. பாரதிதாசன் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் சங்க இலக்கியங்கள் புறக்கணிக்கப்பட்டபோது (1989) அ. மார்க்ஸ் எழுதிய கட்டுரை (மேலும்) இங்கே நினைவில் கொள்ளத் தக்கது. 'பன்முகத்தன்மை கொண்ட தமிழிலக்கியங்களும் அவற்றின் வரலாறும்' வகைமைகளும் முழுமையாக மறைக்கப்பட்டால் தமிழ்ப் பண்பாட்டின் பன்முகத் தன்மை மறைக்கப்படும். என்னும் எதிர்ப்புணர்வே இக்கட்டுரையின் தோற்றுவாயாகும். ஒற்றை முகம் கொண்டதாகத் தமிழ் இலக்கியங்கள் முன்னிறுத்தப்படுவது தமிழாராய்ச்சி உணர்வுகளைக் கொன்று தொலைப்பதற்கு ஒப்பாகும். இந்தத் தன்னுணர்ச்சியே இன்றைக்குத் தமிழாராய்ச்சி உலகின் தேவையும் ஆகும்.

குறுகிய கால எல்லைக்குள் இப்பெரிய தலைப்பின் எல்லாப் பரிமாணங்களையும் காட்ட இயலாது. கடந்த 150 ஆண்டுக்காலத் தமிழாராய்ச்சி உலகின் பெரும்பரப்பினைப் பழந்தமிழ் நூல்களின் மீள்கண்டுபிடிப்பும், பதிப்பாக்கமும், பழைய, புதிய உரைவிளக்கங்களும், அவற்றின் வரலாற்றுப் பிற்புலங்களைக் கண்டறிவதும் தமதாக்கிக் கொண்டன. இவற்றின் ஊடாகவே ஐரோப்பியர் தொடர்பால் விளைந்த புதிய இலக்கிய வகைகளும் பிறந்து வளர்ந்து ஆராய்ச்சிக்குக் கருப்பொருளாகி உள்ளன. ஆராய்ச்சிக்குரிய கருவிகளும் இக்காலப் பகுதியிலேதான் பெருகி உள்ளன. சமூக மாற்றத்துக்கான இயக்கங்களும் தமிழாராய்ச்சியின் போக்கைக் கணிசமாகத் தீர்மானித்துள்ளன. வன்மையான, கூர்மையான அறிவாராய்ச்சி முறைகளோடு தற்சார்பு நிறைந்த குரல்களும், கூக்குரல்களும் இக்காலப் பகுதியில் கேட்கின்றன. இவற்றின் ஊடாகத் தமிழாராய்ச்சி நிகழ்த்தியோர் நூற்றுக்கணக்கான பேர் இருப்பினும் இந்த ஆய்வாளர்களில் சிலர் தம்முடைய விரிந்த வாசிப்புத்

திறத்தினாலும், சோர்வில்லாத முயற்சிகளாலும் தனி நெறியாளர்களாக நம் கண்ணுக்குப் படுகின்றனர். அவர்களில் நால்வர் பெயரினை மட்டும் குறிப்பிட்டு இவ்வுரையினை முடிப்பது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

சேதுபதிச் சிற்றரசர் ஆதரவில் வளர்ந்த ஓர் எளிய குடும்பத்தில் பிறந்த *மு. இராகவையங்கார்* நிறுவனம் சார்ந்த கல்வி பெறாமல் தன் தந்தையாரிடமே இலக்கியக் கல்வி பெற்றவர். ஆங்கிலக் கல்வியோ வடமொழிப் பயிற்சியோ பெறும் வாய்ப்பு அவருக்குக் கிட்டவில்லை. தமிழுணர் வாளரும், புதிய முயற்சிகளில் ஆர்வமுடையவருமான பாலவநத்தம் சமீன்தார் பொன். பாண்டித்துரைத் தேவர் 1901 இல் தாம் தொடங்கிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இவரை ஆசிரியராகப் பணியமர்த்தினார்.

1904-இல் 'செந்தமிழ்' இதழில் எழுதத் தொடங்கிய ஐயங்காரின் தமிழாய்வு முயற்சிகள் 1954 வரை இடையீடில்லாமல் நடந்தேறின. இலக்கிய இலக்கணப் புலமையோடு நிகண்டுகள், பழைய உரைகள், சமயத் தத்துவம், ஓலைச் சுவடிப் பயிற்சி, கல்வெட்டுப் பயிற்சி, பாடவேறுபாடு காணுதல், பதிப்புப் பணி ஆகிய துறைகளிலும் அவர் பெற்றிருந்த தேர்ச்சி தமிழாராய்ச்சிக்கு உரமூட்டுவதாயிற்று. உ.வே.சா. வின் பதிப்பு முன்னுரைகள் தவிர அவருக்கு உணர்வூட்டும் எழுத்துகள் அக்காலத்தில் தமிழில் இல்லை என்பதனையும் நாம் நினைவிலே கொள்ள வேண்டும்.

தமிழாராய்ச்சியினைப் புத்தகங்களுக்கு வெளியே களஆய்வுகள், மக்களின் வழக்காறுகளைக் காணுதல் என எடுத்துவந்து அவர் தம் சாதனைகளை நிகழ்த்திக் காட்டினார். போக்குவரத்து வசதிகள் குறைவான அக்காலத்தில்கூட அவருக்குத் தமிழ் நாட்டின் நிலவரைவியலில் போதிய பயிற்சியிருந்தது.

1904இல் எழுதப்பெற்ற 'வேளிர் வரலாறு', 1912-இல் எழுதப்பெற்ற "தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி" 1927-இல் பேசப்பெற்ற 'இலக்கிய சாசன வழக்காறுகள்' 1942-இல் வெளிவந்த 'சாசனத் தமிழ்க் கவி சரிதம்' ஆகிய நூல்களில் அவர் வெளியிட்ட ஆராய்ச்சி முடிவுகள் (ஒன்றிரண்டைத் தவிர) பின்னர்க் கிடைத்த சான்றுகளால் உறுதிப்பட்டுள்ளனவே தவிர மறுக்கப்படவில்லை. சார்பு

நிலைகள் காரணமாகப் பெருந்திரிபுகளைச் சந்தித்த தமிழ்ப் புலவர் கால ஆராய்ச்சிகளுக்கு நடுவில் அவரது 'ஆழ்வார்கள் கால நிலை' ஆராய்ச்சி நேர்மைக்கு எடுத்துக் காட்டாயிற்று. பிறர் கருத்துகளை மறுத்து அவர் எழுதிய 'சேரன் செங்குட்டுவன்', 'சேரவேந்தர் தாய வழக்கு' ஆகிய நூல்கள் நட்பிலக்கணந் தவறாத முறையில் எழுதப்பட்டன. ஆராய்ச்சிக்கான தரவு சேகரிப்பு எவ்வாறமைய வேண்டும் என்பதற்கு அவரது 'பத்தினி வணக்கம்' கட்டுரை ஓர் எடுத்துக்காட்டாகும்.

16 ஆம் நூற்றாண்டு வரையிலான தமிழிலக்கியங்களை ஆராயப் புகுவோருக்கு அவரது 'பெருந்தொகை' தொகுப்பு நூல் ஒரு கலங்கரை விளக்காகும். தமிழாராய்ச்சிக்கு உதவும் சொல், தொடர், கருத்து ஆகியவற்றினைத் தொகுத்துத் தரும் கருவூலமாகிய அந்நூல் நிகண்டு, அகராதி, பொருள் விளக்க அகராதி, சொல் ஒருங்கிசைவு (Concordance) ஆகியவற்றின் எல்லாப் பண்புகளையும் கொண்டதாகும். சுருக்கமாகச் சொல்வதானால் தமிழாராய்ச்சி உலகத்தில் அவர் அக்கிரகாரத்து அதிசயமனிதர்.

அருவக்குப் பின்வந்த சிறந்த ஆராய்ச்சியாளர்களான வையாபுரிப்பிள்ளை, மயிலை சீனி. வேங்கடசாமி, ஔவை. சு.துரைசாமி பிள்ளை, மா. இராசமாணிக்கனார், நா.வானமாமலை ஆகியோரிடம் அவரது பாதிப்பு நிறையவே உண்டு.

திருநெல்வேலியைச் சார்ந்த வழக்கறிஞராகிய பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை தமிழ்மொழி ஆராய்ச்சியில் இளமையிலேயே ஈடுபாடு உடையவர். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் மறைமலையடிகளின் மாணாக்கர். 1926 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 'தமிழ்ப் பேரகராதி' ஆக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டு, 1936 வரையில் பணியாற்றி, அதன்பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் 10 ஆண்டுக்காலம் பணியாற்றினார். ஆங்கிலம் கற்ற வழக்கறிஞர்கள் பெருவாரியாகத் தமிழ் ஆராய்ச்சி உலகத்தில் புகுந்த காலம் அது. நிகண்டு, இலக்கணம், இலக்கியம், காப்பியம், நாடகம், சிற்றிலக்கியம் என 25 ஆண்டுக்காலத்தில் (1925-1950) 39 நூல்களின் பதிப்பாசிரியராக விளங்கியவர். 13 கட்டுரைத் தொகுப்பு நூல்களின் ஆசிரியர். இரண்டு ஆங்கில நூல்கள் உட்பட 6 தனி நூல்கள் எழுதியவர்.

தமிழாராய்ச்சி உலகத்தில் அவரளவு பேசப்பெற்றவரும் இல்லை, ஏசப்பெற்றவரும்இல்லை. ஆங்கில இலக்கிய நெறிகளைத் தன்னுடைய ஆய்வுகளுக்குப் பயன்படுத்திப் புதிய நெறி காட்டியவர் அவர். குறிப்பாக, உலகின் பிறமொழி இலக்கியங்களின் தோற்றம் பற்றி ஆழமும், விரிவும் நிறைந்த கட்டுரைகளை (இலக்கிய உதயம்) எழுதியவர். பேராசிரியரின் பெரும்பாலான தனி நூல்களும், கட்டுரைகளும் (அவ்வப்போது செந்தமிழ் இதழில் வெளிவந்தாலும்) 1945க்குப் பின்னரே நூல் வடிவம் பெற்றன.

இந்திய தேசியத்துக்கு மாற்றாகத் தமிழ் இனவுணர்வு பெருகி வந்த காலத்தில் வையாபுரிப்பிள்ளையின் கால ஆராய்ச்சிகளும், சொல்லாராய்ச்சிகளும் தமிழ் உணர்வாளர்களுக்குப் பெரிய சவால்களாக அமைந்தன. வடமொழி, இலக்கியப் பரப்பின் மீதும் 'இந்து' என்னும் கருத்தாக்கத்தின் மீதும் அவர் பெரும் காதல் கொண்டிருந்தார். "மனுஸ்மிருதி பாரத நாடு முழுவதிலும் உள்ள இந்து சமயத்தினர் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதே..." என்பதனையே திருக்குறள் விளக்கத்துக்கு அவர் முன் நிபந்தனையாக வைக்கிறார். அந்தி, ஆணி, கழுத்து, காடு, காமம், தாயம், திரு, தெய்வம் முதலிய சொற்களுக்குக்கூட அவர் வடமொழி வேர்களைத் தேடிக் காட்ட முற்பட்டார். 'கழகம்' என்ற சொல் கூட 'க்லஹ 'என்ற வடசொல்லின் திரிபு என்பார் அவர். ஆனாலும் ஆங்கில அகராதிகளையும் மொழி இயல்புகளையும் கற்றுத் தேர்ந்த அவரது ஆராய்ச்சி முறையியல் பிற்கால ஆராய்ச்சியாளர் களுக்கு வழிகாட்டுவதாயிற்று.

'தமிழில் இருந்து பிறந்த மொழியே மலையாளம்' என்ற கருத்தினை அழுத்தம் திருத்தமாக முதலில் கூறியவர் அவரே. வையாபுரிப்பிள்ளையின் மற்றொரு பெரும்பணி தமிழாராய்ச்சிக்கான விரிந்த பெரும்பரப்பினை அவர் தேர்ந்து கொண்டதாகும். 'தொல்காப்பியப் பொருளதிகாரம்' முதல் 19 ஆம் நூற்றாண்டில் பிறந்த 'கலியுகப்பெருங்காவியம்' வரை அவர்ஆராய்ந்தார். 'ரவிக்குட்டிப்பிள்ளை போர்' போன்ற கதைப்பாடல்களும் அவரது ஆய்வுகளுக்கு விலக்கில்லாமல் இருந்தன.

தமிழாராய்ச்சிக்குப் பிறமொழி இலக்கண இலக்கிய அறிவும் விரிந்த வாசிப்பும் அடிப்படைக் கருவிகளாகும் என

அவர் நிறுவிக் காட்டினார். மறைமலையடிகளையும், கா.சு. பிள்ளையினையும் மறுத்து மா. இராசமாணிக்கனார் '9-ஆம் நூற்றாண்டே மாணிக்கவாசகரின் காலம்' என முடிவு கட்டியதில் வையாபுரிப்பிள்ளையின் ஆராய்ச்சி முறையியலுக்கு ஓர் பங்கு உண்டு என்பதனை நாம் மறுப்பதற்கில்லை. பின்வந்த ஆய்வுகள் அவரது முடிவுகளை வன்மையாக மறுத்துச் சென்றுள்ளன. இருப்பினும் அவரது ஆராய்ச்சி முறையியல் மறுக்கப்பட முடியாதது.

தமிழ் ஆராய்ச்சி உலகத்தால் நூற்றாண்டு விழா நேரத்திலும்கூடப் பெரிதும் அறியப்படாமல் போனவர். மயிலை சீனி. வேங்கடசாமி பள்ளி ஆசிரியராகவும், ஓவிய ஆசிரியராகவும் தன் எளிய வாழ்க்கையினைத் தொடங்கியவர் அவர். 1923 இல் 'லட்சுமி' என்னும் இதழில் எழுதத் தொடங்கிய அவர் 'குடி அரசு' இதழின் தொடக்க காலத்தில் 'வைட்டமின்கள்', 'பலநாட்டுத் தேசிய கீதங்கள்' ஆகிய தலைப்புகளில் அரசியல், இலக்கியம் சாராத கட்டுரைகள் எழுதி வந்துள்ளார். பெரியாரின் உள்வட்டத்து நண்பரான அவருக்கு ஓவியம், சிற்பம், கல்வெட்டு ஆகிய துறைகளில் இயல்பான நாட்டமிருந்தது. திராவிட இயக்கத்தின் கருத்தியல் செல்வாக்கால் வேதமல்லா மரபு சார்ந்த பண்பாட்டினைப் பற்றிய அவரது தேடல் ஆழமாக இருந்தது. 1938 இல் 'கிறித்தவமும் தமிழும்' 1940-இல் 'பௌத்தமும் தமிழும்' 1954-இல் 'சமணமும் தமிழும்' ஆகிய தமிழ் நூல்கள் 1959-இல் 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' 'துளு நாட்டு வரலாறு', 'கொங்கு நாட்டு வரலாறு' ஆகிய அவரது நூல்கள் இன்றளவும் தமிழகச் சமூகப் பண்பாட்டு வரலாற்றை ஆராய்வோர் நடந்து செல்லவேண்டிய வழித்தடங்களாகும். வரலாற்று உலகில் தமிழ்ப் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்து காட்டியதில் அவரது 'பழங்காலத் தமிழர் வணிகம்' 'அஞ்சிறைத்தும்பி', 'இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்' ஆகிய நூல்களுக்குத் தனித்த இடம் உண்டு.

தனக்கு முன்னும், பின்னுமான ஆராய்ச்சியாளர்களைப் போல நிறுவனப் பிற்புலம் ஏதும் அவருக்குக் கிடைக்கவில்லை என்பது தமிழாராய்ச்சியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும். தனிமனித முயற்சியும் நட்பும் மட்டுமே துணையாகக் கொண்டு அவர் கள ஆய்வு செய்து தமிழ் நாட்டின் வேதமல்லா மரபுகளை மீண்டும் ஒருமுறை வாசித்துக் காட்டினார்,

நெல்லை மாவட்டம் நான்குநேரியில் பிறந்து பேராசிரியர் நா. வானமாமலை கல்விப்புலம் சார்ந்தும் அதன் வெளியே நின்றும் தமிழாராய்ச்சி செய்தவர். நாற்பது வயதுக்குப் பின்னர் தீவிர அரசியல் பணிகளிலிருந்து சற்றே ஒதுங்கி, நாட்டார் வழக்காற்றியல் என்னும் புலத்தினைத் தனியொரு கல்விப்புலமாக வடித்தெடுத்தவர் அவரே ஆவர். அத்துறையில் 10 கதைப்பாடல்களைப் பதிப்பித்ததோடு இரண்டு ஆங்கில ஆய்வு நூல்களையும் எழுதியவர்.

விஞ்ஞான மொழிபெயர்ப்பு நூல்கள் (6), குழந்தை நூல்கள் (2), வரலாற்று நூல்கள் (4), தத்துவ நூல்கள் (6), பண்பாடு குறித்த நூல்கள் (2), இலக்கிய நூல்கள் (3), என 23 நூல்களையும் 50க்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் மார்க்சியத்தைக் கருவியாகக் கொண்டு படைத்தவர் அவர்.

1967இல் பல்கலைக்கழக எல்லைகளுக்கு வெளியில் நின்று 'நெல்லை ஆய்வுக்குழு' என்னும் ஆராய்ச்சிக் குழுவினை நிறுவி அறிவியல் நோக்குடன் கூடிய தமிழாராய்ச்சி முயற்சிகளை இயக்கப்படுத்தியது அவரது சாதனையாகும். 1969இல் ஆராய்ச்சிக்கென அவர் தொடங்கிய 'ஆராய்ச்சி' என்னும் இதழ் இன்றும் தரமான தமிழாராய்ச்சிக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகிறது. ஆராய்ச்சியாளராக மட்டுமல்லாமல் ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் நிறுவனமாகவும் அவரது பணிகளின் எல்லை அமைந்ததால் அவரது மறைவுக்குப் பின்னரும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் 'இலக்கியக் கலைநிதி' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

"தமிழில் மார்க்சிய இலக்கிய விமர்சனத்தின் அடுத்தகட்டம் நா. வானமாமலை, நெல்லை ஆய்வுக்குழு, ஈழத்திலிருந்து கொண்டே தமிழ்ச் சூழலில் குறிப்பாகக் கல்விச் சூழலில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்திய பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோருடன் தொடங்குகிறது. தாராளவாத, மனிதாபிமானப் பின்னணியிலிருந்து கொஞ்சம் விலகிச் சற்றே கறாரான ஆய்வு முறையியலை இவர்கள் பின்பற்றினர். மானிடவியல் சமூகவியல் துறைகளையும் உள்ளடக்கி இலக்கியத்தின் சமூகப் பின்னணியைச் சுட்ட இவர்கள் முன்வந்தனர். பண்டைய இலக்கியங்களின் சமூக வேர்கள் குறித்து மார்க்சியமல்லாத அணுகல் முறைகளால் சொல்ல இயலாத சில அம்சங்களை இவர்கள் சொல்ல

நேர்ந்ததன் விளைவாகத் தமிழ் அறிவுச் சூழலில் இவர்கள் ஏற்படுத்திய தாக்கம் பாரதூரமானது" ('மேலும்' 15: 1992) என்று மதிப்பிடுகிறார் அ. மார்க்ஸ்.

தமிழாராயச்சியின் வளர்ச்சியின் போக்குகளைத் தீர்மானித்தவர்களாக மேற்கூறிய நால்வரையுமே நான் கருதுகிறேன். ஏனைய ஆராய்ச்சியாளர்களைக் குறைத்து மதிப்பிடுவதோ, புறந்தள்ளுவதோ இந்தப் பட்டியலுக்கு நோக்கமில்லை. நிகழ்காலத் தமிழாராய்ச்சியாளர்கள் அனைவரும் இந்த நால்வரின் யாரேனும் ஒருவரின் ஆராய்ச்சி நெறிக்கு நேரிடையாகவே மறைமுகமாகவோ ஆட்பட்டவர்கள். எடுத்துக்காட்டாகச் சொல்வதானால் வையாப்புரிப்பிள்ளையின் மொழியியல் ஆய்வுநெறிக்குத் தெ.பொ.மீ.யும் வ.ஐ. சுப்பிரமணியமும் ஆட்பட்டவர்களே. சமண பௌத்த கிறித்துவ இலக்கிய வரலாற்று ஆய்வுகளும், தமிழ்க் கலைகள் குறித்த ஆய்வுகளும் நிகழ்த்துவோர் மயிலை. சீனி. வேங்கடசாமியினை அத்துணை எளிதாகத் தள்ளிவிடல் இயலாது. ஔவை சு. துரைசாமிபிள்ளை, மா. இராச மாணிக்கனார், வ.சு.ப.மா போன்றோர் தம் ஆய்வு நெறிக்கு மு. இராகவையங்கார், வையாபுரிப்பிள்ளை ஆகியோர் ஆய்வியல் நெறிமுறைகளுக்குக் கடன்பட்டவரே.

சமூகவியல், மானுடவியல் சார்ந்த தமிழியல் ஆய்வுகளை நிகழ்த்தியவர்களும் நிகழ்த்துவோர்களும் பேராசிரியர் நா.வா.வின் ஆராய்ச்சி நெறிமுறைகளைப் படித்தே தீரவேண்டும்.

இவ்வகையிலேதான் தமிழாராய்ச்சி உலகத்தின் தனி நெறியாளர்கள் என இவர்கள் நால்வரையும் குறிப்பிடமுடிகிறது.

தமிழாராய்ச்சி உலகத்தின் அண்மைக்காலப் போக்குகளை வடிவமைக்கும் சில இயங்களை அடையாளம் காட்டி இப்பொழிவினை நிறைவு செய்யலாம். 80களின் தொடக்கம் வரை மார்க்சீய இலக்கிய ஆய்வுக் கோட்பாடுகள் தமிழாராய்ச்சியின் மீது கணிசமாகச் செல்வாக்குச் செலுத்திவந்தன. க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோர் பின்பற்றிய 'அடித்தளம் - மேற்கட்டுமானம்' என்ற சமூகம் - இலக்கியம் பற்றிய பார்வைகள் பின்னர் எளிமையான வாய்பாடுகளாக மதிப்பிடப்பட்டன. இது குறித்து எழுதும்

கா. சிவத்தம்பி தன்குப் பின்வந்த 'மார்க்சீய இலக்கிய விமர்சனம்' என்ற நூலாசிரியர் கோ. கேசவனைப் பின்வருமாறு மதிப்பிடுகிறார்.

"இலக்கிய வரலாற்றுத் திறன் மிக்குடைய கோ. கேசவன் போன்ற ஓர் ஆசிரியராலேயே (அவர் தம் பள்ளு இலக்கியத்தில்) இந்தக் 'கண்ணாடி பிரதிபலிப்பு'க் கோட்பாட்டின் மிகைப் பிடியிலிருந்து விடுபட முடியவில்லை. அறுபதுகளின் ஆரம்பக் கட்டங்களில் இலக்கியத்தின் சமூக இணைப்புகளுக்கு முக்கிய அழுத்தம் கொடுத்த (இந்நூலாசிரியர் உட்பட) சில விமர்சகர்கள், வரலாற்று ஆசிரியர்களினது போக்கே இதற்கான காரணமாக அமைந்தது என்று கொள்ளலாம் போலத் தெரிகிறது. அறுபதுகளுக்குப் பின் வந்த விமரிசனத்தில் ஆக்கபூர்வமான முன்னேற்றமில்லாது போனமையால் இது (சமூக இணைப்பு-கண்ணாடி பிரதிபலிப்பு) ஒரு வாய்பாடாக்கப்பட்டு விட்டது. இப்பொழுது இந்த அமிசத்தைக் கொண்டு மார்க்சிஸ்டுகள் அல்லாதவர்களும் மார்க்சிய விரோதிகளும் இந்த விமர்சனங்களையும் மார்க்சியத்தையும் குத்திப் பேசி வசைகூறும் ஒரு நிலை காணப்படுகிறது". (பக்.37).

மிக அண்மைக் காலமாகத் தமிழிலக்கிய ஆராய்ச்சியின் மீது செல்வாக்குச் செலுத்திவரும் போட்பாடுகள் பெண்ணியம், தலித்தியம், பின் நவீனத்துவம் ஆகியவையாகும். "சென்ற ஆறேழு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள தலித் இலக்கிய இயக்கமும், பின் நவீனத்துவ விமரிசனமுறையும் கேசவனுக்குச் சவாலாக அமைந்து அவரை நெருக்கடிக்குள் தள்ளிவிட்டனவோ என்று தோன்றுகிறது". (காலச்சுவடு 23:39) என்கிறார் ஆ.இரா. வேங்கடாசலபதி; 'இலக்கிய விமர்சனம்', 'ஒரு மார்க்சீயப் பார்வை' 'மார்க்சியத் திறனாய்வுச் சிக்கல்கள்' ஆகிய கேசவனின் இரண்டு நூல்களின் மீதான இந்த விமர்சனத்தைப் பெரும்பாலான மார்க்சீய இலக்கிய விமரிசகர்கள் மீதும் வைக்க முடியும். இது ஒருபுறமாக, மறுபுறத்தில் பின்நவீனத்துவம் தமிழ்ப் பண்பாட்டின் பன்முகத்தன்மையினை மீண்டும் மீண்டும் வலி யுறுத்தி நிற்கின்றது. அதன் விளைவாக ஆராய்ச்சி உலகப் புனிதங்கள் ஆகக் கருதப்பட்ட சில உடைபடுகின்றன. மறுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட மனிதர்களும், அவர்களின் படைப்புகளும் ஆராய்ச்சி வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன. புதுமைப்பித்தன் மட்டுமல்லாது மூவலூர்

இராமாமிர்தம் அம்மையாரின் படைப்புகளும் மறுவாசிப்பு செய்யப்படுகின்றன.

இராமாயணம், மகாபாரதம் போன்ற பெருங் கதையாடல்களை (grand narratives) நிராகரித்த பெரியாரின் குரல் தமிழாராய்ச்சி உலகத்தில் புதிய கவனிப்பினைப் பெறுகிறது. தமிழ்ப் பண்பாட்டின் பன்முகத்தன்மையை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதன் வழியாகத் தமிழாராய்ச்சி உலகம் சனநாயகப்படுத்தப்படுகின்றது. இதுபோன்ற நம்பிக்கைக் கதிர்கள் தமிழாராய்ச்சி உலகத்தின்மீது தொடர்ந்து படியவேண்டும் என்பதே நமது தேவையும் ஆகும்.